Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
8-14.08.1993
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 11




சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

தலைநகரில் ஆடிவேல் உற்சவம்
நடந்துமுடிந்திருக்கிறது.
நாடெங்கும்
திருவிழாக்கால உற்சவம்.
தேசத்தை இருட்டாக்கியுள்ள
யுத்த மேகங்கள் மத்தியிலும்
ஆண்டவன் சந்நிதி தேடி
பக்தர்கள் படையெடுக்கின்றனர்.

ஆண்டவர்களும்-இப்போது ஆள்பவர்களும்
அளத்துடிப்பவர்களும்
உருவாக்கியுள்ள சோகங்களை
ஆண்டவனிடம் மட்டும்தான்
சொல்ல முடியும்.
அநாதரவான மக்களுக்கு வேறு கதி என்ன?

■

வடக்கே வாய்திறக்கவே முடியாது.
சொந்தக்கரங்களே
விழிகளைக் கீறி-வாய்களை சாத்தி
தமது சொந்த விருப்பங்களை
மக்களின் மீது திணிக்கும் அவலம்.

கிழக்கே-
அமைதியும்-பதட்டமும்
இருளும்-ஒளியும் போல்
மாறிமாறி வந்து பயமுறுத்தும் கொடுமை.

தெற்கே-
தொடரும் கைதுகள்-அதனால்
சூழும் துயரங்கள்.

மலையக மண்ணிலும்
பிரச்சனைகள்
இல்லாமல் இல்லை.

பிரச்சனைகள் பெரிதாகிக்
கொண்டிருக்கின்றன.
தீர்வுகள் மட்டும்
தொலைதூரத்தில் கூட முகம் காட்டுவதாகக் கூட
இதுவரை ஒரு அறிகுறியும் இல்லை.

தமிழர்களும்-முஸ்லிம்களும்
அகதிகளாய்
அவலம் சுமக்கையில்
சிறைகளிலும்-வதை முகாம்களிலும்
மனிதர் அவலக் குரல்கள்.
காற்றைக்கூட ஈரப்படுத்துகையில்
இரும்புச் செவிகள் மட்டும்
திறக்கவே மறுக்கின்றன.

யாரும் விட்டுக் கொடுக்க தயாரில்லை.
புலிகளும்-அரசும்
பிற தமிழர் அமைப்புக்களும்
மோதல் முனை துறந்து
பேச்சுக்களத்திற்கு வருவதெப்போது?
எல்லோரும் அதைத்தான் கேட்கிறார்கள்.
சம்பந்தப்பட்டவர்களோ
ஒருவர் மீது ஒருவர் குற்றம் சொல்கிறார்கள்.
தீர்வுகள் மட்டும் எவரிடமும் இல்லை.

எரிபொருளுக்கும்-பிறபொருளுக்கும்
அரசோடு பேரம் நடத்துகிறார்கள் புலிகள்.
போக்குவரத்துப் பிரச்சனையில் மட்டும்
தாமதம் காட்டுகிறார்கள்.

புலிகளோடு போய்
பிரிகேடியர் சந்தோசமாய் பேசுகிறார்.
அணிவகுப்பையும் ஏற்று மகிழ்கிறார்.
புலிகள் என் சந்தேகத்தில்
கைதானவர்கள் விடயத்திலும் கருணை
காட்டலாமே.

ஒரு கலாவைத் தேடி
ஒன்பது கலாவை கைது செய்வதும்
அனுதாபத்தையல்ல அதிருப்தியைத்தான்
அரசுக்கு சம்பாதித்துக் கொடுக்கும்.
சம்பந்தப்பட்டவர்கள் சற்று யோசிப்பது
நல்லது.

ஆக மொத்தத்தில்
அரசும் சரி, புலிகளும் சரி
ஈ.பி.டி.பியும் மற்ற தமிழர் அமைப்புக்களும் சரி
மக்களை வென்றெடுப்பதைப் பற்றி
சிந்திக்க வேண்டும். எனவே-
மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.
அதனால்
தீர்வுகளை காணும் பாதையில்
நம்பிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

கோசங்கள் கேட்டு அலுத்தாயிற்று.
வேட்போசைகளுக்கு
கைதட்டிப்பார்த்து களைத்தாயிற்று.
இனப் பெருமிதங்கள் பேசி சலித்தாயிற்று.
இப்போது தேவை,
எரியும் இனப்பிரச்சனைக்கு
ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வும்,
அதனைச் செயல்படும்
துணிச்சலான முயற்சிகளுமே.
அவ்வாறானவர்களின் பின்
நாடு முழுவதும் திரண்டு நிற்கும்.
செய்வார்களா.
செவி சாய்ப்பார்களா?
இறங்கிவருவார்களா?
பார்க்கலாம்.

அன்புடன்
ஆசிரியர்.

---

**தினமுரசு**
**போன்: 820265**

## கவிதைப் போட்டி இல-8

*வெற்றிபெற்ற கவிதை ஒன்றும்- வியக்கவைத்தவற்றுள் சிலவும்*

### பரிசுபெறும் கவிதை

**மனிதம் மரணிக்கிறது**

விஞ்ஞான வேகம்
முன்னோக்கிச் செல்ல
மனிதாபிமானம் மட்டும்
பின்நோக்கிச் செல்கிறது!

**தயாளினி பரமசாமி**
**16/17, பண்டாரநாயக்க மாவத்தை,**
**கழுபோவில,**
**தெஹிவளை.**

மரித்துப்போன
மனிதாபிமானத்தை
புதைப்பதற்கு
ஒரு ஒத்திகையா?...
**எம். நியாஸ்**
**உலப்பனை.**

வறுமை கதவை
தட்டும் போது
அன்பு
ஜன்னல் வழியே
வெளியே!
ஓடி விடுகிறது.
**சஷீ நிரஞ்சன்.**


இது வாடிக்கைதான்
வண்ணமலரே
இது வாடிக்கைதான்
வாய் பார்த்து நிற்காதே
வாளெடு.
**எஸ். சிவசங்கரி**
**மண்டூர்.**

**கலையட்டும்**
பிஞ்சுமனம்
ஏங்குது-ஓர்
நஞ்சுமனம்
கலையும்
வரைக்கும்
**பிறேமலதா**
**நாவலப்பிட்டி**

**தாகம்!**
மரகதம்,
"மரம் நாட்டுவிழா
எதற்"கென்று
கேட்பாயே!
இப்போது புரிகிறதா'
எவரோ
நாட்டியமரம்
எங்கள் தாகத்தைத்
தீர்க்கிறதே!
**செல்வி:கு. பாரதி**
**மட்டக்களப்பு**

**சோதனை வேதனை**
இறைவா! என்ன சோதனை
குருத்தோலை காத்திருக்க
காவோலை கவ்விக்கொண்டு
சென்றதாம்
அதுதான் வேதனை
**செல்வி: சுபாஷினிதேவி வேலாயுதம்**
**கொழும்பு-07**

## கவிதைப் போட்டி இல-11



விழிகள் விரிகிறதல்லவா வியப்பால். அந்த வியப்போடு வார்த்தைகளைக் கோர்த்து மடலில் பதிவு செய்யுங்கள். தபாலட்டை போதும். அனுப்பவேண்டிய கடைசித்திகதி: 13.08.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:11
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**தா(த்)தா**
தாகத்திற்கு இளநீர்
கிடைத்ததினால்-சிறியவள்
எனை மறந்தாயோ-தாத்தா
எனக்கும் கொஞ்சம்
தா(த்)தா
க.சந்திரகலா.

**சந்தேகம்**
பொறு!
விமானங்களால்
விதவையாக்கப்பட்ட
தேசத்தில்
தென்னை கூட
துரோகம்
செய்துவிடும்!
சரிபார்த்து விட்டுத்
தருகின்றேன்.
**மாலை. வரோதயன்.**
**கொழும்பு-12.**



**அடக்கியாள்தல்**
வல்லரசுகளே
வையகத்தை
ஆள்வதால்
மனிதமே
மரண
அவஸ்தையில்
**யாழூர் ர. ராஜி**
**தர்கா நகர்.**

**வரம் கேட்கிறது**
வல்லரசிடம்
ஒரு
வளர்முகநாடு
வரம் கேட்கிறது?
**திருமதி- மணிமேகலை வரதராஜன்**
**கல்குடா.**

**இன்றைய நிலை**
கொடிது...கொடிது...
இளமையில் வறுமை
இளமயிலா! இவ்
இளநீர்தான் எமது
இன்றைய பொழுது!
**ஆதவன்**
**கலஹா.**

**வேறம்மா!**
தந்தையும்
மகளுமென்றாலும்
வாயிறும் வயிறும்
வேறு கண்ணே!
**ஹரீரா அனஸ்**
**அக்குறணை.**

**அகதி**
ஓ!குழந்தாய்!
நீ குரும்பைக்கா?
ஏங்குகின்றாய்
எழுந்து செல்.
இரக்கமற்ற இந்த
அரக்க சமூகம்
குரும்பை மாத்திரமல்ல
குவளை நீரும்-
தரப்போவதில்லை.
ஏனெனில்-நீ
ஓர் அகதி.
**மினியூவன்னா**
**ஏரூர்.**

கல்லுக்குள்ளும்
ஈரம் இருக்கும்.
அது-
இந்த நெஞ்சுக்குள்
இல்லை போலும்.
**எஸ். ராஜ்கமல்.**
**திஹாரிய.**

தனக்கு(ப்)
பின்னர்தான்
மற்றவர்கள்
உலகம் எப்படி......?
**கே. எம். அப்துஸ்**
**மாத்தளை.**

இவர் உறிஞ்சுவது
இளநீரை மட்டுமல்ல,
இப் பிஞ்சுள்ளத்தின்
வேதனை பெருமூச்சையும்
சேர்த்தே!
**திவாகரன்**
**பனாவத்தை.**

**இளமை**
ஆம்
குழந்தாய் நம்பு.
இந்த வயதிலும்
என் இளமையின்
ரகசியம்
இளநீர்.
**செ. ஆனந்தராஜா**
**கொழும்பு-11**

**பட்டினி**
நாளை என்ற நம்பிக்கையில்
நானிருக்கும் வேளையிலே...
பட்டினியெனும் விருந்தினிலே
பங்கேற்கப் பார்க்கிறாயா?
**செல்வி கமலசுந்தரி தங்கவேல்**
**பதுளை.**

சுயநலத்தின்
அனுபவிப்பால்
ஒளியிழந்த
எதிர்காலம்!
**ஏ. அஹ்மது ஜுனைது.**
**ஏறாவூர். 06**

"தாத்தா! நீ
ஊற்றுவது
வயிற்றுக்கா?
இல்ல
கீழால்
வயலுக்குமா"
செல்வி:பரீனா
பேராதனை.

கொடுக்க இதயமில்லா
மனிதர் மத்தியில்-
கொடுக்க இதயமுள்ள
மரங்களா?!
**டி. முஹம்மட்**
**பேராதனை.**

**காவேரி**
ஓ கர்நாடகா
நீ(ர்)மட்டும்
குடிக்காதே
தமிழுக்கும் கொடு
**ஒகஸ்ரீன் இரத்தினம்**
**கல்குடா**

---

# வாசக(ர்)சாலை

*தினமுரசு என்கிறாய்*
*தினந்தோறும் வருவதில்லை*
*வாரமொருமுறை வருகின்றாய்*
*வாஞ்சையோடிருக்கின்றாய்*
*உன்னுள் நான் புகுந்தால்*
*என்நிலை மறக்கின்றேன்*
*முத்தான கொத்துக்களை*
*முடிவில்லாதொலிக்கின்றாய்*
*வாரமொன்று வந்தாலும்*
*வற்றா நதியாகி வனப்புடன்*
*என்னிதயமதில் இடம்பிடித்த*
*தினமுரசே நீ வாழ்க*
*உன் சேவை என்றென்றும்*
*வாசகரெமக்களித்திடுவாய்*

**செல்வன் எச். ரபீக்டீன்**
**உடத்தலவின்ன.**

*வண்ணப்படங்களுக்கே ரூபா 8.50 சரியாகி விடுகிறது சார். ஏனைய விடயங்கள் இலவசம். வாழ்க தினமுரசு.*

**கலைநேசன் ஜவாத்**
**2ம் குறுக்குத்தெரு,**
**புத்தளம்.**

*ஜுலை 11.07.93 குசிப்பேர்வழி குஸ்வந்த் சிங்கின் ஜோக்ஸ் மிகமிக பிரமாதம் என்னை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்துவிட்டாய். இவ்வாறான ஜோக்ஸ் தருவதில் உனக்கு நிகர் நீதான்.*

**இரா. கோபால கிருஷ்ணன்**
**கலன் எஸ்டேட். பதுளை.**

*அன்பின் வாரமலர் தினமுரசுவே*
*உதயமெனும் ஜோதிக்கு உயிர் தந்து*
*வாழ்வேன் உன்னுடனே நானிருந்து*
*உயிர்போல சூழ்வேன்*
*உன் சேவை மென்மேலும் தொடர*
*இறையருள் வேண்டி பிராத்திக்கிறேன்.*

**ஆறுமுகம் விஜயகுமார்**
**பம்பர கெலை எஸ்டேட்**
**நுவரெலியா.**

*"வானவில் பார்த்தல்" அறிவுமதியின் கதையை பிரசுரித்தமைக்கு நாங்கள் ஆயுள் முழுதும் கடன் பட்டுள்ளோம். முரசே இது போன்று வித்தியாசமான சிறுகதைகளை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.*

**ஸ்ரீராம் சிவா.**
**இன்பம்**

*மலரே*
*வாசம் மட்டும்தான்*
*உன்னிடம் உண்டு என,*
*நினைத்தேன்*
*ஆனால்*
*உன் சுவையோ*
*அதி மதுரம்*
*வாழ்க நீர்!*

**செல்வன்: க. முரசொலிமாறன்**
**அக்கரைப்பற்று-09.**

*நன்றிகள்! நன்றிகள்!*
*நான்கு திசை செய்திகளையும் நல்ல முறையில் அள்ளித் தந்து வீடு நோக்கி ஓடி வரும் தினமுரசே உனக்கு எந்தன் நன்றிகள். நன்றிகள்.*

**ர. கிரகரி-**
**நாவலப்பிடி.**

*சூடு சுவை சுவாரஸ்யமான பல அம்சங்களை அள்ளி வழங்குவதற்கு தினமுரசுக்கு நிகர் தினமுரசே. குறுகிய காலத்தில் என் போன்ற ஆயிரமாயிரம் வாசக இதயத்தில் தஞ்சம் புகுந்துவிட்ட வாரமலரே தினமுரசே உன்னை வாழ்த்தாமல் இருக்க முடியவில்லை. உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.*

**ஆர். மகேஸ்வரன்**
**ஸ்டான்லி தி.ர. மாவத்த-நுகேகொட.**

*தினமுரசில் முதன்முதலாய் பார்வையை பதித்த நான் பிரமித்துப் போனேன். பக்கத்திற்கு பக்கம் முற்றிலும் வித்தியாசமான விடயங்கள் மனதை நிறைத்துவிட்டன. புதிய சிந்தனையில் ஊற்றெடுத்திருக்கும் தினமுரசை காணும்போது எனக்குள்ளும் மாறுபட்ட கருத்துக்கள் ஊற்றெடுக்கின்றன. மேலும் மிளிரட்டும் உன் சேவை!*

**செல்வி சமீனா ஹுசைன்-தர்கா நகர்.**

*தினமுரசல்ல சுவைமுரசு*
*தினமுரசின் சுவையோ தனி.*
*வாராவாரம் அதன் சுவை அதிகரித்துக் கொண்டே போகிறது! இது தினமுரசு அல்ல சுவைமுரசு!*

**எம்.ஏ.ஸீ.எம். பாயிஸ்- புத்தளம்.**

*அன்பின் முரசே!*
*நீ தரும் அனைத் அம்சங்களும் வெகு வெகு பிரமாதம். அத்துடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பேனா நண்பர் அரங்கம் மூலம் நாங்கள் புதிய இனிய நண்பர்களை பெறக்கூடியதாக உள்ளது. அத்தோடு தையற்கலை பகுதியை வெளியிட்டதற்கும் மிக மிக நன்றி. என்றும் வளர்க உன் பணி.*

**செல்வி. மா. ஜோதி**
**மெனிக் பாலம்-போபத்தலாவ.**



*வெள்ளிதோறும் உதயமாகும் அன்பின் தினமுரசே, உன்னுடைய எல்லா அம்சங்களும் எம்மைக் கவர்ந்து விட்டன. நீ என்றென்றும் வெற்றி நடைபோட வளர்க உன் சேவை.*

**காமிலா-மாத்தளை.**

**ஆசிர்வதிக்கிறார்**
*அன்பின் ஆசிரிய ஆசீர்வாதங்கள்*
*தங்கள் 'தினமுரசு' மலர் படித்தேன். மட்டிலா மகிழ்வு. சகல அம்சங்களுடனும் மிளிர்கிறது. வாழ்க! வளர்க தினமுரசு.*
*சினிமா, சிறுவர், மாதர், அரசியல் முதலான யாவும் தித்திக்கின்றன. அத்துடன் 'சைவசமயப் பகுதி' ஒன்று இணைந்தால் நன்றாயிருக்கும் என எண்ணுகிறேன். தங்கள் அபிப்பிராயத்தினை அறியத் தந்தால் அப்பகுதியைப் பொறுப்பேற்க விழைகிறேன்.*

**சிவஸ்ரீ கு. சிதம்பரநாதக்குருக்கள்**
**"பிரதம குரு"- சிவன் கோயில்**
**இரத்தினபுரி.**

ம. ஸ்ரீகாந்தன்- இங்கிரிய, ஏ.எஸ். பத்மநாதன்-லிந்துலை, கா. சுதாராகி- களுவாஞ்சிக்குடி-9, ச. சிவரூபன்-கண்டி, ஏ.எம். ஸஹாப்தீன்-பெரியநீலாவணை, ச. ராமஜெயம்- எட்டியாந்தோட்டை.

# கிளாலியில் புலிகள் தப்பினர்! பொறியில் பொதுமக்கள் சிக்கினர்!!

**(ஆசிரியரிடமிருந்து)**

கடந்த 29ம் திகதி அதிகாலையில் கிளாலிக் கடலில் நடந்த பயங்கரம் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

பயணிகள் படகொன்றில் மீண்டும் கொலைகள். கொல்லப்பட்டவர்களில் மூவர் பெண்கள்.

கிளாலிப் பாதையில் பயணிகள் படகுகள் மட்டுமல்ல புலிகள் அமைப்பினரின் படகுகளும் போக்குவரத்தில் ஈடுபடுவதுண்டு.

ஆனால், புலிகளின் படகா அல்லது பொதுமக்களின் படகா என்று இனம்காண முடியாத தூரத்தில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை.

படகைச் சுற்றி வளைத்து படகுக்குள் இறங்கிச் சென்று கடற்படையினர் தாக்கியதாக அதிலிருந்து தப்பியோர் தெரிவிக்கின்றனர்.

தாம் சாதாரண பயணிகள் என்று அவர்கள் அபயக்குரல் எழுப்பியதாகவும் கைகளை மேலே உயர்த்தி சத்தமிட்டதாகவும் கூறப்படுகிறது.

அப்படி எனில் இத்தாக்குதலின் நோக்கம் என்ன? தமிழர்கள் அனைவரும் புலிகள் என்றுதான் கடற்படையினரின் கண்ணுக்குத் தெரிந்தனரா?

கிளாலிப். பாதை போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்ட பாதைதான் அதற்காக சட்டத்தை மீறுவோர் எல்லோரும் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று எந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

கடத்தல்காரர்களைக் கூட கடலில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில்தான் நிறுத்துகிறார்கள்.

ஆனால் கிளாலிப் பாதையில் பயணம் செய்யும் பொதுமக்கள் கடத்தல் காரர்களுமல்ல. அரசாங்கத்தின் விரோதிகளுமல்ல.

அத்தியாவசியத் தேவைகளுக்காக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பயணம் செய்பவர்கள்.

புலிகளிடம் யாழ்ப்பாணத்தில் பாஸ் பெறுவதற்காக அலைந்து திரிந்து, யாரோ ஒருவரை தமக்காக அங்கு பிணையில் நிறுத்திவிட்டு "சீ...இதுவும் ஒரு சீவியமா" என்று மனம் வெறுத்துப் போனவர்களை கடலில் வைத்து பலியாக்குவதால் யாருக்கு லாபம்?

அன்று குமுதினிப் படகில் இருந்து இன்றுவரை கடற்படையினரின் இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் நாட்டின் பொது நிதி கரியாகிக் கொண்டிருக்கிறது. உதவி வழங்கும் நாடுகள் பிரச்சனையை விரைவில் தீருங்கள் என்று எமக்கு புத்தி சொல்லுகின்றன.

கடற்படையினர் கத்தியை தீட்டியிருக்கின்றனர்.

அரசு என்ன செய்யப்போகிறது; என்ன சொல்லப் போகிறது?

பாதுகாப்புக் கொடுக்கிறோம் என்று கூறிக்கொண்டிருந்த புலிகள் பிணமானவர்களின் பட்டியலை வெளியிட்டு அந்த அனுதாபத்தை தமக்கு ஆதரவாக்கிக் கொள்வது எப்படி என்று கணக்குப் பார்க்கிறார்கள்.

புலிகள் பாதுகாப்பு கொடுத்து முடிந்தபின்தான் கொலைகள் நடந்ததென்று புலிகளுக்காக சப்பைக் கட்டு கட்டுகிறார்கள் சிலர்.

பொதுமக்கள் பாதுகாப்பாக கரை இறங்கினால் புலிகளின் பாதுகாப்பு பிரமாதம் என்ற ரகத்தில் செய்திபோடுவதும் பொதுமக்கள் கொல்லப்பட்டால் புலிகள் பாதுகாப்பு கொடுத்து முடித்த பின்னரே கொலைகள் நடந்ததாகக் கூறுவதும் யாருடைய நலன்களை பாதுகாக்கும் முயற்சிகள்.

நடுநிலையாளர்கள் எல்லோரும் வேசம் போடுகின்றவர்களாக மாறுகிற பூமி இது.

அதுதான் நியாயங்கள் எரிகின்றன.

யாருக்கு வேண்டும் உங்கள் நடுநிலை. சரியான கருத்தின் பக்கம் நிற்போரே இன்று தேவை.

அரசோ-புலிகளோ-வேறு எவருமோ மக்களின் நலன்களுக்கு மாறாக செய்யும் தவறுகளை துணிச்சலாக கூறமுடியாவிட்டால் மௌனமாக இருங்கள்.

எரியும் வீட்டில் பிடுங்கித்தானா உங்கள் நடுநிலைக்கு வெளிச்சம் போடவேண்டும்?

இருதரப்பும் தவறு செய்யும் போது ஒரு தரப்பை தடவிக்கொடுத்துக் கொண்டிருப்பது நடுநிலை என்று எவன் சொன்னான்?

கிளாலி அவலத்திற்கு புலிகளும் தானே காரணம். அதை எப்படி மறந்துவிட முடியும். மறுத்திட இயலும்.

ஐ.சி.ஆர்.சி.பிரதிநிதி டாக்டர் நிக்கலஸ். அவர் எம் இனத்தவரல்ல. இந்த நாட்டைச் சேர்ந்தவருமல்ல. ஆனால் பொதுமக்களின்- அப்பாவித் தமிழ் மக்களின் போக்குவரத்தைச் சீராக்க எத்தனை முறை யாழ்ப்பாணம் போனார்.

போனவரிடம் பூநகரிப் பாதையில் நின்று பொதிகளைச் சோதனையிடும் வேலைசெய்கிறீர்களா என்று விண்ணப்பம் கேட்டிருக்கிறார்கள் புலிகள்.

விட்டால் போதும் என்று ஓடிவந்து, சோதனையிடும் வேலைக்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள் எமது வேலை அதுவல்ல என்று விட்டார் அவர்.

இராணுவம் சோதனையிடக்கூடாது என்றால் குடாநாட்டுக்கு வெளியே தாம் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டோம் என்று புலிகள் உத்தரவாதம் கொடுக்க வேண்டுமல்லவா. கொடுப்பார்களா?

ஆக- மொத்தத்தில் வறட்டுத்தனமான பிடிவாதங்கள்- பொருத்தமற்ற வாதப்பிரதிவாதங்கள்- செத்துக் கொண்டிருப்பதோ மக்களும், கூடவே மனிதாபிமானமும்.

கிளாலிப் பாதையில் அவலமான போக்குவரத்து தொடரக்கூடாது என்றால் புலிகள் உடனடியாக தமது வறட்டுப் பிடிவாதத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பந்து புலிகளின் தரப்பில்தான் இருக்கிறது என்று ஐ.சி.ஆர்.சி கூட சொல்லிவிட்டது.

புலிகள் பிடிவாதம் பிடிப்பதால் பொதுமக்களை வரவே வேண்டாம் என்று கண்டிப்பான கடுமையான நிலையினை அரசு எடுக்குமானால் இழக்கப்படுவது மனித உயிர்கள் மட்டுமல்ல தமிழர்களின் நம்பிக்கைகளும் தான்.

விரோதிகளோடு பொருது. சாதாரண மக்களோடு நெளிவு சுளிவோடு அணுகு-இது படைகளுக்கும் பொருந்தும். சகல ஆயுதம்தாங்கியவர்களுக்கும் பொருந்தும்.

இறுதியாக ஒன்று- யாழ் குடாநாட்டில் இருந்து இளைஞர்கள் பலர் புலிகளிடம் இருந்துகூட தப்பிவருகிறார்கள். அவர்கள் அங்கேயே இருக்கட்டும் புலிகளோடு சேரட்டும் என்று காரியங்கள் நடந்தால் புலிகளுக்கே மகிழ்ச்சி. சாதகம்.

புலிகளின் ஆட் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் உதவி செய்யாது என்றே நம்புகிறோம்.

# அன்று நடந்த ஆனையிறவுச் சமர்! மாண்ட புலிகளின் தொகை 602!!

## புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

இரண்டாண்டுகளுக்கு முன்னர் (91) ஆனையிறவில் புலிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றது.

ஆனையிறவு இராணுவ முகாமை முற்றுகையிட்ட ஆயிரக்கணக்கான புலிகள் இயக்க உறுப்பினர்கள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

சவப்பெட்டிகளோடு அனுப்பப் பட்ட புலிகள் இயக்க உறுப்பி னர்களின் தாக்குதல்களில் இருந்து முகாமைக் காப்பாற்ற பாதுகாப்புப் படையினர் வான்-தரை-கடல் மார்க்கங்களில் மும்முனைத் தாக்குதல் மேற்கொண்டனர்.

அதில் இறந்த புலிகளின் தொகை இதுவரை இரகசியமாகவே வைக்கப் பட்டிருந்தது.

கடந்த 31.7.93 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆனையிறவு ,மோதலில் பலியான புலிகளுக்கான நினைவு தினக் கூட்டத்தில் முதல் தடவையாக பலியானோரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் நடைபெற்ற அந்த விழாவில் தமது தரப்பில் பலியானவர்கள் 602 பேர் என்று விடுதலைப் புலிகள் அறிவித் துள்ளனர். அதில் 599 பேர் தமது உறுப்பினர்கள் என்றும் 3 பேர் துணைப்படை உறுப்பினர்கள் என்றும் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

ஆனையிறவில் பலியான புலிகள் இயக்க உறுப்பினர்களது நினைவாக நினைவு மண்டபம் ஒன்றும் கொடிகாமத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

## நடுவர்களை குறை சொன்ன பார்வையாளர் தடுமாறி விழி பிதுக்கிய நடுவர்கள்!

*இலங்கை இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடந்து முடிந்த ஆட்டங்களில் பார்வையாளர்களின் அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டவர்கள் நடுவர்கள்.*

*சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் அனுபவமின்மையும் நடுவர்களின் தடுமாற்றத்துக்கு காரணம் என்று விமர்சகர்கள் சிலர் தெரிவித்தனர்.*

*கபில்தேவ் பந்து வீச வரும்போது இலங்கை அணியின் வீரர்கள் தடுமாறியதும் கவனிக்கக்கூடியதாக இருந்தது. சிறந்த பந்துவீச்சும்- துடிப்பான ஆட்டமும் இந்திய அணியிடம் காணப்படுகிறது.*

*நடுவர்கள் பற்றிய சர்ச்சைகள் ஏற்படுவது இலங்கையின் தரத்தை குறைத்துவிடும். எனவே நடுவர்கள் பொறுப்போடும் - விரைவான முடிவுகளோடும் நடந்துகொள்ள வேண்டும்.*

*அவுட் கொடுக்கலாமா வேண்டாமா என்று நடுவர் சிந்தித்துக்கொண்டிருக்க, இந்திய அணி உரத்து அப்பீல் செய்ய யோசித்து அவுட் கொடுத்தமை போன்ற காட்சிகள் இனிமேல் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.*

## பகிரங்க கூட்டத்தில் பொட்டம்மான்! புலிகளின் மறுப்பு புஸ்வாணமாகியது!!

(யாழ்ப்பாணத்திலிருந்து வர்மா)



விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவின் தலைவர் என்று கருதப்படுகின்றவர் பொட்டம்மான். யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்தவர். சொந்தப் பெயர் சிவசங்கர்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தேடப்பட்டு வருபவர்.

ராஜீவ் காந்தி கொலையில் தமக்கெந்த சம்பந்தமும் இல்லை என்றே புலிகள் கூறிவருகின்றனர்.

பொட்டம்மானின் பெயர் ராஜீவ் கொலை விவகாரத்தில் இந்திய விசேச புலனாய்வு பிரிவினரால் குறிப்பிடப்பட்ட போது, அவ்வாறான பெயருடைய எவரும் தமது இயக்கத்தில் இல்லையென்று புலிகள் முன்னர் அறிவித்திருந்தனர்.

புலிகளின் முன்னாள் யாழ் தளபதியான சதாசிவம் கிருஷ்ணகுமார் என்கின்ற கிட்டு, புலிகளின் முக்கிய தலைவர்களின் ஒருவரான கோபாலசாமி மகேந்திரராஜா என்கின்ற மாத்தையா ஆகியோர் பொட்டம்மான் என்றொருவர் தமது இயக்கத்தில் எப்போதும் இருந்ததில்லை என்று மறுத்திருந்தனர்.

திரு. மாத்தையா தமிழக சஞ்சிகையான நக்கீரனுக்கு முன்னர் அளித்திருந்த பேட்டியொன்றிலும் அவ்வாறே தெரிவித்திருந்தார். கனடாவில் இருந்து வெளியாகும் திரு. டி.பி. எஸ். ஜெயராஜ் ஆசிரியராக உள்ள செந்தாமரை என்னும் பத்திரிகையிலும் அப்பேட்டி மறுபிரசுரமாகியிருந்தது.

ஆனால் கடந்த 31.7.93 அன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் பொட்டம்மான் கலந்து கொண்டு உரையாற்றினார். அத்தோடு நினைவு மண்டபத்தையும் திறந்து வைத்தார்.

அன்று இரவு புலிகளின் குரல் வானொலியில் புலிகளின் மூத்த உறுப்பினர் பொட்டம்மான் என்று அவரது பெயர் குறிப்பிடப்பட்டது.

திரு. பொட்டம்மான் கூட்டத்திலும் உரையாற்றினார்.

எமக்கென்று ஒரு படை நிறுவமுடியுமென்று நிரூபித்தது ஆனையிறவுப் போராகும். தமிழரின் சுதந்திர வேட்கையை அது வெளிப்படுத்தியது என்று பொட்டம்மான் தனது உரையில் குறிப்பிட்டார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு இந்தியாவில் நடைபெற்றுவரும்போது பொட்டம்மானை பகிரங்கப்படுத்தியது ஏன் என்பது புதிராக இருக்கிறது!

**தமிழக அரசியல் நிலவரக் கண்ணோட்டம் அடுத்த - வாரம் வரும்- காரணம் - இடநெருக்கடி**

## திருத்த வைத்தியம் தேவையான சம்மாந்துறை வைத்தியசாலை!

**(நிந்தவூர் நிருபர்)**



சம்மாந்துறை மாவட்ட வைத்திய சாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு இயங்கிய கட்டிடத்தின் அவலநிலையையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய மினி சூறாவளி ஒன்றின் போது இந்தக் கட்டிடத்தின் கூரைத்தகடுகளும், கூரையும் சேதமுற்றன. மாதங்கள் பல கடந்தும் இக் கட்டிட சேதத்தைத் திருத்தி அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரோ - வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சோ முன்வரவில்லை! பல்வேறு சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் மத்தியில் பிறிதொரு கட்டிடத்தில் தற்காலிகமாக வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு இயங்குவதற்கு ஆவன செய்துள்ளார் மாவட்ட வைத்திய அதிகாரி. இது விடயமாக பல தடவைகள் சம்பந்தப்பட்டோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் பயனில்லை. எப்படி இருக்கிறது நமது நிருவாகங்கள்? மக்களுக்கான சேவைகள்!!

# ஜனாதிபதியில்லாத ஜனாதிபதி சேவை?

**-எதார்த்தன்-**

மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவை ஜனாதிபதியின் நடமாட்டமில்லாமலே நடைபெற்று முடிந்தது. ஜனாதிபதி வரமாட்டார் என்றதும் நிகழ்ச்சிகள் சோபையிழந்துவிட்டன. சுறுசுறுப்பும் அற்றுப் போய்விட்டது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்கு உடல் நலமில்லாமை காரணமாகவே அவர் வரவில்லை என்று ஆரம்பத்தில் அறிவிக்கப் பட்டது. செய்தித்தாள்களும் அவ்வாறே கூறின. ஆனால் அத்தகவல் வெறும் பொய் என்பது புதன்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. பாதுகாப்புக் காரணமாகவே ஜனாதிபதி வரவில்லை என்பதுதான் உண்மையான காரணம் என்று அரசாங்கம் இப்போது தெளிவாகக் கூறிவிட்டது.

இத்தனைக்கும் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் மட்டக்களப்பிலுள்ள அப்பாவிப் பொதுமக்கள் சிலவாரங்களாக அனுபவித்த துன்பங்கள் வார்த்தைகளில் அடங்கா. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஒவ்வொரு பொலிஸ் வீதம் நிறுத்தப்பட்டது போல் இருந்தது. பல மாதங்களாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் எங்கே ஓட்டை விழுந்ததோ தெரியவில்லை. ஆகமொத்தம் ஜனாதிபதி சேவை ஜனாதிபதி இல்லாமலே·நடைபெற்றது.

பலகாலமாகத் தீர்த்து வைக்கப்படாத தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஓடிவந்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பெரும் விளம்பரங்களுக்கு மத்தியில் பல இலட்ச ரூபாய் செலவில் வகுக்கப்பட்ட திட்டங்கள் யாவும் உரிய பலனை போதுமான அளவில் அளிக்கவில்லை. இருப்பினும் நகரை அழகுபடுத்தும் பணி ஓரளவு நடைபெற்றிருக்கிறது. ஆனாலும் இத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையையும் நடைபெற்றுள்ள பணிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிக நீண்ட இடை வெளி இருப்பதை மக்கள் காணாமலில்லை. பெருமளவு பணம் ஒரு சிலரின் பைகளில் புகுந்து விட்டதோ என்ற ஐயப்பாடு வானளாவ எழுந்துள்ளது. வரிப்பணம் தரும் பொது மக்களின் இத்தகைய ஐயப்பாட்டை நீக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

மூன்று நாட்கள் நடைபெற்ற சேவை விழாவில் மக்களுடைய கவனத்தைக் கவர்ந்தது, இந்துசமய கலாசார அமைச்சினால் நடத்தப் பட்ட சேவைகள் என்பதை பலரும் குறிப்பிட்டனர்.

முதல் நாளன்று இந்து சமய கலாசார அமைச்சுடன் தொடர்புடைய அலுவல்கள் கோட்டை முனையிலுள்ள அருள் மிகு வீரகத்தி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இடம் பெற்றன. சிறப்புப் பூசையின்போது ஆலயத்துக்கென பெரிய குத்துவிளக்கொன்றை இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் வழங்கினார்.

பல ஆலயங்களின் சீர் கேடுகள் பற்றி முறையிடப்பட்டது. சேதமடைந்த ஆலயங்கள் திருத்தப்படுவது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. 30 ஆலயங்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது. வணக்கத் தலங்கள், ஆலயங்கள் பெருவாரியாகச் சேதப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கென ஜனாதிபதி நிதியிலிருந்து 8 லட்சரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் சேதமடைந்த கோட்டைமுனை பௌத்த விகாரைக்கு 7 இலட்ச ரூபாவை ஒதுக்கிவிட்டனர். எஞ்சியுள்ள ஒரு இலட்சத்தில் 50 ஆயிரம் ரூபாய் கொக்கட்டிச்சோலை தாந்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கும் சத்துருக் கொண்டான் கண்ணகி ஆலயத்துக்கும் இந்துசமய கலாசார அமைச்சர் வழங்கினார். 65 அற நெறிப் பாடசாலைகள் மற்றும் சமய சார்பு மன்றங்கள் ஆகியவற்றுக்கும் ஊக்குவிப்புத் தொகைகள் வழங்கப்பட்டன.

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர் திரு.பி.பி.தேவராஜ் அவர்களுடன் அமைச்சின் செயலாளர் திரு.கா.தயாபரன், அமைச்சின் ஆராய்ச்சி அலுவலர் திரு.எஸ்.தெய்வநாயகம், மட்டக்களப்பு கலாசார அலுவலர் செல்வி தங்கேஸ்வரி கதிராமர், வடகிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் திரு.எஸ். எதிர்மன்னசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்து சமய கலாசார அமைச்சின் விவகாரங்கள் ஆலயத்தில் நடைபெறுவதைக் கண்ட முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் திரு.அஸ்வர், தன் அமைச்சின் அலுவல்களை மட்டக்களப்பிலுள்ள பள்ளிவாசலில் நடத்தியிருந்தால் சிறப்பாக இருந்திருக்குமே என்று அங்கலாய்த்தார்.

# அமைச்சர் தொண்டமான் கவனத்தில் புகார் பெட்டியில் வந்த குறைகள்!

கடந்த வாரங்களில் வெளிவந்த எமது 'தினமுரசு' புகார் பெட்டியில் பிரசுரமான மலையக பெருந்தோட்டப் பகுதி சம்பந்தப்பட்ட விடயங்கள் இ.தொ.கா. தலைவரும் சுற்றுலா கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் 'கவனத்தை' ஈன்றதுடன், புகார் பெட்டியில் 'புகார் விடயமாக' அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கும்படி தனது உத்தியோகஸ்தர் களுக்கு அறிவித்துள்ளதாக 'இப்புகார் பெட்டி' புகார்களை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்த இ.தொ.கா. தகவல்துறை இயக்குநர் திரு.பி.அந்தோனி முத்து தெரிவித்துள்ளார்.

தெரணியகலை- மாலிபொட தோட்ட மலசலகூட, சுகாதார வசதியின்மை விடயமாக தெரணியகலை பிரதேச சபை உபதலைவர் திரு.ரவிக்குமாரிடம் அப்பிரச்சினை தீர்வுபற்றி எடுக்க நடவடிக்கை, வழிவகைப்பற்றி அமைச்சர் நேரடி கூறியுள்ளார்.

சிறிபாத கல்விக் கல்லூரி ஆசிரியர் பயிற்சி பற்றி குறிப்பிடுகையில்

எந்த மக்களுக்காக இக்கல்லூரி அமைக்கப்பட்டதோ அந்த மக்களுக்காக தனது பங்களிப்பை அளிக்க தவறுவதன் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. உரித்தானவர்களுக்கு பூரண பயனளிக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஒரு சில தோட்டங்களில் பெருந் தோட்டப்பகுதிகளில் நிலவிவந்த குறை பாடுகள் எமது புகார் பெட்டியில் வெளி வந்ததல்லவா? அந்த தோட்ட பிரச்சினை கள் 'பட்டியலிட்டு' திரு.எம்.எஸ். செல்லச் சாமி, பொதுக்காரியதரிசி, இ.தொ.கா, தபால்பெட்டி 1294, கொழும்பு என்ற முகவரிக்கு எழுதி அனுப்பினால் அவை பற்றிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் தந்த திரு.பி. அந்தோனிமுத்து 25-31.07.93 ஆம் திகதி தினமுரசில் வெளிவந்த "பதுளை கலவன் தமிழ் வித்தியாலய குறைபாடு" பற்றிய செய்தியினை கத்தரித்து அதன் கட்டிங் குடன் ஊவா மாகாண சபை பெருந் தோட்ட தமிழ் கல்வி அமைச்சர் திரு. என்.சச்சிதானந்தனுக்கு அனுப்பியுள்ள துடன் அது பற்றிய நடவடிக்கை விபரத்தையினையும் தந்துதவ வேண்டியுள்ளார்.

குறைகள் தீருமானால் அனைவ ருக்கும் மகிழ்ச்சியே.

# பிரிந்தேயாக வேண்டிய சிறையில் சுவையான பிரியாவிடை!

(கண்டி நிருபர்)

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட 41 தமிழ் இளைஞர்கள் கண்டியிலுள்ள பள்ளேகல இளைஞர் புனர்வாழ்வு முகாமில் இருந்தனர்.

அண்மையில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டதோடு பிரியாவிடை வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

லெப்டினன்ட் அபயரத்தின அங்கு உரையாற்றும் போது இலங்கையில் ஆயுதம் ஏந்திப் போராடிய சிங்கள இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் சகோதரர்களாக இங்கு புரிந்துணர்வுடன் பழகிவந்தனர் என்று குறிப்பிட்டார்.



கண்டி பள்ளேகல இளைஞர் தடுப்பு முகாம் பயிற்சி நிலையத்தில் புனர்வாழ்வு கொடுக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் அங்கு குழுமியிருந்து இப்படி கமராவுக்கு முகம் கொடுத்தனர். (படம்: கண்டி நிருபர்)

# தாராபுரம் கிராமத்திற்கு மின்சார விநியோகம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத் திலுள்ள தாராபுரம் முஸ்லிம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சென்ற ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து இதற்கென வன்னி மாவட்ட எம்.பிக்களான அல்.ஹாஜ் எஸ்.எஸ்.எம். அபூபக்கர் (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்) மற்றும் ஜனாப் எம்.என். ஐயூப் (ஈரோஸ்) ஆகியோர் முறையே 13 இலட்சம் 2 இலட்சம் ஆகிய தொகை களை ஒதுக்கீடு செய்திருந்தனர்.

இங்கு தற்போது மின்கம்பி இணைப்பு வேலைகள் நடைபெற்று வந்தாலும், அதிகமான மக்கள் இடம் பெயர்ந்து வெளி மாவட்டங்களில் வசிப்பதால் மின் விநியோகம் வழங்க தாமதம் ஏற்படலாம் எனத் தெரிகிறது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல—10

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | 4 |
| 5 | | | | ■ | 6 | |
| | 7 | | | | ■ | |
| | ■ | | 8 | | | |
| ■ | 9 | | | ■ | 10 | ■ |
| 11 | | ■ | 12 | | | |
| 13 | | | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

1. பெண்களின் கழுத்தையும் இதுபோல் இருப்பதாகக் கூறுவார்கள்.
3. இந்திராவின் அரசியலுக்கு ராஜீவ் காந்தி இதுவாகத்தான் இருந்தார்.
5. சகல மதத்தினருக்கும் இது வருவதுண்டு.
7. இது இல்லையெனில் தாங்காது வயிறு.
8. மழலையைச் சீராட்டும் போது உதவுவது.
9. ராசிகளில் ஒன்று.
11. கழுவிவிட மறந்தால் உங்களையே கவிழ்த்து விடும்.
12. சில கல்யாணங்களுக்கு இவரின் உதவி தேவைப் படுவதுண்டு.
13. சத்துள்ள பழங்களில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. திரௌபதி இதைச் செய்தாள். இது நிறைவேறிய பின்தான் கூந்தலை முடித்தாள்.
2. இவன் பேச்சு விடிஞ்சாப் போச்சு.
4. புகையிலையின் மவுசுக்கு இதுவும் ஒரு காரணம்.
6. குதிரை (தலைகீழாக உள்ளது)
8. விண்ணிலே இருக்கிறது (கீழிலிருந்து மேல்நோக்கி உள்ளது)
10. உலோக வரிசையில் இதுவும் ஒன்று.
11. அரைவாசி.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 14.8.93 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.-10**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-08 இற்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நா | ட் | கா | ட் | டி | ■ | 2 கு |
| ட | 3 தி | ■ | 4 க | ■ | 5 சி | றை |
| 6 க | ர | ண | ம் | ■ | 7 தா | வு |
| ம் | வ | ■ | ப | ல் | ஜ் | ■ |
| ■ | ம் | 8 ஞா | ன் | ய | ம | 9 ப |
| 10 ஒ | ■ | யி | ■ | 11 மு | கா | ரி |
| ளி | 12 வ | று | மை | ■ | ல் | சு |

குறுக்கெழுத்துப் போட்டி இல.08ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. பஸ்லா பைஸல் தர்கா நகர்.
2. வே. குமாரசாமி ஹொரணை.
3. லோகா சந்திரன் கொழும்பு-13.
4. ஏ.எஸ்.எம். நிபாஹிர் கொச்சிக்கடை.
5. சோ. சிறீதரன் பொகவந்தலாவை.
6. சி. வசீகரன் கண்டி.
7. எஸ்.என். நஸீர் புத்தளம்.
8. எஸ். பாலசிங்கம் திருகோணமலை.
9. கு. சகாயராஜா நீர்கொழும்பு.
10. எம். கௌரி நுவரெலியா.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/- வழங்கப்படும்.

# புகார் பெட்டி

## நிரப்பப்படாத வெற்றிடமும் திருமலை கல்வி நிர்வாக நெருக்கடியும்!

திருக்கோணமலைக் கல்விப் பிராந்தியம் தனக்கென ஒரு பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இன்றித் தவிக்கிறது.

பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்த திரு.சி. நடராசமூர்த்தி கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளராக உயர்வு பெற்றுச் சென்றதை யடுத்து திரு.ஆர்.எம்.கே.தங்கராசா அந்த இடத்திற்குத் தற்காலிக நியமனம் பெற்றார். ஆனால் அவர் பதவி மாற்றம் பெற்றதையடுத்து மூன்று மாதங்களுக்கும் மேலாக மேற்படி பதவி நிரப்பப்படாமல் இருந்து வருகிறது.

இதனால் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் கையெழுத்திட வேண்டிய கடிதங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.கே. தியாகராசா பார்வையிடும் வரைக்கும் காத்துக்கிடக்க வேண்டிய பரிதாப நிலைமை தோன்றி யுள்ளது. இப்பதவி நிரப்பப்படாமை திருக்கோணமலைக் கல்விப் பிராந்திய நிருவாகத்துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிடத் தக்கது.

தகவல்: க.கோணேஸ்வரன்

## குறைவில்லை திறனுக்கு!

தங்களின் "தினமுரசு" 25.07.93இல் வெளியாகிய புத்தளம் நிருபர் மூலம் "குறவன்குடி தபாலகத்தின் திறன் குறைந்த சேவை" எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள விடயத்தை அறிந்தேன். அவ் அலுவலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தன் என்ற வகையில் நான் எழுதிக் கேட்டுக் கொள்வதாவது என்னவெனில் குறிப்பிடப்பட்ட அந்த நபர் அதாவது சமீபத்தில் ஒருவருக்கு வெளியிடத்தில் இருந்து ஒரு டயரி பார்சலில் வந்ததாகவும் அது அவர் கரம் கிடைக்காமையும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே சம்பந்தப்பட்ட நபருக்கு எத்தனையாம் திகதி, எங்கிருந்து, எவ்வாறான (சாதாரண/பதிவு பார்சல்) முறையில் அந்த டயரி அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் அப்பார்சலின் சாதாரண, பதிவு இலக்கங்களையும், அப் பார்சல் எமது அலுவலகம் வந்துதான் உரியவருக்கு கிடைக்கவில்லையா என்பதையும் அல்லது இடையினில் ஏற்பட்ட தடங்களா என்பதையும், உரியவருக்கு அப் பார்சல் அனுப்பப்பட்டுதான் கிடைக்கவில்லையா? போன்ற விடயங்களை கவனிக்கும் பொருட்டு எமக்கு அத் தகவல்களை தந்துதவும்படி இத்தால் எழுதிக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்,
உ.த.அ.- குறவன்குடி.

அன்புடன்-
உபதபால் அதிபருக்கு,
உங்கள் மறுப்புக் கிடைத்தது. நன்றி.
எமக்கு தகவல் தந்த எமது நிருபர் ஏ.எஸ்.புல்கியின் பதில் இதோ.
டயறியை பறிகொடுத்தவர்
பெயர். முஹம்மது நவாஹிர்-மேலதிக விபரங்கள் எமது நிருபரிடம் கோரப்பட்டுள்ளன. -ஆ.ர்-

## தரமுயர்த்தப்படவேண்டிய தபாலகம்!

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்தாந்தீவு என்னும் கிராமத்தில் இயங்கி வரும் உப-அஞ்சல் அலுவலகம், பக்கத்து கிராமங்களில் இயங்கும் வட்டவான், சின்னப்பாடு, சமீரகம ஆகிய மூன்று உபஅஞ்சல் அலுவலகங்கள் கொத்தாந்தீவு உப அஞ்சல் அலுவலகங்களுக்குப் பொறுப்பு.

ஆகையால் கொத்தாந்தீவு உப-அஞ்சல் அலுவலகத்தை, "அஞ்சல்" அலுவலகமாக மாற்றியும், தொலைபேசி மின்சாரம் தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவும்!

தகவல்: எம்.ஏ.ஏ.ஜுனூத்
கொத்தாந்தீவு.

## என்று தீரும் பற்றாக்குறை!

பத்தனை தமிழ் வித்தியாலயம் (பொறஸ்கிரீக்) ஆண்டு 1முதல் 8 வரை 315 மாணவர்களைக் கொண்டது. பாடசாலை மூன்று தோட்ட தொழிலாளர்களது பிள்ளைகள் இதில் கல்வி கற்கிறார்கள் 60×20 அளவு திட்டத்தைக் கொண்ட ஒரு மண்டபம் மாத்திரமே உள்ளது.

1994ம் ஆண்டு மாணவர் தொகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இட வசதியீனத்தை சமாளிப்பதற்காக இரண்டு நேர பாடசாலை நடைபெறுகிறது.

காலை 8மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பாடசாலை நடைபெறுகிறது. இதன் காரணமாக மாணவர்களும், ஆசிரியர்களும், பெரும் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளனர். எனவே மண்டபத் தேவையின் அவசியம் பற்றி பல அரசியல் தலைவர்களிடமும், கல்வி அதிகாரிகளிடமும் தொடர்பு கொண்டு இது வரை எந்த பயனும் கிட்டவில்லை.

ஒருமண்டபம் எப்போது கிடைக்கும் தளபாடங்கள் எப்போது கிடைக்கும், எப்போது பிரச்சனைகள் தீரும் என ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் எதிர்பார்த்துள்ளார்கள்.

வி.விஜி.

## முரசு கிடைக்குமா?

எங்கள் பகுதி, பொகவந்தலாவ. நாங்கள் தினமுரசு படிப்பதென்றால் அட்டன் நகரம் சென்று தான் வாங்கி படிக்க வேண்டும். அப்படி வாங்க செல்லும் போது தினமுரசு முடிந்து விடுகிறது. நாம் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியுள்ளது சாப்பிடாமல் வேண்டும் என்றால் இருந்து விடுவோம் தினமுரசு இல்லாமல் இருக்க முடியாது. இக்குறை நீங்க எங்கள் பகுதிக்கு தினமுரசு வந்து எமது கைகளில் தவள ஆசிரியர் ஆவண செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்வது

பெருமாள் அசோகன்
பொகவந்தலாவ.

## ஒரே பாடல்கள் வாரம் தோறும்!

ஞாயிறு தோறும் பிற்பகல் 2.30 மணியளவில் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படும் பொன்மாலைப் பொழுது நிகழ்ச்சியில் ஒளிபரப்பிய பாடல்களையே திரும்பத் திரும்ப ஒளிபரப்புகின்றார்கள். எத்தனையோ புதிய நல்ல பாடல்கள் இருந்தும் ஏன் இப்படி?

த.திவ்யா
நொச்சியாகமம்.

## தொங்குபாலத்தில் பங்கம்!

தலவாக்கொல்லை பகுதியை சேர்ந்த பெயார்வெல் எஸ்டேட்டி லுள்ள தொங்கு பாலம் கடந்த 12.5.93 திகதி பெரும் சேதமாகிவிட்டது இதனால் இப்பொழுது பாலத்தில் யாரும் செல்ல முடியாமல் இருக்கின்றது.

இக்காரணத்தால் பெயார்வெல் எஸ்டேட் மக்களுக்கும் லெமிலியர் கொளனி மக்களுக்கும் போக்குவரத்து சிரமம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் மக்கள் 4 கிலோமீற்றர் கடந்து வந்தே வாகனம் செல்லும் பாதையை அடையமுடிகிறது குறிப்பாக பாடசாலை மாணவ மாணவிகள் பெரும் சிரமம் அடைகின்றார்கள்.

இதனால் மக்கள் சில அவசர தேவைகளைக்கூட பெரும் இன்னலுக்கு மத்தியில் பூர்த்தி செய்கின்றன.

இதைப்பற்றி இது வரைக்கும் தோட்ட நிர்வாகம் எந்த வித கவனமும் செழுத்தியதாக தெரியவில்லை.


இந்த பிரச்சனையை பற்றி எந்த தொழில் சங்கமாவது அக்கறை செழுத்தி தோட்ட நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அல்லது வேறு வழிகளிலாவது இந்த தொங்கும் பாலத்தை புனரமைப்பதற்கான வழி வகைகளை வழி வகுத்து தரவேண்டு மென்று பொது மக்கள் சார்பில் வேண்டிக்கொள்கின்றேன்.

ஆர்.ரவிகுமார் ரகு
தலவாக்கொல்லை.

# பொய்த்துப் போன கனவுகளும் சூழ்ந்துவரும் போர் மேகங்களும்!

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

-நாரதர்-



கடந்த காலத்தில் தலைநகர அரசியலில் சுவாரசியமாகச் சொலலக்கூடிய அரசியல் மோதல்கள் எதுவும் நடக்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன குரே. மறைந்த ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவராக இருந்தவர்.

அவர் வெளிநாடு சென்று திரும்பியுள்ளார். நாடு திரும்பியவுடன் பொதுச் செயலாளர் பதவியை திரு. சுசில் முனசிங்கவிடம் கையளிப்பார் என்று ஒரு வதந்தி பரவிக் கொண்டிருந்தது. அப்படியொன்றும் இல்லை. தொடர்ந்தும் இருப்பேன் என்று நாடுதிரும்பிய திரு.சிறிசேன குரே கூறியிருக்கிறார்.

இப்போதெல்லாம் தலைநகரில் அரசியல் வதந்திகள் இஸ்டம் போலப் பரவுகின்றன. எனினும் முன்னர் இருந்த பரபரப்பு இப்போதில்லை. வதந்திகள் கேட்டு மக்களுக்கு அலுத்துவிட்டது. ■

தலைநகரில் இருந்து வாரம் ஒரு சிங்களப் பத்திரிகை தோன்றிக் கொண்டிருக்கிறது.

ஒரு தாளை இரண்டாக மடித்துக்கூட வார இதழ் என்று வெளியிடுகிறார்கள்.

அதிகமான பத்திரிகைகள் வருவது ஒன்றும் தவறான விசயமல்ல.

பத்திரிகை சாம்ராஜ்யம் நடத்தி தாம் கொடுப்பதை மட்டுமே வாசகர் படிக்க வேண்டும் என்று நினைக்கும் சில பத்திரிகை முதலாளிகள் மட்டும்தான் கவலைப்படுவார்கள்.

எனினும் தோன்றும் பத்திரிகைகள் பத்திரிகை உலகை பலப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.

கொழும்பில் இருந்து வரும் சில புதிய சிங்களப் பத்திரிகைகள் கற்பனைக்கு அதிக வேலை கொடுக்கிறார்கள்.

யாவும் கற்பனை என்று பின்குறிப்பாய் போட வேண்டிய செய்திகளை உண்மைச் செய்திகளாக வாசகர்களை நம்பவைக்க முயலுகிறார்கள்.

பிரபாகரன் கொழும்பில் வந்து தங்கியிருப்பதாக ஒரு பத்திரிகை கற்பனையின் உச்சிக்கே போயிருந்தது.

வடக்கு-கிழக்குச் செய்திகள் குறிப்பாக வடக்குச் செய்திகள் சரிவரக் கிடைப்பதில்லை என்பதால் அந்தப் பத்திரிகைகள் சில தாம் நினைப்பது போல அங்குள்ள நிலமைகளைச் சித்தரித்து விடுகின்றன.

பொறுப்பு வாய்ந்த பத்திரிகை நிறுவனம் ஒன்றுகூட முன்னர் ஒரு செய்தி வெளியிட்டது நினைவுக்கு வருகிறது.

புலிகளின் பிரதித் தலைவராக இருந்த கோபாலசாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையா கொழும்புக்கு வந்து நுகேகொடையில் தங்கியிருந்தார் என்றும், தனது காதலியைச் சந்திக்கவே அவர் வந்ததாகவும் அந்தச் செய்தி சிரிப்பூட்டியது. அந்த நிறுவனத்தின் தமிழ் பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தபோது யாருமே அதை நம்பவில்லை.

இந்தச் செய்தியின் நோக்கம் என்ன? புலிகள் மீது அபகீர்த்தி உண்டுபண்ணுவதா? மாத்தையா பெண்ணாசை கொண்டவர் என்று காட்டுவதா? அப்படியிருந்தால் நினைத்ததை விட நேர்மாறான விளைவையே அந்தச் செய்தி உருவாக்கியது.

மாத்தையா இலங்கை அரச உளவு நிறுவனங்களால் நன்கு அறியப்பட்டவர். அவரது சமீபகால புகைப்படங்கள் கூட அவற்றிடம் இருக்கின்றன. ஒன்றுக்கு பத்து தடை முகாம்களை தாண்டி மாத்தையா கொழும்பு வரமுடிந்தது என்றால் யாருக்கு வெட்கம்? பாதுகாப்பு பிரிவினர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி வராதா? நல்ல வேளையாக யாரும் அந்தச் செய்தியை சீரியசாக எடுத்துக்கொள்ளவில்லை.

புலிகள் தங்களை குறைசொல்ல தாங்களாகவே எத்தனையோ தவறுகளை உருவாக்கித்தந்து கொண்டிருக்கிறார்கள்.

சுட்டிக்காட்ட வேண்டிய தவறுகளை கவனியாது இருந்துவிட்டு இட்டுக்கட்டல்கள் எதற்காக என்று தெரியவில்லை.

மறுபுறத்தில் - அரசியல்வாதிகளை நரகல் நடைகளால் தூற்றுவதும், அம்பலப்படுத்தல்கள் என்று கூறிக்கொண்டு கையாலும் மடியாலும் போட்டு கதை புனைவதும்தான் பத்திரிகைச் சுதந்திரம் என்று கருதிக் கொள்கிறார்கள். அப்படித்தான் என்று யாரோ அவர்களுக்கு பொய் சொல்லியிருக்க வேண்டும்.

நாயே-பேயே என்று விமர்சிக்கும் அளவுக்குக்கூட ஒரு சிலர் போய்விடுகிறார்கள்.

இது பத்திரிகைச் சுதந்திரமா? அல்லது துஸ்பிரயோகமா என்று அவர்கள் கொஞ்சம் யோசிக்க வேண்டும். ■

யாழ்ப்பாணத்தில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

இராணுவத்தளபதியும்-பிரதமரும் வடபகுதி இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்துள்ளார்கள்.

பேச்சுவார்த்தைச் சூழ்நிலைகள், நல்லெண்ணச் சமிக்கைகள் என்ற விமர்சன வித்தகர்களின் கணிப்புக்களை நடப்புக்கள் பொய்யாக்கியே வருகின்றன.

போர்விமானங்கள் யாழ்குடாநாட்டின் மேலாக பறந்து திரிகின்றன.

தரையில் புலிகளின் வாகனங்கள் பரபரப்பாக அங்கும் இங்கும் சீறிச் செல்கின்றன.

அமைதி வரவேண்டும் என்கின்ற மக்களின் கனவுகள் பொய்யாகி-கானல்நீராகி அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்தோடு வானத்தையும்-பூமியையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுக்களின் காரணமாக சாதாரண மக்கள் பலியாகியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டுமிருக்கிறார்கள்.

குண்டுவீச்சுக்கள் மூலம் யாழ்குடாநாட்டில் உள்ள புலிகளின் முகாம்களை அழித்துவிடலாம் என்று படையினர் கருதினால் அது ஒரு தவறான உபாயமாகவே இருக்கும்.

மீன்களைப் பிடிக்க கடலில் டைனமைற் உபயோகிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீன்வள-கடல்வள பாதுகாப்புக்காக அப்படிச் செய்யப்படுகிறது.

குடியிருப்புக்கள் மத்தியில் உள்ள புலிமுகாம்களை அழிக்க குடியிருப்புக்கள் மத்தியில் குண்டு போடுவது எப்படி நியாயமாகும்.

டைனமைற் வைக்கும் மீனவனை என்றால் பிடித்து உள்ளே போடலாம். குடியிருப்புக்கள் மத்தியில் குண்டு போட்டுவிட்டு-சரியான இலக்குகளே தாக்கப்பட்டதாகக் கூறும் விமானிகளை என்ன செய்யலாம். பாதுகாப்புப் படைத் தலைமைதான் பதில் சொல்ல வேண்டும்.

வடபகுதி இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் சமாதானத்தீர்வின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

படையினரை உற்சாகமூட்ட போர் ஆர்வத்தை தூண்டவில்லை. சமாதானத் தீர்வில் அரசுக்கு நாட்டமிருக்கிறது என்றே சொல்லி இருக்கிறார். இது வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் சமாதானத் தீர்வுக்கு புலிகள் வருவது ஒருபுறமிருக்க, அரசின் சமாதான எண்ணங்களை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் செயல்பாடுகளும் அமைய வேண்டும்.

இது புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று மறைந்த ஜனாதிபதி முதல் கொண்டு இன்றை ஜனாதிபதி மற்றும் இளைய பிரதமர் உட்பட அனைவருமே சொல்லியிருக்கின்றனர்.

ஆனால் போர் விமானங்கள் புலிகளையும்-பொதுமக்களையும் வேறுபடுத்தி பார்ப்பதாகத் தெரியவில்லை.

ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள் செய்யமுடியாததை ஒரு குண்டு செய்துவிடுகிறது. கியூபாப் புரட்சியின் போது சேகுவேரா அப்படிச் சொன்னதாக ஞாபகம்.

அரசின் தலைவர்களதும், பாதுகாப்புப் படை உயரதிகாரிகளினதும் நல்லெண்ணம் தொனிக்கும் கருத்துக்களையும்-யாழ்பாணத்தில் விமானம் மூலமாக போடப்படும் துண்டுப் பிரசுரங்களின் வாசகங்களையும் ஒரு விமானக் குண்டு பழுதாக்கிவிடுகிறது.

புலிகளுக்கு பிரச்சார செலவு மிச்சம். பதில் பிரச்சாரத்திற்கான சிரமமும் இல்லை.

விமானக் குண்டுவீச்சுக்களே யாழ்ப்பாணத்திற்குள் இராணுவம் வந்தால் நிலமை விபரீதமாகும் என்ற புலிகளின் பிரச்சாரத்திற்கும் வலுவூட்டி, மக்களை அச்சமடையச் செய்கின்றன.

புலிகளின் மீதும் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களிடம் நிறைய அதிருப்திகள் நிலவுகின்றன.

அந்த அதிருப்திகளை தமக்கு சாதகமாக்கிக் கொள்ளும் வகையில் ஏனைய தமிழ் அமைப்புக்கள் காத்திரமான செயல்பாடுகளை முன்வைக்கவில்லை. அரசும் சந்தர்ப்பங்களை தவற விட்டே வருகிறது.

அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கள்- வெறும் பேச்சுக்கள் என்ற அளவோடு மட்டுமே நின்று விடுகின்றன.

அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படாமல் யுத்தத்தில் வெற்றிபெறுவது சாத்தியமா என்ற சிந்தனை பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உயர்வட்டாரங்களிலும் எழுந்துள்ளது.

அரசியல் தீர்வு இல்லாமல் யுத்தம் புரிவதென்பது ஒரு கையை பின்புறமாக கட்டியபடி சண்டையிடுவது போன்றதே.

எந்த யுத்தத்திற்கும் ஒரு அரசியல் குறிக்கோள் இருந்தால் மாத்திரமே அது வெற்றியடைய முடியும்.

அரசியல் தீர்வொன்றை முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்த உள்ள தடைகளைக் களைவதாக இருக்குமானால் மக்களின் ஆதரவையும் அந்த களைதல் நடவடிக்கை பெறமுடியும்.

புலிகளிடமும் தெளிவான அரசியல் குறிக்கோள்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

தமிழீழம் . தாகம் என்ற கோசத்திற்கப்பால் தமிழ் பேசும் மக்களைப் பற்றிய அக்கறைகளை அவர்களது நடவடிக்கைகள் பிரதிபலிக்கவில்லை.

பொதுமக்களின் போக்குவரத்து விடயத்தில் புலிகள் காட்டும் மந்தமான அணுகுமுறை ஒன்றே புலிகள் மக்களின் நலன் குறித்து கொண்டுள்ள ஈடுபாட்டின் அளவுக்கு போதுமான அளவுகோலாகும்.

ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீது ஜனநாயக விரோத நிலைப்பாட்டை தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட அரசியல் ஜனநாயக பலத்தை திரட்டுவதில் புலிகள் அலட்சியம் காட்டுவது துலக்கமாகிறது.

ஏனைய தமிழ் அமைப்புக்களும் தவறுகள் விடாமலில்லை. புலிகள் தமிழர்களிடம் கப்பம் பெறுகிறார்கள் என்று கண்டிக்கப்படுகிறது. அதே சமயத்தில் வன்னியிலும்- மட்டக்களப்பிலும் ஏனைய தமிழர் அமைப்புக்களில் சில லொறிகளிலும் வியாபாரிகளிடமும் தமது நிதித் தேவைகளுக்கு பணம் பெறுகிறார்கள்.



துரதிஸ்டம் என்ன வென்றால் எதிர்தரப்பு மீது குற்றம் சாட்டிக் கொண்டே அதே தவறுகளை குற்றம் சாட்டுகிறவர்களும் செய்வதுதான்.

விளைவு- மக்கள் யார்மீது நம்பிக்கை கொள்வது என்று தெரியாமல் நடப்பது நடக்கட்டும் என்று நிகழ்ச்சிகளின் போக்குகளை பார்வையாளர்களாக இருந்து நோக்குகிறார்கள்.

பார்வையாளராக மக்கள் இருப்பது தெளிவற்ற அரசியலுக்கு மிக வசதி. அதன் தேவையும் இடையூறு செய்யாத- செய்யத் துணியாத பார்வையாளர்கள்தான். ■

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பில் மயூரபதி அம்மன் சித்திரத்தேர் பவனி. அன்றிரவே மைதானத்தில் கலை நிகழ்ச்சி. இளசுகள் தம்மை மறந்து பாடல்களுக்கு ஆடிக்களித்தனர். கவலையான விசயம் என்னவென்றால் குடு அடி மன்னர்கள் நல்லா இழுத்துப் போட்டு மண்ணில கிடந்ததுதான். மற்றொரு புறத்தில அடியடா பிடியடா சத்தம். என்னடா விசயம் எண்டு எட்டிப்பார்த்தா தம்பி ஒருவருக்கு தரும அடி விழுந்து கொண்டிருந்தது. விசாரித்து பார்த்தபோது தம்பி மகளிரில் மட்டும் முட்டித் திரிந்தாராம். செம சாத்தல். அப்பிடிப் போடுங்கோ. அதுதான் சரி.

இப்ப கிரிக்கெட் சீசன். இந்திய அணிக்கு கவலைதான். செஞ்சரி போட்ட போதும் கைதட்டல் குறைவாத்தான் கேட்டுதாம். இலங்கை அணியில் முரளி இருந்தும் ஆடவாய்ப்பு இல்லாமல்போனது வருத்தமான விசயம்தான்.

கிரிக்கெட் என்ற உடனதான் நினைவுக்கு வருகுது பாருங்கோ. ஜனாதிபதியின் ஆலோசகர் மிஸ்டர் பிரட்மன் சகல பிரதமர்களோடும் பணி செய்தவர். அவர் ஒரு புத்தகம் எழுதினவர். மிஸ்டர் பண்டாரநாயக்க பிரதமராக இருந்தபோது அநுரா சிறு பிள்ளை. திடீரென்று ஒருநாள் அநுரா சத்தம் போட்டுக் கொண்டு தந்தையிடம் ஓடிவர அவர் "விசயம் என்ன மகனே" என்று கேட்க, "வேலைக்காரப் பையன் ஒழுங்காகப் பந்து போடேல்லையப்பா" என்று அநுரா சொல்லியிருக்கிறார். பண்டா வேலைக்கார பையனை அழைத்து விசாரித்தார். "ஐயா நான் விக்கெட்டுக்குத்தான் போடுகிறேன்" என்றான் பையன். பண்டா சொன்னார் "நீ பந்தை விக்கெட்டுக்குப் போடாதே தம்பியின் மட்டைக்குப் போடு" இப்போதும் அநுரா அப்படித்தான் அரசியலிலும் ஆடவிரும்புகிறாரோ தெரியவில்லை. இன்னொரு குறிப்பு. பிரபல இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பிரட்மனின் நினைவாகத்தான் திரு. பிரட்மன் வீரக்கோனுக்கு அவரது தந்தை அப்படிப் பெயர் வைத்தாராம். கிரிக்கெட் ரசனையில் இலங்கையரும் குறைவைக்கவில்லைப் பாருங்கோ.

சனி காலையில் வாரவலம் போகிறது இலங்கை வானொலி தமிழ்ச்சேவை. பயனுள்ள பல தகவல்கள். சிரத்தையான முயற்சி. ஒரு குறை. உலகில் இந்த நிமிடம் வரை என்று சொல்லும் சங்கதிகள் சாத்தியமற்றவை. சொல்லிக்கொண்டிருக்கும் போதே நூறு குழந்தைகள் பிறந்திருக்கும். தவிர உலகமெல்லாம் நடப்பதை உடனே அறியும் அளவுக்கு நம்மவர்களுக்கு வசதி வந்திருந்தால் அது உலக அதிசயம். அதுமட்டுமோ யாழ்குடாவும் உலகத்தில் ஒரு பகுதிதானே. அங்கே இந்த நிமிட பிறப்பும் இறப்பும் அரசுக்கே தெரியாதுங்கோ. எனவே குறை தவிர்க்க. நிறைகளை வரவேற்கிறோம். தமிழில் புதிய முயற்சிகளுக்கு எல்லோரும் கரம்கொடுக்க வேண்டும்தானே.

## நகர் ரவுண்டப்

**-ஒற்றன்-**

# கடற்கரையில் கேட்ட குரல்

கொழும்பில் ஒரு குட்டி யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்ட பகுதி வெள்ளவத்தை.

இப்போதெல்லாம் வெள்ளவத்தையில் மட்டுமல்ல கொழும்பின் மூலை முடுக்கெல்லாம் யாழ்ப்பாணத்து மக்கள் இருக்கிறார்கள்.

கொழும்பில் எங்கு போய் தடுக்கி விழுந்தாலும் "பார்த்துக் கவனமாய் போங்கோ" என்று தமிழ் குரல் ஒன்று அனுதாபம் பேசும்.

வெள்ளவத்தை சைவக் கடைகள் பிரபலமானவை. அதுவும் சூடான வடைக்கு சிங்கள மக்களிடமும் நல்ல கிராக்கி.

"தோசை மசாலவடை எப்பா" என்று கோசம் போட்டவனும் பொய்தான் சொல்லியிருக்கவேண்டும்.

வெள்ளவத்தை சைவக்கடை ஒன்றுக்குள் புகுந்து சூடாய் ரெண்டு வடை ஒரு ரீக்கு ஓடர் கொடுத்துவிட்டு அமர்ந்திருந்தோம்.

"மச்சான் இஞ்சைபார் ஒற்றன்" அருகே குரல் கேட்க எழுந்து ஓடி விடலாமோ என்று யோசனை வந்தது.

தோளில் தட்டி விட்டு எமக்கெதிரே அமர்ந்து அந்த இரு இளைஞர்களும் நட்போடு சிரித்தபோது தைரியம் வந்தது.

அந்த நேரம் பார்த்து வடையும் ரீயும் வந்து சேர சிறிய சங்கடம்.

ரெண்டு வடைக்கு ஓடர் கொடுத்தாலும் ஐந்து வடைதான் வரும். அது வடை வியாபாரத் தந்திரம். ரெண்டு வடை சாப்பிட இன்னொரு வடையும் சாப்பிடும் ஆசைவரும். ஆனால் எமது பொக்கற் நிலவரப்படி ரெண்டு வடை ஒரு ரீக்கு மேல் போனால் துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்ட தின்று போட்டு அடிவாங்க வேண்டிவரும்.

முன்னால் இருப்பது இருவர். முறியல் பாட்டியாக இருந்தால் கதை காலி.

சில காய்கள் இருக்கிறார்கள். 'எடுங்கோ' என்று சும்மா ஒரு சம்பிரதாயத்துக்கு சொல்லிவிட்டு குனிந்து பார்ப்பதற்கு இடையில் தட்டுக்காலி. இன்னும் ஒரு தட்டு நிறைய வந்தாலும் வஞ்சகம் இல்லாமல் உள்ளே அனுப்ப ரெடியாக இருப்பார்கள்.

எதற்கும் இருக்கட்டுமென்று ஒரு சிரிப்பை எறிந்துவிட்டு பதிலுக்கு அவர்களும் எறிய "எடுங்கோ" என்றோம்.

எடுத்தார்கள். கடித்தார்கள். தாமே ரெண்டு ரீக்கு ஓடர் கொடுத்தார்கள்.

"நாசமாய் போச்சு. இன்று யார் முகத்தில் விழித்தோம்" என்று முகங்களைத் தேடினோம்.

"கோல்பேஸ் விசயம் சுப்பர்."

"தாங்யூ" ஹி.ஹி....

"உங்களுக்கு இன்னொரு குட் நியூஸ். கோல்பேசைவிட பெரிய சங்கதியெல்லாம் மவுண்ட்லவேனியா- தெகிவளை கடற்கரைகளில் நடக்கிறது. தெரியுமோ" சொல்விட்டு ஒரு நமட்டுச் சிரிப்பு உதிர்த்தனர்.

ரீயை உள்ளே வேகமாய் அனுப்பி விட்டு- "அப்படி என்ன பெரிய சங்கதி"

"அதை நீங்களே போய் பாருங்கோ." என்று சொல்லிக்கொண்டு, வந்த பில்லுக்கு தாமே பணம் கொடுத்தனர். அந்த நேரத்தில் அவர்கள் செய்தது உலகப் பெரும் காரியம்.

என்னிடம் இருக்கிறது என்று பொய்யாக சொல்லி பொக்கற்றுக்குள் சிலோமோசனில் கையைக் கொண்டு போக, வேண்டாம் என்று அவர்களே கொடுக்க இதையெல்லாம் உங்களுக்கேன்.

செய்தியறிய மினிபஸ் ஏறி "பின்னாலே போ" என்பது தவிர நடத்துநருக்கு வேறு வார்த்தையே தெரியாதோ என்று யோசித்தபோது "பயின்ட" என்றொருவார்த்தையும் மேலதிகமாக தெரியும் என்பது போல் அவர் கூவ மவுண்ட்லேவினியா இறக்கத்தில் எம்மை கூட்டத்திற்குள் இருந்து உருவிக் கொண்டோம்.

காலையில் அயன்பண்ணி மடிப்பு வர ரசித்து போட்ட சட்டை. கந்தலாகக் கசக்கித் தந்தது கூட்டம்.

இறங்கி நடந்தபோது கடற்கரைக் காற்று சில்லென்று வந்து முகம் தொட்டு குளுமைச் சுகம் காட்டியது.

சூரியன் இன்று ஓவர்டைம் செய்யவே முடியாது என்று ஏதோ அவசர வேலையாக போய்க்கொண்டிருந்தது.

அழகான கடற்கரை. உல்லாசமாய் பொழுதைக் கழிக்க என்ன செய்யலாம் என்று பணத்தை வைத்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருக்கும் வெளிநாட்டுக்காரர்களுக்கு விருப்பமான இடம்.

கடற்கரை ஓரமாய் நடந்து கொண்டிருக்க எதிரே நாகரிகமணிகளாய் பெண்கள் சிலர் வந்து கொண்டிருந்தனர்.

விலகிச் செல்ல எத்தனிக்கையில்



"ஹலோ" என்று ஒரு குரல்.

"சத்தியமாக நம்மை இருக்காது" நினைத்துக் கொண்டு நழுவ--

மீண்டும்

"ஹலோ"

திரும்பிப் பார்க்க சத்தியமாக நம்மைத்தான். தலையை சுழற்றிப் பார்த்ததில் வேறுயாரும் அருகே இல்லை என்பதால் நம்மைத்தான்.

பத்திரிகையாளன் புத்தி உள்ளே இருந்து "விசயம் அறி விபரம் திரட்டு" என்று நச்சரித்துக் கொண்டிருந்தது.

உதட்டில் செயற்கைச் சிரிப்பு. வேண்டுமென்றே மார்புகளின் வளம் காட்டும் தீவிரமான முயற்சி. கூர்ந்து பார்த்தபோது வித்தியாசம் உணர்ந்தோம்.

அருகில் வந்தார்கள். ஆங்கிலத்தில் நாகரிகமாக கூட்டத்தில் இருந்து ஒரு குரல் கேட்டது.

"கம்பனி வேண்டுமா"

மூலதனமே பத்துரூபாய்க்கு உள்ளேதான் பொக்கற்றுக்குள் இருக்க கம்பனி நடத்த முடியுமா நாம்.

ஆனால் இவர்கள் கேட்டது வேறு விதமான கம்பனி.

பத்திரிகையாளன் புத்தியில் கேட்டோம்

"எவ்வளவு"

"எழுபத்தைந்து. ஹெத்த பகய்"

ஆங்கிலம் போய் சிங்களம் வந்தது. இனி என்ன வருமோ.

பதில் சொல்லாமல் ஒரே நழுவலாய் தாவினோம்.

"வந்து விட்டான் பார். இவனெல்லாம்" என்ற அர்த்தம் வரக்கூடியதாக முதுகின் பின்னால் பேசிக்கொண்டார்கள். ஆத்திரமாய் வந்தாலும் தூரத்தில் நின்று கண்காணித்துக் கொண்டிருந்த தடியான ஆசாமி பயமுறுத்தினார். அவர்தான் பெண் வாடகை நிலைய உரிமையாளர் என்று பின்னர் விசாரித்ததில் தெரிந்தது.

தூரநின்று கண்காணிப்பார்களாம். பேரத்தில் பிரச்சனை. அலுவல் முடிய கையை விரிக்கும் பாட்டிகள் ஆகியோரைக் கவனிப்பது- கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுப்பது போன்ற நிர்வாகப் பிரச்சனைகளை அவர்தான் கவனிப்பது வழக்கமாம். உதவியாக நாலு-ஐந்து கையாட்கள் ரெடியாக இருப்பார்களாம்.

கடலில் வெளிநாட்டு ஜோடிகள் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

மேலைய நாகரிகப்படி நீச்சலுடையில் பகிரங்க நீராடல்.

இதனை ரசிப்பதற்கே காற்று வாங்கும் சாக்கில் கடற்கரைக்கு இளைஞர்கள் பட்டாளம் ஒன்று தினமும் படையெடுத்துக் கொண்டிருக்கிறது.

இலவசமான ஆங்கிலப்படம். ரிக்கற் காசுக்கு கடலை வாங்கி கொறித்துக் கொண்டிருந்தார்கள்.

மேலைய நாகரிகம் உல்லாசப் பிரயாணிகள் வடிவில் கடற்கரைகளில் வக்கிர மனங்களுக்கு தீனி போடுகிறது. கவலையான சங்கதிதான்.

நினைத்தபடியே நடந்து கொண்டிருந்த போது இங்கும் இருளில் சில நிழல் உருவங்கள் அசைந்தது தெரிந்தது.

கண்களை கூர்மையாக்கிப் பார்த்ததில் ஆண்-பெண் ஜோடிகள். வழக்கமான முயற்சிகள்.

நாம் வேகமாய் நடந்து கொண்டிருந்தோம்.

திடீரென்று நமது தோளில் ஒரு கரம் விழுந்தது. திரும்பிப் பார்த்த போது நமது தகவல் வங்கியாளர் சிரித்தபடி நின்றிருந்தார்.

அவர் சொன்ன தகவல்களும் கடற்கரையின் புதர்கள் சொன்ன கதைகளும் அடுத்தவார - ரவுண்ட்அப்பில்.

அதுவரை அமைதி.

# அதிரடியான ஒரு போட்டி


★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ முரசு 10ல் இருந்து முரசு 29 வரை ரஜினி நடித்த படங்களில் காட்சிகள் வெளியிடப்படும்.
★ குறிப்பிட்ட படங்கள் சம்மந்தமான படங்களுக்குரிய விடைகளைக் கீழ்வரும் கூப்பனில் நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.

### போட்டிக்குத் தயாரா நீங்கள்?

கீழேயுள்ள படத்தைப் பாருங்கள். பார்த்து விட்டீர்களா? நல்லது. கீழேயுள்ள கூப்பனை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.



**இலக்கம்-02**

**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................

படத்தின் இயக்குநர் பெயர்:-..............................

ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................

இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## உலக ரவுண்டப்

# திரும்பிய படை விரும்பிய உணவு!

கம்போடியாவைப் பொறுத்த வரை ஐ.நா சபை சாதித்துத்தான் இருக்கிறது.

ஆயுதக் குழுக்களை அமைதிப் பேச்சில் ஈடுபடுத்தியதும். பேச்சோடு நிறுத்தாமல் பேச்சுவார்த்தை- பிறகு முறிவு என்று போகாமல் சூட்டோடு சூடாக தேர்தலையும் நடத்தி முடித்து விட்டது.

ஐக்கியநாடுகள் அமைதிப் படையினர் வெற்றிகரமாக சொந்த நாடுகளுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

அமைதிப்படையில் அங்கம் வகித்தவர்களில் மலேசிய நாட்டுப் படையினர் தொகை இரண்டாயிரம் பேர்.

அவர்கள் இரண்டு மாதம் கம்போடியாவில் பணியாற்றினார்கள். விரும்பிச் சாப்பிடும் உணவான 'மீஹைமூன்' கம்போடியாவில் கிடைக்காமல் போனதுதான் அவர்களுக்கு இரண்டுமாத கவலை.

மலேசியா திரும்பியதும் விமானத்திலிருந்து இறங்கியவுடன் மலேசியத் துருப்புக்கள் தமது விருப்பமான 'மீஹைமூன்' மீது பாயாத குறையாக ரசித்துச் சாப்பிட்டனர். மீனோடு நூடில்ஸ் கலந்து தயாரிக்கப்படுவதே மீஹைமூன் என்னும் உணவாகும்.

கம்போடியாவில் பணிமுடிந்திருக்கலாம். மலேசிய துருப்புக்களுக்கு மற்றொரு பணி காத்திருக்கிறது.

பொஸ்னியாவில் சேர்பியர்களால் வதைக்கப்படும் முஸ்லிம்களைக் காப்பாற்ற இஸ்லாமிய நாடுகள் படை அனுப்புகின்றன. அந்தப் படையில் மலேசிய துருப்புக்கள் 1500 பேர் செல்கின்றனர்.

பொஸ்னியாவுக்கு இஸ்லாமிய நாடுகளில் இருந்து செல்ல இருக்கும் போர்வீரர்களின் விபரம் அருகில்.




| நாடு | தொகை |
|---|---|
| இரான் | 10,000 பேர் |
| பாகிஸ்தான் | 3,000 பேர் |
| பங்களாதேஷ் | 1,220 பேர் |
| மலேசியா | 1,500 பேர் |
| டூனிசியா | 1,000 பேர் |
| துருக்கி | 5,500 பேர் |

# அம்ஸ்டர்டாமில் சிவன் சிலை

ஒல்லாந்தின் தலைநகரான அம்ஸ்டர்டாமில் உள்ள துரோப்பன் காட்சிச்சாலையில் ஜூன் முதல் வாரத்தில் புதிய காட்சி அரங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்து. அங்கு நடு நாயகமாகக் காணப்படுவது ஒரு சிவன் சிலை. கிபி.1400ஆம் ஆண்டளவில் இந்தோனேஷிய நாட்டின் ஜாவா தீவில் இந்தச் சிலை பெறப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. இதே காலகட்டத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சோழர் ஆட்சி பரவி இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

தலைநகரான ஜாக்கர்த்தாவுக்கு தென்கிழக்கே ஜொக் ஜாக்கர்த்தா என்ற நகரம் இருக்கிறது. இங்கிருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் பரம் பொன்னான் என்ற சிவன் கோயில் இருக்கிறது. இந்தக் கோயில் இன்று உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் ஓர் இடமாக விளங்குகிறது. இக்கோயிலின் கர்ப்பக்கிருகத்தில் அர்த்த நாரீஸ்வரர் கோலத்தில் மூர்த்தியிருந்ததாக நம்பப்படுகிறது. கர்ப்பக்கிருகத்தின் தெற்கே தட்சணா மூர்த்திக்குரிய பீடத்தில் விநாயகரும், மேற்கே லிங்கோற்பவ மூர்த்திக்கான பீடத்தில் அகத்தியரும் இருப்பதை அவதானிக்க முடியும். அம்ஸ்டர்டாம் காட்சியில் வைக்கப்பட்ட பொன்னாலான சிவன் சிலையும்



பரம்பொன்னான் கோவிலிலிருந்து எடுக்கப் பட்டதாக இருக்கலாம்.

டச்சுக் கிழக்கு இந்திய நிறுவனத்தின் கப்பல் ஒன்று கிபி1650ல் ஜாவா சென்று நங்கூரம் பாய்ச்சியது. அக்கால கட்டத்திலேயே அங்கு தங்க நகைகளை மக்கள் நேர்த்தியாக அணிந்திருந்ததைக் கண்டு டச்சு மாலுமிகள் ஆச்சரியமடைந்தனர்.

அதுமட்டுமல்லாமல் வீட்டுப்பாவனைப் பொருட்கள் பலவும் கூட தங்கத்தால் ஆக்கப்பட்டிருந்தன.

கிபி. 300 தொடக்கம் கிபி. 1,400 வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில் ஜாவாவில் பெறப்பட்ட விலை மதிப்பு மிக்க பொன் நகைகள் மற்றும் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்ட முதலாவது கண்காட்சிதான் துரோப்பன் காட்சிச்சாலையில் இடம் பெறுகிறது. சிவனுடன் வேறு பல இந்து சமய விக்கிரகங்களும் இக்காட்சியில் இடம் பெறுகின்றன.

ஜாவா தீவின் கிழக்கேயுள்ள பாலித்தீவில் இப்போதும் இந்துக்களே தனிச்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தோனேஷிய மொழியில் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிச் சொற்கள் நிரம்ப உள்ளன. அந்நாட்டின் மக்கள் பெயர்கள் யாவுமே சமஸ்கிருத மொழியிலானவை. எடுத்துக் காட்டாக முன்னாள் அதிபரையும் இந்நாள் அதிபரையும் குறிப்பிடலாம். முன்னாள் அதிபர் பெயர்: சுகர்ணோ.

சு-சுத்தமான; கர்ணோ-கன்னத்தை உடையவன்.

இன்றுள்ள அதிபரின் பெயர்: சுஹாட்டோ.

சு- சுத்தமான: ஹார்ட்டோ-இருதயத்தை உடையவன்.

இருதயத்துக்கான ஆங்கிலச் சொல்- ஹார்ட்

வடச்சொல்- ஹிர்தய

தமிழில்-இருதயம்.

# சவுதியில் தலை போனவர்கள்!

இலண்டனில் உள்ள சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் ஒன்றின்படி இந்த வருடம் மே 15ம் திகதிவரை சவுதி அரேபியாவில் கழுத்து சீவப்பட்டோர் தொகை 105 பேர்.

91-92 ஆண்டுகளைவிட இந்த வருடம் தலை போனவர்கள் எண்ணிக்கை அதிகம்.

போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக சமீபத்தில் இருவருக்கு சவுதி அரசு தலை சீவியது. ஒருவர் பாகிஸ்தானியர். மற்றவர் ஆப்கானிஸ்தானியர்.

பொது மன்னிப்புச் சபை கழுத்துச் சீவும் தண்டனை முறைக்காக சவுதி அரேபியா மீது குறை கூறியுள்ளது.

மனிதாபிமானமற்ற வகையில் நிறைவேற்றப்படும் தண்டனைகள் என்று கண்டித்தும் உள்ளது.

# இனி ஒரு விதி செய்வோம் அதனை எந்த நாளும் காப்போம்

அலசுவது - இராஜதந்திரி

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம், ஆனந்தம் தோழர்களே......!

என்ற பாடல்வரிகள் ஆடி மாதத்தின் சிறப்பை எடுத்தியம்புவதாக இருக்கின்றது. யாழ்ப்பாணம் நவாலியூர் பெற்றெடுத்த 'தங்கத்தாத்தா' சோமசுந்தரப்புலவர் பாடிய இப்பாடல் ஆடி மாதம் கொண்டுவரும் குதூகலத்தையும், அக்குதூகலத்தில் வயது வேறுபாடின்றி அனைவரும் பங்கெடுப்பதையும் பாடிப் பரவுவதாக இருக்கின்றது.

ஆடி மாதம் இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. ஏனெனில் ஆடிமாதத்தை அண்டிய காலப்பகுதியிலேயே வட இலங்கையில் நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவம் ஆரம்பமாகின்றது.

நல்லைக் கந்தன் உற்சவம் வடபகுதியினர் அனைவரையும் பக்திமயப்படுத்தும் அபூர்வசக்தி கொண்டது.

அதே வேளை ஆடிமாதத்திலேயே கண்டி மாநகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க எசல பெரஹர ஊர்வலமும் இடம்பெறுகின்றது. இலங்கையின் சிங்கள பௌத்த மக்களுக்கு இந்த பெரஹர உற்சவம் மத ரீதியாக மட்டுமல்லாமல், கலை, கலாச்சார ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றதொன்றாகவே விளங்குகின்றது.

இவைதவிர தலைநகரான கொழும்பு மாநகரிலும் ஆடிவேல் விழா ரம்மியமான உற்சவகாலச் சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகின்றது.

நாட்டுக்கோட்டை நகரத்தார் என்றழைக்கப்படும் கொழும்பிலுள்ள இந்திய வம்சாவளிச் செட்டிமாரினால் நடத்தப்படுவதே இந்த ஆடிவேல் உற்சவம்.

இலங்கையின் பிரபல கலைஞர்கள் மட்டுமல்லாது இந்தியாவின் முன்னணிக் கலைஞர்கள் பலரும் கலந்து உறவாடி சிறந்த முத்தமிழ் விருந்தை வழங்குவதாக இந்த ஆடிவேல் உற்சவம் விளங்குகின்றது.

ஆடிவேல் விழாவில் பங்கெடுத்துக் கொள்ளாத தென்னிந்திய இசைக் கலைஞர்கள் எவருமில்லை என்று கூறுமளவுக்கு, ஷேக்சின்ன மௌலான உள்ளிட்ட தவில், நாதஸ்வரக் கலைஞர்கள், மற்றும் கர்நாடக இசைப் பாடகர்கள் பலரும் கடந்த கால ஆடிவேல் விழாக்களில் பங்குபற்றியவர்களாகவே காணப்படுகின்றனர்.

தென்னிந்தியக் கலைஞர்களில் நாதஸ்வர வித்வான் ஷேக்சின்ன மௌலானா ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவராக இருக்கின்றார்.

கலைஞர் ஷேக் சின்ன மௌலானா இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவராவார். ஆயினும் இவரது நாதஸ்வர இசையுடன் இந்துக் கோயில்களில் சுவாமி வீதி உலாவ நடத்துவதை ஓர் அலாதியான அனுபவமாகவே தமிழகத்தவர்கள் கருதி வருகின்றனர்.

எனவே கொழும்பில் இடம் பெறும் இந்த ஆடிக்கால உற்சவமும் இன, மத, வேறுபாடுகளைக் கடந்த ஒரு சூழ்நிலையையே உருவாக்கி விடுகின்றது.

மேலும் இலங்கையின் தென்கோடியில் அமைந்துள்ள கதிர்காமக்கந்தன் ஆலய உற்சவமும் ஆடி மாதத்திலேயே இடம் பெறுகின்றது. இந்த உற்சவத்துக்கும் இன, மத, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து மக்கள் கூடுவது ஒரு பாரம்பரிய வழக்கமாகும்.

ஆடிக்காலம் இவ்வாறு இலங்கையர்கள் அனைவரையும் ஒரு பூரணமான உற்சவகாலச் சூழலை அனுபவிக்கத் தூண்டும் சக்தி வாய்ந்ததாகவே காணப்படுகின்றது.

ஆனால் இலங்கையில் ஆடிக் காலத்தின் இத்தகைய மகிமைக்கு 'கண்திருஷ்டி'பட்டது போலவே பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆடிக்கலவரம் பெருந்தீயாக கொளுந்து விட்டெரிந்திருந்தது. எதுவுமறியாத அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் தென்னிலங்கையில் காடையர் கூட்டத்தின் களியாட்டத்துக்கு இரையாகியிருந்தனர்.

1983ம் ஆண்டு இடம்பெற்ற ஆடிக்கலவரம் இலங்கையின் இனப்பிரச்சனை வரலாற்றில் எதுவும் புதிதானதல்ல. 1958ம் ஆண்டிலும் இலங்கையில் இனக்கலவரம் பூதாகாரமாக வெடித்திருந்தது. தொடர்ந்து 1977ம் ஆண்டிலும் இனக்கலவரம்இடம்பெற்றிருந்தது.

ஆனால் இக்கலவரங்கள் அனைத்துக்கும் மகுடம் சூட்டுவதுபோலவே 1983ம் ஆண்டின் ஆடிக்கலவரம் இலங்கையை அன்று ஆட்டங்காணச்செய்திருந்தது.

எதுவுமறியாத அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உடுத்த உடுபுடவைகளுடனேயே விரட்டியடிக்கப்பட்டிருந்தனர்.

வன்முறையை விரும்பாது தமிழர்களுக்கு அபயமளிக்க முன்வந்த சிங்களப் பொதுமக்களில் அநேகர் காடையர் கூட்டத்தை எதிர்கொள்வதில் தோல்வியையே தழுவியிருந்தனர்.

தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், வாகனங்கள், வியாபார ஸ்தலங்கள் என்பன 'யாககுண்ட'த்தினுள் விழுந்தவை போல தீப்பிழம்பாகியிருந்தன.

இத்தகைய கொடிய ஆடிக்கலவரம் இடம்பெற்று ஒரு தசாப்தம் தற்போது பூர்த்தியடைந்துள்ளது.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள், வீரியமாக நடைபோடுவதைவிட முடமாக அடிமேல் அடியெடுத்து வைப்பதாகவே காணப்படுகின்றன.

1983ம் ஆண்டு முதல் இன்று வரை கடந்த பத்து ஆண்டுகளில் தோன்றிய வன்முறைகள் பல்வேறு பரிமாணங்களையும் பெற்று, இரு நாடுகளுக்கும், அவற்றின் படை அணிகளுக்குமிடையிலான ஒரு மோதல் இடம்பெறுவதையொத்த சூழ்நிலையையே இன்று இலங்கையில் உருவாக்கி விட்டுள்ளது.



இலங்கையில் இனக்கலவரத்தின் தாக்கத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுவதாக அவசரக்காலம்-58 (Emergency-58) என்ற ஆங்கில நூல் விளங்குகின்றது.

இலங்கையின் புகழ் பெற்ற பத்திரிகையாளர்களில் ஒருவரான திரு.தாஸி வித்தாச்சி (Tarzie wittachi)என்பவரே இந்த நூலை எழுதியிருந்தார்.

திரு.தாஸி வித்தாச்சி 1958ம் ஆண்டில் இலங்கையின் ஒப்ஸோவர் (Observer)பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்திருந்தார்.

அப்போது தமது காரியாலய அறையின் ஜன்னல் ஊடாக அப்பாவித்தமிழர் ஒருவர் தாக்கப்பட்ட காட்சியைக் கண்டதையடுத்தே தாம் அந்த நூலை எழுத முன்வந்ததாக திரு. வித்தாச்சி குறிப்பிட்டிருந்தார்.

1958ம் ஆண்டில் வெடித்திருந்த இனக்கலவரத்தையும், அதனைக் கட்டுப்படுத்த ஆட்சியாளர்கள் தவறியிருந்ததையும் அப்பட்டமாக அந்த நூலில் திரு.வித்தாச்சி சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழ்ப்பேசும் மக்களுக்கு எதிராக தென்னிலங்கையில் வெடித்த இனக்கலவரத்தின் கொடுமையை தென்னிலங்கையரும், பிரபல பத்திரிகையாளருமான திரு. தாஸி வித்தாச்சியே முதல் தடவையாக நூல் வடிவம் கொடுத்து வர்ணித்திருந்தார்.

எனவே 1958ம் ஆண்டு தமிழ்பேசும் மக்களுக்கெதிராக ஆரம்பித்த வன்முறைகள் இன்றுவரை ஒரு தீராத நோயாகவே இரந்து வருகின்றன.

அரசியல் ரீதியாக இனப் பிரச்னைக்குத் தீர்வொன்றை எட்டுவதற்கு எடுத்த முயற்சிகள் யாவும் வீணாகிப் போனவையாகவே காணப்படுகின்றன. அத்துடன் இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளை முன்னெடுப்பதற்கும் திராணியற்ற நிலையிலேயே இலங்கை அரசு காணப்படுகின்றது.

ஆனால் அப்பாவித் தமிழ் பேசும் மக்களின் நிலையோ வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமல்லாது, தெற்கிலும் கெடுபிடிகள் நிறைந்ததாகவும், அவர்களின் நாளாந்த வாழ்க்கைகூட நிச்சயமற்றதாகவும் காணப்படுகின்றது.

இந்நிலையில் 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை அனுஷ்டிப்பதாகக் கூறி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் வடக்கே முல்லைத் தீவுப்பகுதியில் இராணுவ நிலைகளைத் தாக்கி இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதத்தை ஏற்படுத்தி விட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்திடீர் தாக்குதல், இராணுவ நடவடிக்கைகளில் அவர்கள் தளாச்சியடைந்து விடவில்லை என்பதனையே புலப்படுவத்துவதாக இருக்கின்றது.


மறுபுறத்தே இலங்கை அரசின் நிலைப்பாட்டைக் கவனிக்குமிடத்து இனப்பிரச்சனையின் தாக்கத்தினால் இலங்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை ஆட்சியாளர்கள் நன்குணர்ந்துள்ள தன்மையே தற்போது காணப்படுவதாக இருக்கின்றது.

ஜனாதிபதியின் உயர்மட்ட ஆலோசகர்களில் ஒருவரான திரு. பிரட்மன் வீரக்கோன் கூட அண்மையில் பத்திரிகையாளர்களிடம் கருத்து வெளியிட்டபோது, இனக்கலவரத்தின் மூலம் நாம் நல்ல பாடத்தைப் படித்துள்ளோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

எனவே ஆட்சியார்கள் கடந்த பத்தாண்டுகளில் இனப்பூசலின் விளைவாக நாடு அடைந்துள்ள நஷ்டத்தை தெளிவுற உணர்ந்துள்ளவர்களாகக் காணப்படுகின்ற போதிலும், தீர்வொன்றைக் கொண்டுவருவதிலேயே திக்குத்திசை தெரியாதவர்களாகத் தடுமாறி நிற்கின்றனர்.

தென்னிலங்கையில் நிலவும் அரசியல் நிலவரத்தை ஆராயும்போது, நாட்டின் பிரதான பிரச்னையாக விளங்கும் இனப்பிரச்சனையைத் தீர்த்துவைப்பதற்கான அணுகுமுறைகளை விரைவுபடுத்துவதைவிட, எதிர்க்கட்சிகளின் உட்பூசல்களைப் பெரிதுபடுத்தும் தன்மையே தற்போது முக்கியம் பெற்றதாகக் காணப்படுகின்றது.

இதுதவிர அரசியல் அமைப்பிலும் மாற்றத்தைக் கொண்டுவந்து நாட்டில் புதிய நிர்வாக முறையை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதிலும் ஆர்வங்காட்டும் நிலை காணப்படுகின்றது.



புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் காட்டப்படும் நாட்டம் வரவேற்கப்படக்கூடியதாகவே விளங்குகின்றது.

ஏனெனில் இனப்பிரச்னையைப் பொறுத்தவரை, அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகள் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளதை நன்கு அறியக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது புதிய அரசியலமைப்புப் பற்றியே பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

அரசியலாளர்களும், புத்திஜீவிகளும் கூட அரசியலமைப்பு ரீதியாக ஒரு மாற்றம் ஏற்படுவதையும், ஆட்சி, அதிகாரமுறைகளில் புதிய திருப்பம் ஏற்படுவதையுமே விரும்புபவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆனால் புதிய அரசியலமைப்பானது வெறுமனே ஆட்சி, அதிகார விடயங்களில் மட்டும் மாற்றங்களைக் கொண்டுவருவதுடன் மட்டுமல்லாது, இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணும் வகையிலும் மாற்றம் பெற்றதாக அமைந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை வன்முறைகளும், இராணுவ ரீதியிலான நடைமுறைகளும் நீடிப்பது நாட்டு மக்கள் அனைவருக்குமே பாதிப்பை ஏற்படுத்துவதாகவே காணப்படுகின்றது.

அரசியல் ரீதியாக வட்டமேசை மகாநாடுகளையும், பேச்சுவார்த்தைகளையும், வாதப்பிரதிவாதங்களையும் நடத்தியபோதிலும் தீர்வொன்றைக் காண்பதற்குத் தவறியவர்களாகவே ஆட்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் ஆட்சியாளர்கள் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் போது இனப் பிரச்சனைத் தீர்வொன்றுக்கே முதன்மையளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இல்லையேல் இலங்கையின் இனப்பிரச்னை ஒரு தொடர்கதையாகவே மாறிவிடுவதுடன், எதிர்காலச் சந்ததியினர் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பகுதியை ஓர் அந்நியப் பிரதேசமாகவே நோக்கும் சூழ்நிலை தோன்றுவது தவிர்க்க முடியாததாகி விடும் எனக் குறிப்பிடலாம்.

எனவே மகாகவி பாரதியாரின் பாடல் வரிகளான 'இனி ஒரு விதி செய்வோம் அதனை எந்த நாளும் காப்போம்' என்பதற்கிணங்க புதிய அரசியலமைப்பொன்றை ஏற்படுத்தும் பட்சத்தில் அதனை இந்நாட்டின் 'புதிய தலை விதியாக வடிவமைத்து அனைத்து மக்களும் அதனைப் போற்றும்படி செய்வதே இன்றைய சூழலில் இன்றியமையாததாகின்றது.

# நீங்கள் அழகானவர்கள்தான் மேலும் அழகாக சில குறிப்புக்கள்!



★ மருந்து கலந்த சோப்புக்கள் அல்லது அதிகம் ஆல்கலைன் கலந்த சோப்புக்கள் சருமத்தைப் பாதிக்கும். பாசிப்பயறு அல்லது உளுத்தம் பருப்பு மாவு சருமத்திற்கு ஏற்றது.

★ முகத்தின் சுருக்கத்தையும், சருமத்தின் முதிர்ச்சியையும், வெயிலின் பாதிப்பால் சருமத்தில் ஏற்படும் உபாதைகளையும், தடுக்க விற்றமின் 'சி' சாப்பிடுவது நல்லது. மாத்திரையாகவும் சாப்பிடலாம். அல்லது சிட்ரஸ் பழச்சாறுகளாகவும் சேர்த்துக் கொள்ளலாம்.

★ உருளைக்கிழங்கு, அல்லது வெள்ளரிக்காயைச் சிறு வட்ட வடிவத்துண்டுகளாக வெட்டி 10 நிமிடங்கள் கண்களைச் சுற்றி வைத்திருந்தால், களைப்பின் காரணமாகக் கண்ணைச் சுற்றி இருக்கும் வீக்கம் குறையும்.

★ பாசிப்பயறு மாவு ஒரு தேக்கரண்டி, பால் ஒரு தேக்கரண்டி எடுத்து, இரண்டையும் கலந்து முகத்தில் தடவி, 10 நிமிடங்கள் வைத்திருந்த பின்பு, தண்ணீர் கொண்டு முகத்தைக் கழுவுங்கள். முகத்திற்குப் புத்துணர்ச்சியும் பளபளப்பும் ஏற்படும்.

★ படுக்கப் போவதற்கு முன்பாக முகத்தில் இருக்கும் அனைத்து மேக்கப் சாதனங்களையும் சோப்புக் கொண்டு சுத்தமாகக் கழுவிவிடுங்கள். இப்படிச் செய்வதனால் சருமம் பாதுகாக்கப்படும்.

★ உலர்ந்த சருமத்திற்கு தேங்காய் எண்ணெய் அல்லது வேறு தாவர எண்ணையைத் தடவி வருவது நல்லது.

★ தினமும் 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வது உடம்பின் கொழுப்புச் சத்தைக் குறைத்து உடலை மெருகேற்றும்.

★ முட்டை வெள்ளைக் கருவை மட்டும் தனியே பிரித்தெடுத்து முகத்தில் தடவி 10 நிமிடங்கள் வைத்திருந்த பின்பு தண்ணீரில் முகத்தைக் கழுவுங்கள். முகத்தில் சுருக்கம் ஏற்படாது பாதுகாக்கும்.

★ இனிப்பு வகைகள், சொக்கிளேட்டுக்கள் உடம்பில் கொழுப்புச் சத்தை அதிகரிக்கும். கொள்ளு கொழுப்புச் சத்தைக் குறைக்கும். தினமும் கொள்ளில் சூப் செய்து ஒரு டம்ளர் குடித்து வந்தால் உடலில் உள்ள கொழுப்புச் சத்தைக் குறைத்து உடலை அழகுபடச் செய்யும். வெள்ளைப் பூண்டிற்கும் கொழுப்புச் சத்தைக் குறைக்கும் தன்மை உண்டு.


★ ஒவ்வொருமுறையும் சாப்பிட்ட பின்பும், மற்றும் காலையும், இரவும் பிரஷ் கொண்டு பற்களைச் சுத்தம் செய்து வந்தால் பல் பளபளவென இருக்கும்.


★ வெடிப்பு உள்ள பாதத்தை 15 நிமிடங்கள் வெதுவெதுப்பான நீரில் தினமும் ஊறவைத்துப் பின்பு நீரை நன்றாகத் துடைத்து எடுத்து விடுங்கள். சலிசிலிக் அசிட் களிம்பைத் தொடர்ந்து தடவுங்கள். வெடிப்பு மறைந்த பின்பு வெஸ்லின் தடவி வந்தால் மீண்டும் வெடிப்பு வராது.


## லேடீஸ் ஸ்பெசல்

# நீங்களும் தைக்கலாம்

## மூன்று வயது குழந்தைக்கு




**வெட்டு அளவுகள்:** 1 செ.மீ=2" (அங்குலம்)

O-A. கவுன்யோக் நீளம் 7"
O-B. தோள் அளவு 4 1/2"
B-E மார்பு சுற்றளவில் 4-ல் ஒரு பாகத்தில் 1/2" மேல்
4-F மார்பு சுற்றளவு (20") 20+5 (25 4) 6.25
O-C கவுனின் முழு நீளம் 18"
A-D முழு டவுரில் 4-ல் ஒரு பாகம் 12"
2-3 படத்தில் காட்டியதுபோல் முன் கழுத்து வரையவும்
A-5 1/2" கீழே இறக்கி வரையவும்.
குறிப்பு: கையும், கொலரும் படத்தில்காட்டியது போல் வரையவும். கொலர் குறுக்குத் துணியில் வெட்டவும்.

# வனப்பான உடலுக்கு வாகான பயிற்சி



நிமிர்ந்து நில்லுங்கள். குதியை ஓரளவு உயர்த்தியவண்ணம் இரு கைகளையும் முன்புறம் உயர்த்துங்கள். கால்கள் இரண்டையும் சற்று அகலமாக வைத்துக் கொள்ளுங்கள். இடுப்பிலிருந்து மேல் பாகம் மட்டும்தான் வளையவேண்டும். குனிந்த நிலையில் கைகளை வலது புறமாக எடுத்து தலைக்கு மேலே கொண்டு வரவும். பின்னர் இடது புறமாக வளைந்து முன்பிருந்த குனிந்த நிலைக்கு வரவும். இதே போல் மேலும் நான்கு தடவைகள் செய்யுங்கள். பின்னர் இடது புறமாக கைகளை நகர்த்தி அதே முறையில் வலது புறமாக வளைந்து மேலே உயர்த்தி மேலே கைகளைக் கொண்டு வந்து ஆரம்ப நிலைக்கு வாருங்கள். இதனையும் மேலும் நான்கு தடவைகள் செய்யுங்கள்.

ஒவ்வொன்றையும் 5 முறை செய்த பின்னர் சற்று உடலைத் தளர்த்தி சில நிமிடங்கள் நின்ற பின்னர் 12 நிமிடங்கள் வேகமாக கைகளை வீசி நடவுங்கள். சென்ற வழியே திரும்பி 10 நிமிடங்களில் வந்து சேருங்கள்.

மீண்டும் உடலின் அங்கங்களை நன்றாகத் தளர்த்தி ஓய்வெடுங்கள். இந்தப் பயிற்சி பெண்களுக்கு மட்டுமே. ஆண்கள் செய்து பார்த்தால் அதனால் ஒன்றும் நட்டமில்லை. பெரிய லாபமும் இல்லை.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்குகொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் (கடந்தவார முரசு) வரப்போகும் 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

# தேன் கிண்ணம்

இம்முறையும் சூடான எண்ணங்களால் நிரம்பியதால் கிண்ணம் படு சூடு. படவேண்டிய சூடுதான்.

### அவளுக்காக....!

இத்தனை
காலமும்
எனக்குள்
தவமிருந்து
தன்
காவி உடை
களைந்து
புறப்படுகின்ற
இந்த
வார்த்தைகள்....!

வாழ்வின்
பாதிவரை
துயர
மேகத்தினுள்
புதைந்த
எனை
மீட்டு வந்தவளுக்கு!

இந்தக்
காய்ந்த
செடியும்
பூக்களை
பிரசவிக்க
ஆசைப்படுகிறதே
அதுவும்...!

இந்த
வார்த்தைகள்
வெறும்
பிரவேசம்
அல்ல
பிரசவமும் கூட!

ஒரு
பூவிழி
என்
இதயத்தினுள்
புகுந்து
விழா
எடுத்தபோது!

உள்ளே
தெரிந்த
வார்த்தைகளின்
வாசனைகள்
இவை!

என்
சோலைக்குள்
தெரிகின்ற
புதுச்
சுனைகள்
அத்தனையும்
இனி
அவளின்
நீராடலுக்கு....!

இவன்
'அற்புதன்'

### துப்பாக்கிகளின் தேசம்

திரும்பவும் திரும்பவும்
விமானங்கள் வட்டமிடும்.
தீ முட்டைகளை உமிழ்ந்து
மேற் சென்று மறையும்.

குண்டு குழியுமாய் எனது நிலம்
பிளந்து சிதறும்
செந்நீர்க் குளங்களிலே
சதைத்துகள் கரையொதுங்கும்

தேசம் குரலொடுங்கி
மெல்ல மெல்லச் சாகும்.
மக்களோ
காரணங்கள் அறியாராய்
காவாகிக் கொண்டிருப்பார்.

இழப்பதற்கு
உயிர் அற்றுப் போன பின்னர்
எமது தேசம்
விடுதலை பெறுமென்று
அசரீரிகள் ஒலிக்கும்.

அசரீரிகள் சேர்ந்து பின்
ஆட்சி ஒன்று அமைக்கும்
அரசு கட்டிலில் துப்பாக்கி
ஏறி அமர்ந்திருக்கும்.

போரும் திசையற்று
போராட்டமும் திசையற்றுப்
போனபின்னும் துப்பாக்கி
ஆட்சி செய்யும் நாட்டுக்கு
சுதந்திர ஈழமென்று
அசரீரி குரலெழுப்பும்.

செல்வி: வில்சம்
பதுளை.

### பேதை

சூரியன் செல்லும்
திசையெல்லாம்
திரும்பும்
சூரியகாந்திப் பெண்ணே!

நீ இப்படி
வளைந்து கொடுப்பதால்தான்
அவன் எழுந்து மறைந்து
உன்னை தினமும்
ஏமாற்றிக்கொண்டே
இருக்கிறான்!

செல்வி-ஸப்னா
ஹெம்மாதகம.



### என்னில் நீ!

ஒலியிலாது
உதடசைத்து
நீ மொழிபேசு
அது
எனக்குமட்டும்
கேட்கும்!
இமை மூடி
உன் விழிகளினால்
சேதி சொல்லு
என்
இதயம்
அவைகளை அறியும்!
எழுத்துக்களில்லாமல்
கடிதங்கள்
வரைந்திடு
அதை
தொட்டுணர்ந்து
என்
விரல்களால் வாசிக்க முடியும்!
உன்
ஞாபகங்களை
என்னில்
நீ
விதைத்த போதே
என்
சுவாசங்களும் உன்னில் தான்!

கே. கனகராஜா
நுவரெலியா.



### ஒரு சபதம்

மனித விழுதுகளை
செல்லரித்து போடும்
இனவாதம் தனை
ஏந்தி-
எரித்திட
ஒரு சபதம்
செய்வோம்.....

செம்மணி கடலையும்
கனத்தை மயானமும்
எங்களின் அணிவகுப்பில்
இழுத்து மூடப்படும்....

மானுட தர்மமும்
மனிதாபிமானமும்
மறு அவதாரமாக
மனசில் குடிகொள்ளும்

இளைஞர்களே.....
எமது மூச்சுக்காற்றில்
இனவாதிகள்
ஊர்ந்து போவர்
எம்
உஷ்ண பேச்சில்
இனத்துவேஷம்
கருகிப் போகும்....

அ. றஜீசன்.

### மீண்டும் மகாபாரதம்

துப்பாக்கிதான்
இன்று
நம் நாட்டின்
துச்சாதனன்.....
மனிதர்களிடத்தில்
உயிர்ச்சேலைகளை
துகிலுரிவது மட்டுமல்ல
குருதியையும் குடிக்கிறான்.
கண்ணனின்
சமாதானம் இங்கு
செல்லுபடியாகாது.
பாதுகாப்பு வளையம் இட்ட
இராணுவ பலசாலிகள்
இவனிடம்
இரையாகிப் போனார்கள்
இனி
பீமனும், பீஷ்மரும்
வந்தாலும் முடியாது.
"ஊசிமுனை நிலமும் இல்லை"
என்றால்
துப்பாக்கிதான்
கதை பேசுகிறது.

ஏ.எஸ்.எம். நவாஸ்.

### விடையில்லா வினாக்கள்!

வாழ்க்கை உங்களை
முறித்துக் கொள்ளும்
மரணங்கள் உங்களை
அழைக்கத் தொடங்கும்
விதியின் அரவணைப்பை
உங்களால் முறியடிக்க முடியாது!

மரண தேவதையின்
அவசர 'விசாக்கள்'
உங்களை
தயாராக இருக்கும்படி
உத்தரவு விடும்!

மூலை முடுக்குகளிலுள்ள
துப்பாக்கிகளின்
"உதடுகள்"
உங்கள் பெயர்களை
உச்சரிக்கும்.

இன்று நீயா?
நாளை நீயா?
என்று கொட்டாவி
விட்டுக் கொண்டிருக்கும்

மரணிக்க நினைக்கும்
உங்கள் இதையங்களுக்கு
எத்தனை வேதனைச் சுமைகள்
தொலைந்த முகங்களை
நினைப்பதா?
தொலையப்போகும் முகங்களை
எண்ணுவதா?
கேள்விக்குறியே
உங்கள் வினாவுக்கு
முற்றுகையிடும்!

ஆரையம்பதி-த.மலர்ச்செல்வன்.







# விமானம் ஓட்டிய மனிதக் குரங்கு உலக வரலாற்றில் முதல் சாதனை!

மனிதர்களுக்கு· மனிதர்களால் தொல்லைகள் ஏற்படுவதுண்டு.

நம்பிக்கை வைத்த மனிதர்கள் சிலரே 'புரூட்டஸ் நீயுமா' 'என்று கேட்கவைத்து விடுகிறார்கள்.

ஆனால் விலங்குகள் மத்தியில் மனிதர்களுக்கு உதவும் குணம் கொண்டவை உண்டு. தம்மை நேசிப்பவர்களுக்காக தம்மையே அர்ப்பணிக்கும் அரிய குணம் விலங்குகளிடம் இருக்கிறது.

நம்மத்தியில் உள்ள சில மனிதர்கள் விலங்குகளிடம் கற்றுக்கொள்ள நிறைய விசயங்கள் இருக்கின்றன.

மொன்ரானா என்னும் இடத்தில் பபூன் குரங்கொன்று செய்துள்ள சாகசம் அடர்த்தியான ஆச்சரியத்தை உருவாக்கியுள்ளது. நம்பமுடியாத சாகசம் அது.

செகானா என்பவர் ஒரு விமானி. 40 வயது.

மனிதக்குரங்கென்று அழைக்கப்படும் பபூன் குரங்கொன்றை செகானா செல்லமாக வளர்த்தார்.

விமானத்தில் செல்லும் போதும் அதனைக் கூடவே அழைத்துச் செல்வது அவரது பழக்கம்.

அன்றும் அப்படித்தான். வானத்தில் பறந்து கொண்டிருந்த போது அவருக்கு மயக்கமான நிலை ஏற்பட்டது. அப்படியே இருக்கையில் சாய்ந்து சுயநினைவை இழந்தார்.

வழக்கமாக அவரோடு பயணம் செய்யும் போது விமானத்தை அவர் எப்படி இயக்குகிறார். என்பதை பபூன் குரங்கு அவதானித்து வந்தது.

அதனால் அன்று விமானி மயக்கமடைந்ததும் பபூன் குரங்கு விமானியின் இருக்கையில் அமர்ந்து கொண்டது. தனது எஜமானர் இயக்குவது போலவே விமானத்தை இயக்கி ஒரு பாதையில் பத்திரமாக இறக்கியது.

அந்த விமானம் ஓடு பாதையருகே ஹால்சே என்பவர் தனது நாயுடன் உலாவிக் கொண்டிருந்தார். வழக்கமாக கையோடு புகைப்படக்கருவி ஒன்றை கொண்டு செல்வது அவரது பழக்கமாகும்.

ஒரு விமானம் ஆடியபடி கீழே இறங்குவதை அவதானித்த ஹால்சே விமானத்தை கூர்ந்து பார்த்தார்.

என்னே ஆச்சரியம். விமானியின் இருக்கையில் குரங்கு. உடனடியாக தனது புகைப்படக் கருவிக்கு வேலை கொடுத்தார்.

விமானம் இறங்கியதும் அவர் ஓடிச்சென்று உள்ளே பார்த்தபோது விமானி மயங்கிக் கிடந்ததையும், குரங்கு விமானத்தைச் செலுத்தியதையும் புரிந்து கொண்டார்.

விமானி தனது ஆசனத்தில் மயங்கிக் கிடந்ததையும் குரங்கு விமானத்தைச் செலுத்தியிருப்பதையும் நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்டார். விமானியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காக அம்பியூலன்ஸ் வண்டியின் வருகைக்காகக் காத்திருக்கும் போதே விமானி சுயநினைவு பெற்று எழுந்துள்ளார்.

"பாப்பி என்ற பபூன்குரங்குக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்" என்று விமானி கூறியிருக்கிறார்.

"விமான வரலாற்றில் ஒரு பபூன்குரங்கு விமானத்தைச் செலுத்திய புதுமை இப்பொழுது தான் நடந்திருக்கிறது. மனிதர்களாலேயே ஒரு விமானத்தை பத்திரமாகத் தரை இறக்குவது மிகக்கடுமையான வேலை. இதனை ஒரு குரங்கே செய்திருப்பது விசித்திரமானது. என்று விமானவியல் அதிகாரிகள் கூறுகின்றனர். விமானவியல் சஞ்சிகையின் ஆசிரியர் ஒருவர் தனது குறிப்பில், "இது ஒரு சிஐஏ (உளவுப்பிரிவு) யின் நடவடிக்கை போல் எனக்குத் தெரிகிறது. அமெரிக்க அரசாங்கம் ஏப் குரங்குகளுக்கும் விமானம் ஓட்டும் பயிற்சி அளித்திருக்கிறது போலிருக்கிறது" என்று கிண்டல் செய்து எழுதியிருந்தார். இதனை அரச அதிகாரிகள் மறுத்துள்ளனர். "மனிதர்களுக்கு விமானம் ஓட்டும் பயிற்சி அளிப்பதற்கே ஏராளமான பணம் தேவைப்படுகிறது. அவ்வாறிருக்கும் போது, 400 லட்சம் டொலர் பெறுமதியான விமானத்தை ஓட்டுவதற்கு குரங்கை அனுமதிக்க முடியுமா?" என்று அதிகாரிகள் வினவுகின்றனர்.






## ராட்சத டைனோசர் விஞ்ஞானியை விழுங்கியது! வியப்பின் எல்லையில் விஞ்ஞானிகள்!!

நம்மைச் சுற்றி உலகில் எத்தனை வியப்பான சாதனைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன தெரியுமா?

ஆறரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தது போன்ற 80 அடி டைனோசர் ஒன்றை பிரிட்டனையும் அமெரிக்காவையும் சேர்ந்த விஞ்ஞானிகள் பிடித்துள்ளனர்.

பாரிய உருக்கு உடல் கொண்ட அந்த பிராணியைப் பிடிப்பதற்கு ஒரு பெறுமதியான விஞ்ஞானியை விலையாகக் கொடுத்துள்ளனர்.

உயிராகக் கொடுக்கப்பட்ட விலை.

சிக்காக்கோவைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானி றிச்சாட்டை டைனோசர் விழுங்கிவிட்டது.

நடந்த கதை இதுதான்.

அமெரிக்க பிரிட்டன் விஞ்ஞானிகளைக் கொண்ட குழுவொன்று பிரேசில் காடுகளில் ஆய்வு நடத்தச் சென்றது.

காட்டுக்குள் பாரிய காலடிகள் சில அவர்களின் கண்ணில் பட்டன.

பாரிய பிராணி ஒன்றின் காலடியாகவே அவை இருக்கக் கூடும் என்று ஊகித்த விஞ்ஞானிகள் அந்தக் காலடிகளைத் தொடர்ந்து சென்றனர். அவ்வாறு சென்றவர்கள் ஒரு ஏரியை அடைந்தனர்.

ஏரியில் நீர் அருந்த அந்த பிராணி வரக்கூடும் என்று கருதி அங்கேயே முகாம் போட்டுக் காத்திருந்தனர்.

ஏழுநாட்கள் இரவு பகலாக காத்திருந்தவர்களுக்கு ஏழாவது நாள் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம்.

காட்டுக்குள்ளிருந்து 80 அடி உயரமான டைனோசர் ஒன்று ஏரிநோக்கி வந்தது. உடனே சில விஞ்ஞானிகள் தமது கமராவை முடுக்கி விட்டனர். கிளிக். கிளிக். கிளிக்.

விஞ்ஞானி றிச்சாட்டுக்கு ஆர்வம் விடவில்லை.

டைனோசரை அருகில் சென்று பார்க்கும் எண்ணம் ஏற்பட்டது.

எண்ணத்தை நிறைவேற்றினார் டைனோசரின் அருகே சென்றார். சக விஞ்ஞானிகள் தடுத்தும் கேளாமல் விரைந்து சென்றார்.

மனிதனைக் கண்ட டைனோசருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ஒரே அமுக்கு. டைனோசரின் வாயில் தமது சக விஞ்ஞானி சிக்கியதைக் கண்ட விஞ்ஞானிகளுக்கு அதிர்ச்சிதான். செய்வதறியாது திகைத்தபோதும் அவர்களது கமரா இயங்கிக் கொண்டே இருந்தது.

மறுநாள் நகருக்கு சென்ற விஞ்ஞானிகள் பிரேசில் நாட்டு அதிகாரிகள் உதவியோடு காட்டுக்குத் திரும்பினார்கள்.

ஒரு உயிருள்ள ஆட்டில் ஏராளமான மயக்க மருந்துகளை கட்டி வைத்துவிட்டுக் காத்திருந்தனர்.

டைனோசர் வந்தது.

ஆசையோடு ஆட்டைக் கவ்வியது. அப்படியே மயக்கத்தில் சரிந்தது.

இரும்புச் சங்கிலிகளால் அதனைப் பிணைத்து மயக்க நிலையில் ஆய்வு கூடத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

ஆய்வுகள் முடிந்த பின்னர்தான் அதனை உயிரோடு விடுவதா இல்லையா என்று தீர்மானிக்கப்போகிறார்கள்.

இந்த டைனோசர் எங்கிருந்து வந்தது என்பது விஞ்ஞானிகளுக்கு புரியாத மர்மமாக இருக்கிறது. ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னரே பாரிய டைனோசர் இனம் அழிந்து போய்விட்டதாகவே இதுவரை நம்பப்பட்டது.

இந்த டைனோசர் வேறு உயர்தர விஞ்ஞானிகளின் ஆய்வுகூட உருவாக்கமா என்றும் சில விஞ்ஞானிகள் சந்தேகப்படுகின்றனர்.

ஆய்வுகள் நடக்கின்றன.

ராட்சத டைனோசர் முடிவுக்காக காத்திருக்கிறது.

வயிற்றுக்குள் பாவம் றிச்சாட்.

அதிர்ச்சிதான் என்றாலும் இது ஒரு உலக அதிசயப் போட்டோ!





## இமயம் ஓய்வு பெறுமா?

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அரசியலுக்கு முழுக்குப் போட்டு விட்டார். கையோடு சினிமாவுக்கும் முழுக்குப் போடுங்கள் என்று குடும்பத்தினர் சொல்கிறார்களாம்.

கலை உள்ளம் ஓய்வு கொள்ள எண்ணுமோ? என்றாலும் மிகச் சில படங்களில் மட்டுமே நடிக்க முடிவு செய்துள்ளாராம். பலர் கேட்டும் மறுத்துவிட்டார்.

## வரவு எட்டணா செலவு பத்தணா

குடும்பக்கதைகளை இயக்கி [illegible] விசுவின் வாரிசாக இருப்ப[illegible] வி.சேகர். (எஸ்.வி.சேகரல்ல[illegible]) குறைந்த செலவில் படங்க[illegible] வழங்கி வந்த சேகர் இப்போ[illegible] பிரபுவை வைத்து அடி-[illegible] படமொன்றை தரப் போகி[illegible] படத்தின் பெயர் வரவு எட்[illegible] செலவு பத்தணா.

தாராளமாகத்தான் செல[illegible] செய்யப்போகிறார். பட[illegible] தான்கிளப்பும் என்று அடி[illegible] சொல்கிறார்.

பிரபுவின் ஜோடியாக நடிக்கப்போவது ரேவதி[illegible]

உன் அதரபான சுவை அறிய நினைத்தபோது மட மயிலே நீ ஏன் மரணமானாய்? - பிரசாந்த், கற்கொலையான திவ்யபாரதி படம் இளநெஞ்சே வா

## சரித்திரப் பெயர்தான்-ஆனால் சமகாலக் கதை!

[illegible] சரித்திரப் படம் [illegible] கதைதான் [illegible] கிராமத்துக் குடும்பத்தை [illegible] ஜமீன்தார் [illegible] அழிக்க [illegible]

[illegible] நம்பி பணத்தைப் போட்டு [illegible] காட்சிகளுக்கு சற்றும் குறைவிருக்காது.

## செஞ்சரி போடும் பிரபு

இளைய திலகம் பிரபுவின் 98வது திரைப்படம் தர்மசீலன் திரைக்கு வந்துவிட்டது. இங்கும் 'சின்னத் திரைகளில் காண்பிக்கப்படுகிறது. அடுத்து வரவிருப்பது 'மறவன்' ராஜகுமாரன் பிரபுவின் நூறாவது படம் என்பது தெரிந்த விசயம்.

வழக்கமாக பெரிய நடிகர்கள் சிலரது நூறாவது படம் நூறு நாட்களை தொடுவதில்லை என்பதால் செஞ்சுரி போடும் பிரபு படமும் செஞ்சுரி போட வேண்டும் என்ற படபடப்பில் இருக்கிறாராம்.

ராஜகுமாரனில் பிரபுவோடு ஜோடி சேர்கிறார் மீனா.

## கதைபண்ணை விரப்பன் தேவை!

[illegible]

## ரகுமானின் அவையடக்கம்

ஜெண்டில்மேன் பட பாடல் கசட் வெளியீட்டு விழாவில் ரகுமானை எல்லோரும் ஓகோ வென்று பாராட்டினார்கள்.

நன்றிசொல்ல ரகுமானை அழைத்தார் எழுத்தாளர் பாலகுமாரன். கூச்சத்தோடு நெளிந்த ரகுமான் மைக் முன்பாக பேசியது இரண்டே இரண்டு வார்த்தைகள் "எல்லாப் புகழும் இறைவனுக்கே நன்றி!" அடக்கம்தான்.

## காதோடு சொல்லுகிறோம்

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]



### சினிமா விமர்சனம்

## சக்கரைத் தேவன்

[illegible]

## மினி சினி

★ கமலஹாசன் அடுத்ததாக நடிக்கும் படத்திற்கு புரடக்ஷன் நம்பர் 12 என்று பெயரிடப்பட்டுள்ளது. இதை சந்தானபாரதி இயக்க எஸ்.[illegible] தயாரிக்கிறார்.

★ பாக்கியராஜ் அடுத்து இயக்கவுள்ள படத்திற்கு, ஒரு கிசுகிசு என்று பெயர் வைத்துள்ளார். இப்படத்தை ஸ்ரீதேவியின் மனேஜர் வேணு தயாரிக்கிறார்.

★ ரோஜா புகழ் [illegible] சொந்தமாக ஒரு [illegible] தொடங்கி இருக்கிறார்.

★ வெளிவராமல் நின்று போயிருக்கும் குற்றப் பத்திரிகை படத்தில் இரண்டு கோடி ரூபாய் முடக்கப்பட்டுள்ளதாக, அந்தப்படத்தின் தயாரிப்பாளரான ரவியாதவ் தெரிவித்துள்ளார்.

★ சரவணன் நடிக்க கஸ்தூரிராஜா இயக்கும் படம் [illegible] இப்போது 'தாய்மனசு' என்று பெயரை மாற்றிவிட்டார்கள்.

★ ஜக்பொட் என்னும் மலையாளப்படத்தில் மம்முட்டியோடு நடித்த ஐஸ்வர்யா அடுத்ததாக பட்டர்ஃபிளை என்னும் படத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார்.

★ ஆந்திர சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவியின் 'மெக்கானிக் அல்லுடு' படம் [illegible] இதனையடுத்து சொந்தமாக படமொன்றைத் தயாரித்து நடிக்கவுள்ளார்.

★ கார்த்திக் அடுத்ததாக கே.பி.பாலுவின் 'சின்னஜமீன்' படத்திலும், கோகுலகிருஷ்ணா என்னும் புதிய இயக்குநரின் 'முத்துக்காளை' படத்திலும் நடிக்கவுள்ளார்.

★ பிரபுதேவா ஒரு படத்தில் நடனமாடக்கேட்கும் தொகை 75ஆயிரம் ரூபாய். ஆடிப்பிழைக்கிறார்.

★ விஜயகாந் தன் மனைவி ஹேமலதா பெயரில் சொந்தப்படக் கம்பனி ஒன்று ஆரம்பிக்கிறார்.

## தங்கையா[illegible] தாரமாக[illegible]

1993இல் [illegible] எல்லாம் சினி[illegible] லோஃடர் [illegible] சத்யராஜின் [illegible] விரைவில் [illegible] வின் அதிரடி[illegible] காதலியாக ந[illegible]

இந்தப் [illegible] பொலின் [illegible] நடிக்கிறார் [illegible]

நடிகர்கள் [illegible] கற்றி [illegible] காதலியை [illegible] இருக்கலாம்.

நடிகைகள் [illegible] யாக பின் [illegible] சதை போட்ட[illegible] சுருக்கம் [illegible] பாட்டியாக [illegible] தாயகனோடு [illegible] வேண்டும். [illegible]

## மடோனா[illegible]

[illegible]

## கோடி ரசிகர்கள் உள்ளபோது தாடி ஏன் இவருக்கு?





இந்தித் திரையுலகின் சுப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் தாடி வளர்த்தார். தமிழ் திரையுலகின் இமயம் சிவாஜியும் தாடி வளர்க்கிறார். இவர்களோடு இப்போது சேர்ந்திருப்பவர் சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்த்.

தாடியோடு அவர் உள்ள படத்தையே அருகில் காண்கிறீர்கள்.



### பந்தாப்பூஜை

ஆறுமாத இடைவெளியின் பின் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கடும் முயற்சியால் சினி உலகப்பிரச்சனை ஓரளவு செட்டில். அந்தச் சூட்டோடு சூடாக புருசலட்சணம் படம் பூஜையை நடத்தினார்கள். ஒரு அழைப்பிதழின் விலை 30 ரூபாய். படப் பூஜையா- பந்தாப் பூஜையா?





### ரேவதி மறுப்பு கௌதமி ஏற்பு

டி.ராஜேந்தர் இயக்கும் புதிய படம் ஒரு வசந்த கீதம். கதாநாயகியாகப் போட முதலில் ரேவதியை அணுகினார்கள். கதையைக் கேட்டு ஓகே சொன்னவர் பின்னர் மறுத்துவிட்டாராம். அடுத்தது சான்ஸ் கௌதமிக்கு. டல்லான நிலையில் மார்க்கட் இருப்பதால் கதை கேட்காமலே ஓகே சொல்லி தேதியும் கொடுத்துவிட்டார். கௌதமியா கொக்கா?

### சரத்மீது சதி முயற்சி!

ஜுலை 14-சரத்குமார் தனது பிறந்த நாளை கலையாகக் கொண்டாடினார்.

படப்பிடிப்பில் இருக்கும் போது தோக் அடித்து எல்லோரையும் மகிழ்விப்பது அவரது குணம்.

ஒரு இந்தியா படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்த சரத்-பத்திரிகை யாளரோடு மனம் திறந்து பேசினார்.

"நான் இந்தளவு உயரக்காரணம் ரசிகர்கள்தான். அவர்கள் இல்லை என்றால் நான் இல்லை." என்று சொன்னவர் தனது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் படும் சிலர் சதி செய்வதாகவும் குற்றம் சாட்டினார்.

"எனது படங்கள் 100 நாட்கள் ஓடாமல் இருக்கலாம். ஆனால் நஷ்டத்தை ஏற்படுத்தவில்லை" என்று சொன்னபோது முகத்தில் பெருமிதம் பளிச்சிட்டது.

### சபாஸ் சரியான போட்டி!

அக்கா புருசன் படம் வெற்றி பெற்றதால் ராஜசேகர் "யாருக்கு மாப்பிள்ளை யாரோ" என்னும் படத்திலும் வித்தியாசமாக நடிக்கிறார்.

படத்தில் போட்டி மதுமாலாவுக்கும் ரம்யா கிருஷ்ணனுக்கும் இடையில்தான்.

போட்டியால் தாராளமாக காட்டுகிறார்களாம் கவர்ச்சியை. தவறவிடாமல் ஒளிப்பதிவு செய்துவருகிறார் வின்சென்ட். என்ன போட்டியோ- வசூலுக்கு பாதகமில்லை என்றால் சரி. பாகங்கள் தெரியும் போது பாதகம் ஏற்படுமோ?

### மீண்டும் குஸ்பூவோடு!

பிரதாப் படத்திற்கு பின்னர் அர்ஜுன் குஸ்பூ ஜோடி மீண்டும் இணைகிறது. சத்யா- அண்ணாமலை, வேடன் போன்ற படங்களை இயக்கிய சுரேஸ்கிருஷ்ணா இயக்க விருக்கிறார். கதை ரெடிபண்ணுகிறார்கள். படத்தின் பெயர் கொஞ்சம் வித்தியாசமானது. 'ரோஜாவைக் கிள்ளாதே' அதுதான் பெயர்.





### அன்று ஜோடி இன்று ஜோடி



தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இந்தி நடிகர் ராஜேஸ் கன்னாவும் இணைந்து தோன்றிய காட்சிகளில் ஒன்று. படம் நினைவுக்கு வர மறுக்கிறது. இருவருக்கிடையிலும் ஒரு ஒற்றுமை. தற்போது இருவரும் அரசியல்வாதிகளாகி விட்டனர். ஆனால் எதிர் முகாம்களில் இருக்கின்றனர். ராஜேஸ்கன்னா காங்கிரஸ் கட்சி. இப்போது செல்விக்கு காங்கிரஸ் என்றால் வேப்பங்காய். அன்று ஜோடி பாடியவர்கள் இன்று அரசியல் ஜோடி விட்டிருக்கிறார்கள்.



சரத்பாபு, சுதா, பானுச்சந்தர், ரோஜா படம்- நட்சத்திரப் போராட்டம்.

### ...நடித்தவர் ...க்கிறார்!

...94இல் காதலி. ...தான். ...சிவேல் படத்தில் ...நடித்த ரஞ்சிதா ...ன மணிவண்ண ...ில் சத்யராஜின் ...போகிறார். ... ரவுடியாகவும் ...ஸ்டபிளாகவும் ... ...னாலும் மரத்தைச் ...ட இருக்கலாம். ...திக்கொண்டும் ... ...பாவம். குழந்தை ...ாக- கொஞ்சம் ...தலியாக பின்னர் ...பின் தாயாக- ... அதே கதா ...கொண்டிருக்க ...ன தொழில்தான்.

### தேவி திருமதியாகிறார்?

இந்திய படவுலகின் நம்பர் ஒன் நடிகை ஸ்ரீதேவி. அந்தக் கலை ...சாதும்- உதவுசெயதலும் இருக்கும் வெளிச்சமே தனி. அதனால்தான் அவர் தனித்துவமானவர்.

இப்போது அந்த ராணிக்கு ஒரு ராஜாவைத் தேடுகிறார்கள். திருமணம் ஆகிவிட்டால் தேவி திருமதியாகி விடுகிறார். பிறகென்ன வெறுமையான முதல் இடத்திற்கு மாதுரிதீட்சித் வருவதற்கு தடையே இருக்காது.

### சற்றும் மனம் தளராமல்

ராதாரவி சொந்தப்படத் தயாரிப்பில் மீண்டும் இறங்கியிருக்கிறார். 'இது நம்மபூமி' காலைவாரிவிட்டதால் சொந்தப்படத் தயாரிப்பை தள்ளிப்போட்டவர் மீண்டும் தயாரிப்புத் துறையில் கால்வைத்திருக்கிறார். வைஷ்ணவிக்கு முக்கிய பாத்திரமாம்.

### ...ஆசை!

இந்தித் திரையுலகில் பரபரப்பாக பேசப்படுகிற ...வேறு யாருமல்ல ரேகா. ...இப்போது ரேகாவுக்கு 9... ...லை ... கொடுத்து 9... ...என்னவிருக்கிறாராம். ...கேட்டால் ஆம் என்று ...சொல்லவில்லை. ரேகா ...ால் அவரது புத்தகத்தில் ...தான் வேண்டும்.





மருத நாயகம் படத்தின் நாயகி கமலின் தெரிவு புதுமுகம் ஸ்வனிகா-



### கட்டான வாரிசு

ராஜா படத்தில் தங்க சிவாஜியோடு மோதிய வாட்டசாட்டமான தாராசிங்கை இப்போதும் மறக்கமுடியவில்லை. அவரது மகன் விண்டு திரையுலகில் தோன்றியிருக்கிறார். கட்டான உடல். 'கரன்' என்னும் இந்திப் படத்தில் கதாநாயகன் அவர்தான். ஜோடி கிருஸ்ணா.

## பாப்பா முரசு

# கடல் கன்னியின் அழுகை

முன்னொரு காலத்தில் ஆன்ட்ரூ என்று ஒரு இளைஞன் இருந்தான். அவன் அழகாகவும் கம்பீரமாகவும் இருப்பான். அவன் மோர்க் என்ற ஒரு பெண்ணை நேசித்தான். அவளை அவன் மணக்க நாள் குறிக்கப்பட்டது. மோர்க் பவழம் பதித்த ஒரு மோதிரத்தை அவன் அழகான விரலில் அணிவித்து "ஆன்ட்ரூ..... இக்கணை யாழி உன் விரலில் இருக்கிறவரை என் நினைவு உன்னோடிருக்கும்," என்றாள். இருவரும் திருமண நாளை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது எதிரி நாட்டு மன்னன் படை எடுத்து வரவே அரசனால் ஆன்ட்ரூ உடனே அழைக்கப்பட்டான். மாவீரனான ஆன்ட்ரூ போர் முனைக்கு உடனே சென்று பகை நாட்டானை புறமுதுகு காட்டி ஓடச்செய்ய வேண்டுமென்று அரசன் ஆணையிட்டான்.

ஆன்ட்ரூவும் மோர்க்கிடம் தான் போர் முடித்து விரைவில் திரும்பி வந்து அவளை மணம் செய்து கொள்வதாகக் கூறிவிட்டு கப்பலில் புறப்பட்டான். மோர்க் அழுதபடி அவனுக்கு பிரியாவிடை கொடுத்த னுப்பினாள்.

ஆன்ட்ரூ பயணம் செய்த கப்பல் நடுவழியில் ஒரு கோரப்புயலில் சிக்குண்டது. உடைந்து சிதறியது. ஆன்ட்ரூ உயிர்தப்ப கடலில் நீந்தினான். கரை வெகு தொலைவில் இருந்தது.

அப்பொழுது கடலிலிருந்து ஒரு கடல் கன்னி வெளிப்பட்டாள். அவளது உடல் இடுப்புக்கு மேல் பெண் உருவாகவும், இடுப்புக்குக் கீழே மீன்வடிவாகவும் இருந்தது. அவள் ஆன்ட்ரூவைப் பார்த்ததும் அவனிடம் ஆசை கொண்டாள். அவனைக் காப்பாற்றிக் கடலுக்கடியில் இருந்த தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றாள்.

அம்மாளிகையைப் பார்த்துப் பிரமித்தான் ஆன்ட்ரூ. அங்கு பொன்னும் வைரமும் கொட்டிக் கிடந்தன. முத்தும், பவழமும் ஒளி வீசின. விலையுயர்ந்த உணவுகளும், கனிகளும், பழச்சாறுகளும் இருந்தன. மாளிகை தேவலோகம் போல காட்சி அளித்தது.

தன்னை மணந்து கொண்டால் அங்கு இன்பலோக சுக வாழ்க்கை அனுபவிக்கலாம் என்று ஆன்ட்ரூவிடம் சொன்னாள் கடல் கன்னி.

அதற்கு இசையவில்லை ஆன்ட்ரூ. அவன் கைவிரலில் அணிந்திருந்த மோர்க் கொடுத்திருந்த மோதிரம் அவள் நினைவை அவனுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்தது.

ஆன்ட்ரூவைத் தன்வசம் இழுக்க கடல் கன்னி பலவகைகளில் முயற்சி செய்தாள். ஆனால் தோல்வியே அடைந்தாள். தான் தோல்வி அடைய என்ன காரணம் என்று யோசித்தாள் கடல் கன்னி. மோர்க் அணிவித்த மோதிரமே அவனுக்கு அவள் நினைவை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்தாள். ஆன்ட்ரூ விடம் இருந்து அந்த மோதிரத்தை அகற்றி விட்டால் அவன் மோர்க்கைச் சுத்தமாக மறந்து விடுவான், பிறகு அழகான தன்னை விரும்புவான் என் றெண்ணினாள் கடல் கன்னி.



அதற்கு என்ன உபாயம் செய்யலாமென்று இரவு, பகலாக ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தாள். மறுநாள் ஆன்ட்ரூவிடம் வந்து "என் பிரிய ஆன்ட்ரூவே.... உனக்கும் மோர்க்கிற்கும் திருமணமாமே?" என்று கேட்டாள் கடல் கன்னி. "ஆம்" என்றான் ஆன்ட்ரூ. "உன்னை விட்டு விடுகிறேன். நீ சென்று மோர்க்கை மணந்து கொள்" என்றாள் கடல் கன்னி. ஆன்ட்ரூ மிகவும் மகிழ்ந்தான்.

"அதற்குப் பிரதியுபகாரமாக நீ உன் விரலில் அணிந்துள்ள மோதிரத்தை எனக்குக் கொடுக்க வேண்டும்," என்றாள் கடல் கன்னி.

"சரி கொடுக்கிறேன்....அதற்கு முன் என்னைக் கடல் மட்டத்திற்குக் கொண்டு போ....என் நாட்டை ஒரு முறை முதலில் பார்க்க வேண்டும்" என்றான் ஆன்ட்ரூ. எதிரிப்படை தன் நாட்டை அழித்திருக்குமோ என்று அவன் பார்க்க விரும்பினான்.

கடல் கன்னி அவனைக் கடல் மட்டத்திற்கு அழைத்துப் போனாள். வெகு தொலைவில் அவன் நாடு சிறு புள்ளியாகத்தெரிந்தது. கடற்கரைக்குச் சென்று தன் நாட்டைக் காண வேண்டுமென்றான் ஆன்ட்ரூ. சரி எனக்கூறி கடற்கரைக்கு அவனை அழைத்துச் சென்றாள் கடல் கன்னி. அவனைக் கடற்கரையிலே விட்டுவிட்டு கடல் தண்ணீரிலேயே இருந்தாள் கடல் கன்னி. கடல் தண்ணீரிலே தான் கடல் கன்னி உயிர் வாழமுடியும். அதை விட்டுக் கரைக்கு வந்தால் மீனைப் போல துடிதுடித்துச் செத்துப் போவாள்.

கடற்கரையில் விடப்பட்ட ஆன்ட்ரூ வெகுவேகமாக ஓடி குன்று ஒன்றின் மீது ஏறிவிட்டான். கடல்கன்னி அவனது நயவஞ்சகம் புரிந்து அழ ஆரம்பித்தாள். ஆன்ட்ரு அவள் கரை சேர முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு ஓடிவிட்டான்.

ஏமாற்றமடைந்த கடல்கன்னி கடலின் உள்ளே இருந்து குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள் அவளது குமுறலான அழுகைதான் அவ்வப் போது கடலிலிருந்து புயலாகவும், சூறாவளியாகவும் புறப்பட்டு இன்னும் நாட்டையும், நாட்டு மக்களையும் அழித்துக் கொண்டிருக்கிறது.

**(இத்தாலி நாட்டுக் கதை)**

## குட்டி முயல்

முயல் ஒன்று வந்தது
முயன்று மெல்ல வந்தது
பஞ்சுப்பாதம் மண்ணில் பட
பதுங்கி பதுங்கி வந்தது.
புல்லை மெல்ல தின்றது
பூவை முகர்ந்து பார்த்தது
தண்ணீரையும் கண்டது
தாகம் தீர்த்துக் கொண்டது
பருந்து அதனைக் கண்டது
பதுங்கி பிடிக்க பார்த்தது
குட்டி முயல் அதனைக் கண்டு
குனிந்து பதுங்கி கொண்டது
தாயை நினைத்து அழுதது
தாயும் வந்து சேர்ந்தது
தனியாய் போவது தப்பென்று
தனக்குள் நினைத்துக் கொண்டது

செல்வி: நிர்மலா தங்கவேல்
அப்புத்தளை.

## விடுகதைகளும் விடைகளும்

1. செம்பு நிறையக் கொம்பு அது என்ன?
2. வீடில்லா நகரங்கள் நீரில்லா சமுத்திரங்கள் அது என்ன?
3. நீலக் கடலிலே வென்பஞ்சு மிதக்குது அது என்ன?
4. பொட்டுப்போல் இலையிருக்கும் பொரிப்போலப் பூப்பூக்கும் தின்னக் காய் காய்க்கும் தின்னாத பழம் பழுக்கும் அது என்ன?
5. கத்தரிப்போல இலையிருக்கும் கவரிமாப் பூப்பூக்கும் தின்னப் பழம் பழுக்கும் தின்னாத காய்காய்க்கும் அது என்ன?

விடைகள்

1. பல்லு
2. தேசப்படம்
3. வெண் மேகம்
4. முருங்கை
5. வேப்பங்காய்.

கே. பிரியகுமாரி

1. உச்சிக் குடுமியான் சந்தைக்கு போறான் அவன் யார்?
2. இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊரில் போய் சொல்கிறான் அவன் யார்?
3. தொட்டால் பிடித்துக் கொள்ளும் ஆனால் பசை அல்ல அது என்ன?
4. இரகசியமெல்லாம் உன்னிடம் தான். நீ வருடமெல்லாம் என்னிடம் தான் அது என்ன?
5. வெளுத்த வயல்! கறுத்த விதை! கையால் விதைப்பது, வாயால் பொறுக்குவது! அது என்ன?
6. கிள்ளிவிட்டால் கத்தும் அது என்ன?
7. நான் கண்ட காட்சி பிறர் பார்க்க முடியாதது?
8. மூடியைத் திறந்தா முத்து கொட்டும் இது என்ன?
9. ரோஸ் மங்கைக்கு வெள்ளை சிப்பாய்கள் காவல் இது என்ன?
10. தன்னையும் இயக்கிப் பிறரையும் இயக்குவது அது என்ன?

விடைகள்

1. தேங்காய்
2. தந்தி
3. மின்சாரம்
4. டயறி
5. எழுத்துக்கள்
6. வானொலி
7. கனவு
8. மாதுளம்பழம்
9. நாக்கும் பற்களும்
10. இதயம்.

அஸ்ரபுன் நிசா ஏ.ஹமீட்,
மல்வானை ஹின்ன,
அக்குறனை.

## இரண்டிலிருந்து ஐந்துவரை

- இரு பொருள் - கல்வி, செல்வம்
- இரு வினை - நல்வினை, தீவினை
- இரு நிதி - சங்கநிதி, பதுமநிதி
- இரு குரவர் - அன்னை, தந்தை
- ஈரறம் - இல்லறம், துறவறம்

- முத்தமிழ் - இயல், இசை நாடகம்
- முத்தொழில் - ஆக்கல், காத்தல், அழித்தல்
- மும்மூர்த்திகள் - பிரமா, விஷ்ணு, உருத்திரன்

- நால்வேதம் - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்
- நாற்படை - தேர், யானை, குதிரை, காலால்
- நாற்சொல் - பெயர், வினை, இடை, உரி

- பஞ்ச இலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
- பஞ்சலோகம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்
- பஞ்சாங்கம் - திதி, வாரம், நாள், யோகம், கரணம்.

தொகுத்தது :- பர்ஹான் அஸீஸ்
கிருங்கதெனிய
மாவனல்லை.

## வேண்டியதுகள் மூன்று

1. இருக்க வேண்டிய மூன்று:- தூய்மை, நேர்மை, நீதி!
2. ஆள வேண்டிய மூன்று:- நாக்கு, நடத்தை, கோபம்!
3. பெற வேண்டிய மூன்று:- அன்பு, தைரியம், மென்மை!
4. அடைய வேண்டிய மூன்று:- ஆன்ம சுத்தம், முயற்சி, மகிழ்வு!
5. பரிந்துரைக்க வேண்டிய மூன்று:- சிக்கனம், ஊக்கம், நாணயம்!
6. நேசிக்க வேண்டிய மூன்று:- அறிவு, கற்பு, மாசின்மை!

மும்தாஜ் பேகம்
மத்திய வீதி
கொழும்பு-12.


## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்


இப்படத்திற்கு சிறப்பாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணத்திற்கு பரிசு ரூ 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி- 14.8.93.

முகவரி:- வர்ணம் தீட்டும் போட்டி இல. 2
தினமுரசு வாரமலர்'
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.




## இறக்குமதிச் சிரிப்பு




## சிறுகதை

# அழுவதேன் • கண்ணா?

-முகில் வண்ணன்-



"திரேசா!" என்று வாசலில் வந்த போதே அழைத்தவாறு சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்து சாத்திவிட்டு தனது தோல் பையை அதிலிருந்து கழற்றினான் இருதயராஜ்.

"என்னத்தான்?" என்றவாறு வந்தாள் திரேசா.

"நீட்டா எங்க?" என்று காட்டமாகக் கேட்டான் அவன்.

"என்னத்தான் எனக்கு என்ன வாங்கி வந்தநீங்க?" என்றவாறு துள்ளிக் குதித்தோடி வந்தாள் நீட்டா.

"எல்லாம் நீ கேட்டபடி வாங்கித் தந்துதான் உன்னைக் குட்டிச் சுவராக்கி விட்டேன்" என்று முணுமுணுப்பைக் கேட்டதும் ஓரடி பின்வாங்கினாள் நீட்டா.

அத்தான் இன்று வித்தியாசமாக வந்து இருக்கிறார் என்று விளங்கியது அவளுக்கு. வழமையாக அத்தான் - இருதயராஜ் நீட்டா என்ன கேட்கிறாளோ அதோடுதான் மாலை வீட்டுக்கு வருவான். திரேசா என்ன சொன்னாலும் அவன் வாங்கி வருவதில்லை.

"இல்லை திரேசா மறந்து விட்டேன்" என்று அவன் என்ன சமாதானம் சொன்னாலும் அவள் ஏற்றுக் கொள்ளுவதே இல்லை.

"நான் தான் உங்கட மனைவி ஞாபகம் இருக்கட்டும். நான் என்ன சொன்னாலும் உங்களுக்கு மறந்து போகும் மச்சாள் சொன்னா மட்டும் பட்டுச்சீலையில பொட்டுக் குத்தினாற்போல ஞாபகம் இருக்கும். அவள் என்ன சொன்னாலும் மறக்காம வாங்கி வந்திடுவீங்க..." என்று கண்ணைக் கசக்குவாள்.

"என்ன திரேசா இது. அவள் சொன்னா நான் கட்டாயம் வாங்கிக் கொடுக்கத்தான் வேணும். இல்லாட்டி அவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாள். அவள் சின்னப்பிள்ளை அவள் மனம் நோகலாமா. நீ என் மனைவி உன்னிடம் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். அவளிடம் என்னவென்று சொல்வது. நீ இப்படிக் கேட்டுச் சண்டை பிடிக்கிறாய் அவள் மனதுக்குள்ளே வெதும்புவாள்....."

ஓ....உங்களுக்குத்தான் சின்னப் பிள்ளை அவள் இப்ப பெரிய குமராக்கும். நாளைக்கு இன்னொருவனைக் கட்டிக்கப் போறவள்....உங்களுக்கு அவள் மனைவியா நான்மனைவியா என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள்....." என்று கூறிவிட்டு நடந்து விடுவாள் திரேசா.

அத்தான் மாலை ரிபன்னுக்கு வாங்கி வந்திருப்பதை மூவருக்குமாகப் பிரித்து தேனீருடன் எடுத்துக் கொடுப்பாள் நீட்டா. அந்த வீட்டில் வேறு யாரும் இல்லையே. முன்னர் அவர்களுடைய தாய் மட்டும் கூட இருந்தார். இப்போது இவ்வுலகில் இல்லை.

"என்னக்கா நீ இப்படிக் கோவிச்சுக்கொண்டு அத்தான் வேலையில இருந்து களைச்சுப் போய் வந்து இருக்கிறார். நீ இப்படிச் சண்டை பிடிக்கிறாய்?"

"போடி போ....நீ போய் விசுறு...."

"நான் போய் விசுக்கிறன்...நீ இதைச் சாப்பிட்டுத்து தேனீரைக் குடி....."

"உனக்குத்தானே வாங்கி வந்தவர் நீயும் அவரும்தான் விழுங்குங்க....."

"என்னக்கா இது. வீட்டில நாம மூணுபேரும் தானே இருக்கிறம். என்ன வாங்கி வந்தாலும் நம்ம மூணு பேருக்கும்தானே! அத்தான் என்னோட அன்பாய் இருக்கிறதுக்கு நீயே இப்படிப் பொறாமைப்பட்டால் ஊரு உலகம் என்ன சொல்லும்?" -என்பாள் நீட்டா.

"டீயேய் அவர் எனக்கு மட்டும்தான் புருஷன் ஞாபகம் இருக்கட்டும்......"

கலகலவெனச் சிரிப்பாள் நீட்டா."

"எனக்குத் தெரியாதா உனக்குத்தான் புருஷன் என்று. எனக்கு அத்தான் தான். அக்காட புருஷன் அத்தான் தானே! நீயே பொறாமைப் படும்படி அத்தான் என்னோட அன்பாய் இருக்கிறதைப் பார்த்து எனக்குப் பெருமையாய் இருக்கக்கா" என்பாள்.

"அக்கா என்னோடையும் கோவிச்சுத்தா போங்க போய் அவவைச் சமாதானப் படுத்துங்க...." என்பாள் நீட்டா.

மெல்ல மெல்லக் கிட்டச் செல்வான் அவன்.

"ஏன் பொண்டாட்டிட்ட வாறதுக்கும் அவதான் சொல்ல வேணுமாக்கும்....." என்று ஒரு வெட்டு வெட்டுவாள்.

"திரேசா....நம்ம விட்டா அவளுக்கு வேறு யார் இருக்கா. அந்தக் குறையை அவள் உணரக்கூடாது என்றுதான் நான் அவள்ல கொஞ்சம் கூடுதலாக அன்பாக இருக்கிறேன்...இதுக்குப்போய்....." என்று அவள் தலையைத் தடவுவான்.

அவள் தனது பொய்க் கோபத்தை மறைத்துக் கொண்டு தலையைக் குனிந்து சிரிப்பாள். அவளுக்கு உள்ளூரப் பெருமையாக இருக்கும். 'அத்தான் நீட்டாவுடன் அன்பாய் இருக்கிறார்' என்று இல்லை என்று அவளை வீட்டைவிட்டு விரட்டி விட்டால் அவள் கதி? அவள் சொன்னதை அவன் இன்னும் மறக்கவில்லையே!

திரேஸ் மேரிக்கும்- இருதயராஜுக்கும் இருதயமாதா கோவிலில் திருமணப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மோதிரம் மாற்றிக் கொண்டு வீடு வந்தனர். அன்று மாலை வரவேற்பு உபசாரம். மதியம் சாப்பிட்ட பின்னர் இருவரும் தனியே இருக்கின்றனர்.

'திரேசா நான் இதுவரை காலமும் எனது பெரிய குடும்பத்தைப் பொறுப்புடன் பார்த்துப் பார்த்துக் களைத்துப் போனேன். நாம் இருவரும் தனியே சிறு குடித்தனம் நடத்திக்கொண்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் இதுதான் என் ஆசை...."

அதிர்ந்து போகிறாள் திரேசா.

தந்தையை இழந்த தாயும் தங்கை நீட்டாவும் எங்கே போவார்கள். இந்த வீடுவளவையும் தனக்கே தருவதாகக் கூறிவிட்டார்கள். அவர்கள் கதி? கலங்கிப் போனாள் திரேசா.

"நீங்க என்ன சொல்றீங்க என்று எனக்கு விளங்குது. அம்மாவையும் தங்கச்சியையும் நான் எங்கே விரட்டிவிடுவதூ அவள் பெரிசாகி மூன்று மாதம் கூட ஆகல்ல. அம்மா உதவி இல்லாமல்... அம்மாவுக்குப் பென்சன் வருகுது நாம பண உதவி ஏதும் செய்யத் தேவையில்லை. அவர்களும் நம்ம கூடவே இருக்கட்டுங்க...." கண்கலங்கி நிற்கிறாள் திரேசா. 'இப்படி என்று முதல்லே சொல்லி இருந்தால் நான் எனது திருமணத்தையே மறுபரிசீலனை செய்திருப்பேனே! எண்ணித் தவிக்குது மனது.

"இப்ப ஏன் அழுகிறாய் நல்ல நாளும் அதுவுமாய். நானென்ன இப்ப உடனேயா விரட்டச் சொன்னநான். என்னுடைய ஆசையைச் சொன்னநான்...இதுக்குப் போய்...." அவள் கண்களைத் துடைத்து விடுகிறான்.

நல்ல வேளை யாரும் கவனிக்கவில்லை என்று திருப்திப்பட்டுக் கொள்கிறாள். அன்றைய நிகழ்வுகள் எதுவும் அவள் மனதில் பதியவில்லை. மாறாக அம்மாவும் தங்கையுமே நிறைந்து இருந்தனர். அவர்களது எதிர்காலம் ஊசலாடிக்கொண்டிருக்க அவள் எப்படி இருப்பாள்.

"என்னங்க அம்மாவும் தங்கச்சியும் நமது கூடவே இருக்கட்டும்" என்று பல நாட்கள் மாதங்களாகக் கேட்டு வென்று விட்டாள் திரேசா. ஒரு வருடத்தில் தாய் தங்கையின் முழுப் பொறுப்பையுமே தன் நிலையில் தட்டிவிட்டுச் சென்று விட்டாள் கர்த்தரிடம்.

பர மண்டலத்தில் இருக்கும் எம்பிதாவே அத்தானின் மனதை மாற்றி விடாதே! நீட்டாவுக்கு மணம் முடிக்கும்வரை அவள் என்னுடனேயே இருக்க அருள்வீராக!" என்று அவள் வேண்டாத நாள் இல்லை.

"எங்கே அத்தானின் மனதில் ஏதும் மாற்றம் ஏற்பட்டுவிட்டதோ என்று எண்ணும் போது இப்படி நாடகம் ஆடிப்பார்ப்பாள் திரேசா. "இனி நான் விரட்டினாலும் அத்தான் விரட்டமாட்டார்" என்ற உறுதி பிறக்கும். மனம் அமைதி அடையும்.

ஆனால் இன்று அத்தானின் கடுமையான தொனி ஒரு நாளும் இல்லாத திருநாளாய்....

"ஞாயிற்றுக்கிழமை சேர்ச்சுக்கு யாரோட போனநீ?"

"பக்கத்து வீட்டு பிலோமினா அக்காவோட"

"ஏன் அவதானா உனக்குக் கூட்டிக் கொடுக்கிறது?

"........"

"ஐஸ்கிறீம் ஸ்டோல்ல யாரோடடி இருந்தநீ.....?"

பகலிலே கண்களில் நட்சத்திரம் தெரிந்தது நீட்டாவுக்கு.

"யாரது கேக்கிறனில்ல?"

"ஹென்றி... எங்கட பள்ளியில படிக்கிறவன்"

"எத்தனை நாளாக நடக்குது?"

"இரண்டு மாதமாக..."

"காலை உடச்சி வீட்டுக்க போடுவன்..... இனி உனக்கு பள்ளியும் இல்ல சேர்ச்சும் இல்ல.... எனக்குத் தெரியும் என்ன செய்யிறதெண்டு....." என்றவன் உள்ளே சென்று உடுப்பை மாற்றுகிறான். திரேசா தேனீர் தயாரிக்கச் செல்கிறாள். நீட்டா அப்படியே சிலைபோல் நிற்கிறாள்.

அத்தான் என்ன இப்படி அடிக்கடி என்னுடைய விஷயத்தில குறுக்கிடுகிறார். முதல்ல சுரேஷ். அவனை நான் விரும்பியபோது 'அவன் இந்து சரிப்பட்டு வராது. அதுமட்டுமல்ல அவனுக்கு இயக்க சம்பந்தம் இருக்கிறது. துவக்கு எடுத்தவன் துவக்காலே அழிவான். நீ இப்ப செய்யிற வேலயால நமது குடும்பமே அழியப் போகுது. இதை நீ விட்டு விட வேணும் இல்லாட்டி நான் உன் அக்காவை விட்டுவிட வேண்டிவரும்' என்றார்.

"பெருங் கஷ்டப்பட்டு அவனை மறந்தேன். இப்போது ஹென்றி அவன் படிப்பை விட்டு விட்டு சுயமாக சைக்கிள் கடைவைத்து சம்பாதிக்கிறான் அவனுக்கென்ன குறை என்று இப்படிக் கத்துறார். நல்ல வடிவாகவும் இருக்கிறான். இப்ப அவன்ல என்ன குற்றம் தான் சொல்லப் போகிறார்....

ஊராக்கள் சொல்றாப் போல என்னையும் அக்காவோட வைச்சு இருக்கும் எண்ணமோ. அக்காவுக்கும் மூன்று வருஷமாகக் குழந்தை இல்ல....அக்கா அடிக்கடி அத்தானோட சண்டையும் பிடிக்கிறது அவருக்குப் பிடிக்கல்ல போல...என்னுடைய வயதுக்கும் அவருக்கும்....."அவளால் அதுக்கு மேல் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

உடுப்பை மாற்றி வந்த பின்னரும் புறுபுறுத்துக்கொண்டிருந்தான் இருதயராஜ்.

"அத்தான் அவருக்கு என்ன குறை?" கேட்டே விட்டாள் நீட்டா.

எதிராளியின் எதிர்பாராத தாக்குதலில் நிலைகுலைந்தது போன்றிருந்தது இருதயராஜ்க்கு. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சொன்னான்.

"உனக்கு இப்ப வயசு பதினைந்து தானே. எனக்குத் தெரியும் உனக்கு எப்ப கல்யாணம் செஞ்சு வைக்கிறது என்று. நீ கவலைப்படாமல் உன் வேலையைப் பார் போ..."

"அத்தான் என்னைப் பற்றி நான் கவலைப்படாமல் யார் கவலைப்படப் போறாங்க? எனக்கு வயசு பதினைந்து தான். ஆனா நான் பெரிசாகி மூன்று வருஷம். எனக்கும் உலக நடப்புத் தெரியும். எனக்கொரு வாழ்க்கையைத் தேடிக்கொள்ளத் தெரியும். அக்கா அடிக்கடி சொல்வது ஞாபகம் இருக்கிறதா? நீங்க அவவோட கணவன் மட்டும் தான் என்று..."

"நீ சின்னப் பிள்ளம்மா உனக்கு ஒன்றும் தெரியாது. கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். பெரியவங்க பார்த்துச்செய்ய வேண்டியது..நான் சொல்வதைக் கேள்...."

"அத்தான் நீங்க சொல்றதை நான் கேட்கத் தயாரில்லை......நீங்க என்னுடைய காதல் எல்லாவற்றுக்கும் தடை போடுவதைப் பார்க்க எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அக்கா சொல்வதும், ஊரவர் சொல்வதும் சரிதான் போல....."

"என்ன சொல்கிறாய் நீட்டா?"

"ஆண்கள் இருபத்தி ஐந்து வயதில் அறிந்து கொள்வதைப் பெண்கள் பதினைந்து வயதில் அறிந்து கொள்கிறார்கள்" என்று யாரோ சொன்னது சரிதான் போல் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

"அத்தான் நீங்கள் என்னையும் வைச்சிருக்கிற எண்ணத்தில இருந்தா நீக்கிடுங்க. அதுக்கு இந்த நீட்டா தயாரில்லை" என்று கூறிவிட்டு விடுவிடு என்று நடந்தாள் நீட்டா.

"டீயேய்!....." என்று கத்திக்கொண்டு அவளை அடிக்கப் போனவனை தேனீரோடு வந்த திரோசா தடுத்தாள்.

"என்னத்தான் இது அவள் எதோ தெரியாத்தனமாக நடந்து இருப்பாள் நீங்க சொன்னாக் கேட்பாள் தானே ஏன் ஆத்திரப்படுறீங்க......"

பக்கத்தில் இருந்த கதிரையில் 'தொப்' பென்று விழுந்த அவன் கைகளுக்குள் முகத்தை புதைத்துக் கொண்டு அழுதான் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

"ஏன் அத்தான் அழுறீங்க?" "அழாதீங்க அத்தான் கண்ணைத் துடைச்சிட்டு தேத்தண்ணியைக் குடியுங்க" என்ற திரேசாவின் கோரிக்கைகள் எதுவும் எடுபடவே இல்லை....

திரேசா அறிந்தால் அவளை வெட்டிப் போட்டுவிடுவாள் என்று அவனுக்குத் தெரியாதா என்ன? அப்படிப்பட்டவளிடம் எப்படிச் சொல்லுவான் அவள் சொன்ன வார்த்தைகளை?

(யாவும் கற்பனையே)

---

# இந்த வாரம் உங்கள் பலன்

(8.08.93 முதல் 14.8.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குழப்பம், பொருள் வரவில் தடை. | காலை 9 மணி |
| திங்கள்- | பெரியோர் சகவாசம், திடீர் பிரயாணம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | தனதானிய லாபம், குடும்பத்தில் பிரச்சனை. | பி.ப. 2 மணி |
| புதன்- | கௌரவம், தேக சுக விருத்தி உண்டு. | காலை 11 மணி |
| வியாழன்- | அந்நியரால் உதவி, மனத்தெளிவு. | காலை 10 மணி |
| வெள்ளி- | பொருள் விரயம், வீண் சந்தேகம். | காலை 9 மணி |
| சனி- | செலவுகள் மிகுதி, உறவினர் பகை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பண நெருக்கடி, வீண் சிரமங்கள். | காலை 11 மணி |
| திங்கள்- | நண்பர்களால் உதவி, குடும்ப மகிழ்ச்சி | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் விரோதம், அதிகார சம்பத்து. | பி.ப. 5 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, புகழ், கீர்த்தி. | காலை 10 மணி |
| வியாழன்- | முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- | உயர்ந்தோர் சிநேகிதம், பதவி உயர்வு. | காலை 10 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 8 மணி |
| திங்கள்- | பணவரவு, எடுத்த காரியத் தடை. | காலை 11 மணி |
| செவ்வாய்- | குடும்ப சுகம், தூரத்து செய்தியால் மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| புதன்- | பகை மிகுதி, வீண் பிரயாசை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | கடின உழைப்பு, புகழ், கீர்த்தி. | பி.ப. 5 மணி |
| வெள்ளி- | பாராட்டு, பணப் புழக்கம். | பி.ப. 3 மணி |
| சனி- | நடைக்கஷ்டம், அந்நியரால் உதவி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியங்களில் வீணான தடை, மனக் குழப்பம். | காலை 7 மணி |
| திங்கள்- | மகிழ்ச்சி, வெளியிடப் பிரயாணம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோரால் நன்மை, பண வரவு. | காலை 11 மணி |
| புதன்- | குடும்பத்தில் துக்கசெய்தி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | இடமாற்றம், காணி, பூமி பிரச்சனை உண்டு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- | அந்நியரால் தொல்லை, வீண் சந்தேகம். | பி.ப. 4 மணி |
| சனி- | கடன் தொல்லை, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கல், தூர இடப் பிரயாணம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், தெய்வ நம்பிக்கை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | அதிகார விருத்தி, பண நஷ்டம். | காலை 11 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, வெளியிட வாசம். | காலை 10 மணி |
| வியாழன்- | காரிய நஷ்டம், பயம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, உள்ளத் தெளிவு. | பி.ப. 4 மணி |
| சனி- | தனதானிய இலாபம், தாரசுகம் நன்மை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன் |
| கன்னி | - வியாழன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| மிதுனம் | - வெள்ளி |

மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூசம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தன விருத்தி, மனைவியினால் குழப்பநிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தெய்வானுகூலம், இல்லச் சிறப்பு. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | பாராட்டு, எடுத்த கருமம் வெற்றி. | காலை 9 மணி |
| புதன்- | மன மகிழ்ச்சி, பெரியோர் நட்பு. | காலை 11 மணி |
| வியாழன்- | பண வரவு, காரியானுகூலம். | காலை 10 மணி |
| வெள்ளி- | துன்பங்கள் மறைதல், தூர இடப் பிரயாணம். | பி.ப. 2 மணி |
| சனி- | வீண் செலவு, அலைச்சல் மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புகழ், கீர்த்தியுண்டு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மறைமுக நோய், வைத்தியச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, அதிகார விருத்தி. | காலை 11 மணி |
| புதன்- | எடுத்த கருமம் வெற்றி, ஈகைச் செய்கை. | காலை 10 மணி |
| வியாழன்- | பிள்ளைகளால் நன்மை, உயர்ச்சி பெறுதல். | பி.ப. 4 மணி |
| வெள்ளி- | நடை நோய், தேக மெலிவு. | பி.ப. 2 மணி |
| சனி- | பணக் கஷ்டம், காரியானுகூலம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கடன் பயம், வீண் பிரச்சனைகள் தலைதூக்கல். | பி.ப. 3 மணி |
| திங்கள்- | மன மகிழ்ச்சி, பெரியோர் சகவாசம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | உயர்ச்சி நிலை, உறவினரால் தொல்லை. | காலை 10 மணி |
| புதன்- | எடுத்த கருமம் வெற்றி, பலவித எண்ணங்கள். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | மனக் குழப்பம், செலவு மிகுதி. | பி.ப. 4 மணி |
| வெள்ளி- | கரியானுகூலம், கடன் பயம் தீர்தல். | பி.ப. 3 மணி |
| சனி- | பணவரவு, தூர இடப் பிரயாணம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூர இடப் பயணம், அந்நியர் நட்பு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | பெண்களால் தொல்லை, வீண் சந்தேகம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, அலைச்சல் மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | பாராட்டு, பெரியோர் உதவி. | காலை 11 மணி |
| வியாழன்- | பணத் தட்டுப்பாடு, பிள்ளைகளால் கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | புதிய முயற்சி பலிதம், பொருள் நன்மை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், திடீர் செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| புதன்- | உயர்ச்சி, மேலான வாழ்க்கை. | காலை 11 மணி |
| வியாழன்- | பாராட்டு, பகைவர் வெற்றி. | காலை 9 மணி |
| வெள்ளி- | துன்பம் மிகுதி, வீண் விரயம். | காலை 10 மணி |
| சனி- | கடின உழைப்பு, அகால போசனம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பண வரவு, பிரயாணம். | காலை 8 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை. | காலை 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பொருள் பேறு. | பி.ப. 2 மணி |
| புதன்- | உறவினர் வருகை, புதிய முயற்சி. | பி.ப. 5 மணி |
| வியாழன்- | இனசன மகிழ்ச்சி, இல்லச் சிறப்பு. | காலை 10 மணி |
| வெள்ளி- | எடுத்த கருமம் வெற்றி, ஈகைச் செய்கை. | காலை 11 மணி |
| சனி- | பணவரவு, செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் வருகை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பண வரவு மந்தம், கடன் படல். | காலை 4 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, காணி பூமி சேரல். | காலை 11 மணி |
| புதன்- | எடுத்த கருமங்களில் வெற்றி, தருமச் செய்கை. | காலை 10 மணி |
| வியாழன்- | பண வரவு, புகழ், கீர்த்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | புதிய திட்டங்கள், முயற்சி பலிதம். | காலை 11 மணி |
| சனி- | மனப்போராட்டம், காரியத்தடை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

# மருத்துவ + விந்தைகள்

## உடனே போனது ஒற்றைத் தலைவலி!

பிரபல தொலைக்காட்சி நடிகை கண்டிஸ் பேகன் ஒற்றைத் தலைவலியால் துடித்துப் போவார். காட்சிகள் பதிவு செய்யப்படும் போது தலைவலி ஏற்பட்டால் மிகவும் துன்பப்படுவார். அழுது கொண்டே யிருப்பார். 'மேபி பிரவுண்' தொலைக்காட்சித் தொடர் தயாராகிக் கொண்டிருந்த போது 46 வயதான கண்டிஸ் இந்த ஒற்றைத் தலை வலியால் பட்ட துயரம் அவரைப் படாதபாடு படுத்தியது. இத்துயரத்திலிருந்து மீள அவர் கையாண்ட முறை யோகாசனப் பயிற்சி மற்றும் உணவுப் பழக்கமும் ஆகியவையாகும்.



கண்டிஸ் முதன் முதலில் ஒரு சத்துணவு நிபுணரைத் தான் போய்க்கண்டு ஆலோசனை கேட்டார். காப்பி அருந்தும் பழக்கத் தையும் சொக்லேட் உண்ணும் பழக்கத்தையும் உடன் விட்டு விடுமாறு அவர் கூறினார். இவை இரண்டும் 'கஃபைன்' என்னும் நச்சுத்தன்மை கொண்டவை என்பத னால் – இவற்றை நிறுத்தியதும் தன் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதை உணர்ந்தாள். தலைவலி இருந்தது. ஆனால் முன்பு போல் கடுமையாக இருக்கவில்லை.

வாரத்துக்கு மூன்று நாட்கள் சில குறிப்பிட்ட யோகாசனப் பயிற்சியை கண்டிஸ் மேற்கொண்டார். தலைவலி பறந்துவிட்டது. "யோகா சனப் பயிற்சியினால் எனது உடலும் உள்ளமும் போதுமான அளவு ஓய்வு பெற்று அதிக அழுத்தம் குறைந்து அமைதி ஏற்படுகிறது." என்று அவர் கூறுகிறார்.

## பயிற்சி செய்வோர் இகழ்ச்சி அடையார்

தினசரி தேகப்பயிற்சிகள் செய்வதுடன் சுறுசுறுப்பாக இருந்தால் முதுகுத்தண்டின் கீழ் முனையில் அல்லது குடலில் தோன்றும் புற்று நோயை வராமல் தடுத்துவிடலாம் என்று புதிய ஆய்வுகள் தெரிவிக் கின்றன. ஒரு வாரத்தில், 1000 கலோரிகளையோ அல்லது அதற்கு மேலோ தேகப்பயிற்சி மூலம் எரிக்கக்கூடிய ஆற்றலுள்ளவர்களுக்குப் புற்றுநோய் ஏற்படுவது 50 சதவிகிதத்தால் குறைகிறது என்று ஹாவாட் பல்கலைக்கழக ஆய்வாளர் ஐ-மின் லீ கூறுகிறார்.

"நாம் உண்ணும் உணவு சமிபாட்டை அடைந்து குடல்வழியாக சுற்றி மலமாக மூலத்தின் மூலம் வெளியேற்றப்படுகிறது. தேகப்பயிற்சி செய்பவர்களுக்கு சமிபாட்டுக்கான வேகம் அதிகரிப்பதுடன் குடல் வழியே செல்லும் வேகமும் அதிகரிக்கிறது. இதனால் புற்று நோயை உண்டாக்கக் கூடிய பதார்த்தங்கள் எவ்விடத்திலும் தாமதிக்காமல் வேகமாகச் சென்று வெளியேறுகிறது என்று ஐ-மின் லீ கூறிகிறார். இவர் 26 ஆண்டுகள் 17,000 பேரை வைத்து ஆராய்ச்சி நடத்திய பின்னரே இந்த உண்மையைக் கண்டுள்ளார்.

இத்தகைய குடல் புற்றுநோய், பிரதிவருடம் 110,000 பேரைத் தாக்குகிறது. இதில் 53,000பேர் வரை பலியாகி விடுகின்றனர். பாரிய வேலை செய்பவர்களைவிட சும்மா இருந்து வேலை செய்பவர்கள் 60 சதவிகிதமானோர் இத்தகைய புற்றுநோய்க் கிடமளிக்கின்றனர்.



## ••••••••••••தாய்மாரே••••••••••• முதலில் இதைப் படியுங்கள்!

பிறந்து சில மாதங்களுள் பல குழந்தைகள் இறந்து விடுகின்றன. இதற்கான காரணம் என்ன என்பதை சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாதிருந்தது. இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற அறிவியல் ஆராய்ச்சிகளில் மேல் நிலையிலுள்ள நாடுகளிலும், சுகமாகப் பிறந்த குழந்தைகள் இறப்பதற்கான சரியான காரணத்தை அறிவது கடினமாகவே இருந்தது. இவ்வாறு சுகதேகியான குழந்தை திடீரென இறப்பதற்கான காரணம் இக்குழந்தையைப் படுக்க வைக்கும் முறையிலேயே தங்கியிருக்கிறது என ஐரோப்பிய ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

சிறுகுழந்தைகளை தாய்மார் பாலூட்டிய பின்னர் வயிறுபட குப்புறப்படுக்க வைத்துவிடுகின்றனர். இதனால் சுவாசக்குழாய் அடைப் பேற்பட்டு சுவாசிக்க முடியாத நிலை அக்குழந்தைக்கு ஏற்பட்டு விடுகிறது. அசைந்து படுக்கக்கூடிய குழந்தை யாக இருக்குமானால் சுவாசிக்க முடியாத நிலை ஏற்படும்போது தானாகவே சரிந்தோ நிமிர்ந்தோ படுத்துவிடக்கூடிய வசதி அக் குழந்தைக்கு இருக்கும். ஆனால் அசைய முடியாத பச்சைக் குழந்தை அப்படியே மூச்சு அடங்கி இறந்து விடுகிறது. இதனைக் கண்டறிந்த ஆய்வாளர்கள் குழந்தைகளை வயிறு மற்றும் நெஞ்சு படுக்கையில் அழுத்தாமல் படுக்க வைக்கப்பட வேண்டும் என்று தாய்மாருக்கு அறிவுறுத்தி வருகின் றனர்.



கடந்த எட்டு வருடங்களாக 25 நாடுகளில் மேற்கொள் ளப்பட்ட ஆராய்ச்சிகள் முதுகு படக் குழந்தை கள் படுக்க வைப்பதே அபாயமற்ற முறை எனக் காட்டியுள்ளன.

> உயிரினங்களில் மனித இனத்தின் முகத்துக்குத்தான் ஏராளமான உணர்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டுகிற தன்மை உண்டு. கோபம், ஏமாற்றம், கவலை, மகிழ்ச்சி இந்த உணர்ச்சிகளில் சில.

## வேண்டாம் வெந்நீர் குளிப்பு!



கருவுற்று 6 வாரங்களுக்குள் வெந்நீர் தொட்டிகளில் தாய்மார்கள் குளிப்பது பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு ஆபத்தாக முடியும் என்று பொஸ்ரன் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் ஔப்றே மிலன்ஸ்கி தெரிவிக்கிறார். பிறக்கப் போகும் குழந்தையின் முதுகுத் தண்டு இச்சூட்டினால் பாதிப்படையலாம் என்று இவர் எச்சரித்துள்ளார். இப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின் பயனாகக் கண்ட உண்மைகள் இத்தகைய எச்சரிக்கையை கர்ப்பிணித்தாய்மார்களுக்கு விடுக்கத்தூண்டியது என்கிறார் டாக்டர் மிலன்ஸ்கி.

## முடி உதிர்கிறதா முடி? புதிய கண்டுபிடிப்பு ரெடி!

முடி உதிர்ந்து தலைமொட்டையானாலும் மீண்டும் முடி வளர்வதற்கான புதிய மருந்து விரைவில் மருந்துக்கடைகளில் கிடைக்கவிருக்கிறது. காயங்களைக் குணப்படுத்துவதற்கெனத்



தயாரிக்கப்பட்ட மருந்து முதலில் சுண்டெலிகளின் காயத்துக்குத் தடவப்பட்டது. இந்தச் சுண் டெலிகளுக்கு மருந்து தடவப் படுவதற்கு முன்னர் காயத்தைச் சுற்றியிருந்த உரோமங்களை அகற்றிவிட்டு மருந்து தடவப்பட்டது. காயம் ஆறவில்லை. உரோமம் அகற்றப்பட்ட இடங்களில் முன் பிருந்ததை விட மிக வேகமாகவும் ஏனைய இடங்களைப் பார்க்கிலும் அடர்த்தியாகவும் உரோமம் வளரத் தொடங்கியது. 18 எலிகளின் மீது இப்பரிசோதனைக் களிம்பு பூசப் பட்டதில் 85 சதவிகிதமானவற்றுக்கு, மருந்து பூசி இரண்டு மாதங்களின் பின்னர் உரோமம் வளருவதில் துரித கதி ஏற்பட்டமை கண்டு பிடிக்கப் பட்டது.

பெப்ரைட்ஸ் மற்றும் செம்பு ஆகியவற்றின் கலவையில் பெறப் பட்ட இக்களிம்பு மேற்கொண்டு பரிசோதிக்கப்பட்டு வருகிறது. வெற்றி பெறுமானால் முடி இழந்தவர்கள் கவலைப்படவேண்டிய நிலையேற்படாது. புது முடி சூடும் நாள் தொடர்ந்து வரலாம்.

## மாத்திரை போடும் நேரம்

ஆஸ்துமா, சிறுநீரகக் கோளாறு மற்றும் மூட்டுவாதம் போன்ற நோய்களுக்காக ஒவ்வொருநாளும் மாத்திரைகளை விழுங்குவோர் உள்ளனர். இவற்றை காலையிலேயே சாப்பிடுவது நல்ல பலனளிக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். காலையில் இவற்றை எடுப்பதனால் நாள் முழுவதும் அது உடலில் தங்கியிருந்து பலனளிக்கிறது என்று நியூயோர்க் பல்கலைக்கழக பேராசிரியர் வில்லியம் ஜுஸ்கோ கூறுகிறார்.

---

கல்கத்தாவின் ஹுக்ளி ஆற்றின் கரையுடன் அமைந்திருந்த அந்தக் குடியிருப்பு, கண்ணைக் கசக்கி, அலுப்பை முறித்துக் கொண்டு அன்றாட அலுவல்களுக்காக விழித்துக்கொண்டு வெகு நேரமாகிவிட்டது. கல்கத்தா என்றாலே நினைவுக்கு வரக்கூடிய காளிகோயில்களில் காலைப் பூசைக்கான மணி அடித்துக் கொண்டிருந்தது.

ஓயாத மணிச்சத்தத்தினால் விழித்துக்கொண்ட பாபு சட்டர்ஜி எதுவித அலுப்புமின்றி இளங்கன்றுக்கே உரிய மிடுக்குடன் கட்டிலில் எழுந்து இருந்து கொண்டான். துறுதுறுத்த அவனது கண்கள் யன்னலை ஊடுருவியது. ஈரப்புடவையுடன் துளசிமாடத்திற்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தாள் பத்மா சட்டர்ஜி. பாபுவின் தாய் அந்தத்தெரு சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. பால்காரனின் மணிச்சத்தம் தெருவை இரண்டு படுத்திக் கொண்டிருந்தது. நேற்றிரவு ஆரம்பித்த திருமணம் ஒன்று இன்னும் முடியவில்லை என்பதை தொலைவில் ஒலித்துக்கொண்டிருந்த 'செனாய்' பறைசாற்றிக் கொண்டிருந்தது.

கட்டிலை விட்டிறங்கிய பாபு சமையலறையை நோக்கிச் சென்றான். அம்மா உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

"பாபு, எழுந்துவிட்டாயா கண்ணா" என்றவள் "இருந்துகொள் இன்னும் ஒரு வினாடியில் பாலைச் சூடாக்கி உனக்குத் தந்துவிடுகிறேன்." என்று தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்கும் தோரணையில் சொன்னாள்.

"அம்மா! கல்கத்தாவில் சீனி இல்லையாமே! சீனி கிடைக்காமல் மக்கள் மிகவும் கஸ்ரப்படுகிறார்களாமே! உனக்கு மட்டும் எப்படி கிடைத்தது?" இரண்டரை வயதிலேயே கேள்விகளைக் கேட்டுத் தாயைச் சங்கடத்தில் ஆழ்த்த ஆரம்பித்தவன் இன்று நான்கு வயதில் இப்படி ஒரு கேள்வி கேட்டதில் அவள் ஆச்சரியப்படவில்லை.

"சமத்துக் கண்ணா! இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லையடா. தட்டுப்பாடு ஏற்படப் போகிறது என்பதை அறிந்தவுடன் உனது அப்பா இரண்டோ மூன்று கிலோ சீனி வாங்கிவந்து வைத்து விட்டார். அதனால் எமக்குக் கஸ்டமில்லை"




"ஆனால் அம்மா, எத்தனை வீடுகளில் சீனி இருக்காது. பாட்டியின் ஆச்சிரமத்திலிருக்கும் என்னைப் போன்ற சிறார்கள் சீனி கிடைக்காது கஸ்டப்பட மாட்டார்களா? அனேகம் பேர் சுவையற்ற தேனீரைக் குடிக்கும் போது எனக்கு மட்டும் சுவை தேவையா? சீனி போடாமலே பாலைக் கொடு"

"சொல்வதைக் கேள் பாபு! அடுத்தவர் பற்றிக் கவலைப்படும் வயதல்ல. உனக்கு [illegible] எனக்கு வேறு வேலைகள் இருக்கின்றன." அம்மா கொஞ்சம் கடுமையாகவே சொன்னாள். "அந்தக் கிறீஸ்தவக்கிழவி எக்கேடு கெட்டால் உனக்கென்ன நீ பாலைக்குடி"

"நாங்கள் பாட்டி என்றுதானே சொல் வோம்.....அதென்னம்மா கிறிஸ்தவக்கிழவி....."

"நாங்கள் கும்பிடும் கடவுளை அவர்கள் வணங்குவதில்லை. அவர்களுக்கு வேறு கடவுள். வேறு பழக்கவழக்கங்கள்."

"நல்லது. ஆனால் அவர்களுக்கும் பசிக்கும்தானே" பாலுடன் சேர்த்து நஞ்சையும் ஊட்டப்பார்த்த தாயைத் தவிர்ப்பது போல் சமையல் அறையை விட்டு வெளியேறினான் பாபு. இடுப்பை விட்டு விழுந்து விடக்கூடிய நிலையிலிருந்த 'பிஜாமா'வை ஒரு கையால் இறுகப்பற்றியிருந்தான்.

வரவேற்பறையைத் தாண்டி அவன் முற்றத்திற்கு வரும் போது ராமர்.... பாபர்.... மசூதி.... கரசேவை..... என்றெல்லாம் அப்பா நண்பர்களுக்கு மிக ஆவேசமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அயோக்கியத்தனத்திற்கு அங்கே அத்திவாரம் போடப்படுகிறது என்பதை அறியாத பாபு தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான்.

கல்கத்தா, மீண்டும் ஒரு நரேந்திரனை உலகுக்குத்தரப் போகின்றதோ.....?

•

பின் குறிப்பு: வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வம் அன்னை திரேஸா. அவர் பேட்டியொன்றின் போது சொன்ன உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானது இக்கதை. சிறிது கற்பனை கலந்து அயோத்தியுடன் முடிச்சுப் போடப்பட்டுள்ளது. பெயர்களும் கற்பனையே.




## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—6

குலாம்ஷாவுக்கு நினைவு திரும்பிய போது உயர்தரக் கட்டில் ஒன்றில் படுக்க வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்.

காரில் திணிக்கப்பட்டு- முகத்தருகே மயக்க மருந்து ஸ்பிறே செய்யப்பட்டு நினைவிழந்த பின்னர் இங்கே கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள்.

வெள்ளை வான். பின்னர் கறுப்புக்கார். அழகான ரம்யா- காருக்குள் இருந்து ஸ்பிறே செய்தவனின் மீசையற்ற முகம் எல்லாம் நினைவில் இருந்தன.

அறை பண வாசனையோடு சுத்தமாக இருந்தது. எட்டாத உயரத்தில் இடப்புறம் ஒன்றும்-கட்டிலுக்கு நேர் எதிரே ஒன்றுமாய் இரண்டு ஜன்னல்கள் இருந்தன. கட்டிலைத் தவிர வேறெந்த தளபாடங்களும் அறையில் இல்லாமல் இருந்ததில் எதிரியின் முன்யோசனை புரிந்தது.

"தப்புவது சுலபம் அல்ல. ஏதாவது தந்திரம் செய்தால்தான் உண்டு. பார்க்கலாம். எதிரி யார்? நோக்கம் என்ன? பார்க்கலாம்"

மனதுக்குள் நினைத்தபடி கட்டில் விட்டு எழுந்தபோது தலை கனத்தது. நெற்றியின் இருபுறமும் வலித்தது. மயக்க மருந்தின் உபயம் அது என்று தெரிந்தது.

அறைக்கதவு மூடப்பட்டிருந்தது.

வலுவான கதவு என்பது தூர இருந்து பார்க்கும் போதே தெரிந்தது.

வெளியே காவல் இருக்கலாம். 'கூப்பிட்டுப் பார்க்கலாமா' நினைத்த போது கதவு திறந்தது. குலாம்ஷா கட்டிலில் அமர்ந்தார்.

திறந்த கதவு வழிவிட ரம்யா உள்ளே வந்தாள். ஒரு தேவதை போலவே இருந்தாள். ஆண்களைப் போலவே சட்டை போட்டிருந்தாள். கறுப்பு ஜீன்ஸ் வெடித்து விடுவது போல இறுக்கமாய் இருந்தது. சட்டையின் மேல் பொத்தான்களை அலட்சியமாய் மறந்திருந்தாள்.

"குட்மோனிங் குலாம்ஷா- புதிய இடம் எப்படியிருக்கிறது"

"குட்மோனிங் ரம்யா- சிறப்பான உபச்சாரம்"

ரம்யா என்று பெயர் சொல்லி அழைத்ததில் அவள் சற்று அதிர்ந்தது தெரிந்தது.

"ரம்யாவா? கனவு கண்டு உளறுகிறீர்களா குலாம்ஷா" தடுமாற்றத்தை மறைத்து கேள்வி வீசினாள்.

"பொய் சொல்லாதே பெண்ணே. உன் சாதகமே பொலிசிடம் இருக்கிறது. கூடவே உன் அழகான போட்டோவும்"

பொய் உதவாது என்று புரிந்து கொண்ட ரம்யா-

"ரைட். நான் ரம்யா என்றே வைத்துக் கொள்ளலாம். என்ன செய்யப் போகிறீர்கள்"

கேட்டுவிட்டு விழுங்கிடுவது போலப் பார்த்தாள்.

"என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய்"

வேண்டுமென்றே அப்படியொரு வினாவை தூக்கிப் போட்டார்.

குலாம்ஷா மீது விழிகளை மொய்க்க விட்டபடி- மேல் உதட்டை நாவால் ஈரப்படுத்தி நளினம் காட்டினாள். கிறக்கம் கலந்த குரலில் பேசினாள்.

"உங்களை புத்திசாலி என்று நினைத்தேன். இப்படியா கேட்பது. கட்டில் இருக்கிறது. கட்டான உடல் உங்களிடம் இருக்கிறது. தனிமை சூழ இருக்கிறது. சூடாக நானும் இருக்கிறேன். என்ன செய்யவேண்டும் என்று நான்தானா சொல்லித்தர வேண்டும்"

கேட்டுவிட்டு கண்ணடித்துச் சிரித்தாள். குலாம்ஷாவின் அருகே கட்டிலில் வந்து அமர்ந்து முகம் திருப்பி மீண்டும் சிரித்தாள்.

"பயந்துவிட்டீர்களா குலாம்ஷா. கிரைம்புலியல்லவா நீங்கள். கிளியிடம் பயப்படலாமா?"

சொல்லிக்கொண்டே அவரது தொடையில் தட்டி, தட்டியபடியே மெல்ல அழுத்தி அதன் பலத்தில் ஒரு நொடி வியந்து பின் சிரித்தாள். மயக்கமான சிரிப்பு.

"இவள் வலை வீசுகிறாளா அல்லது தானே வலிய வந்து வலையில் விழுகிறாளா?"

தீர்மானிப்பது கஸ்டமாக இருந்தது.

பலத்தை பலவீனமாக்குவதுதான் தவறு. பலவீனத்தை பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை.

வலையில் விழுவது போல் நடிப்பது, அல்லது வலையில் வந்து விழும் மானை வசமாக்கிக் கொண்டு பயன்படுத்துவது- இரண்டுமே தவறல்ல.

உளவறிவதென்பது ஒரு பெரியகலை. தர்ம நியாயங்கள் சில நேரங்களில் சரிப்படாமல் போகலாம். விருப்பம் மீறி காரியங்கள் நடக்கும். சில நேரங்களில் எதிரியின் வலையில் வலியப் போய் விழ வேண்டியிருக்கும். மீள்வதும் வலை வீசியவனை சமயம் அறிந்து மடக்குவதும் நோக்கமாக இருக்கும். எதிரியையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. அதே சமயத்தில் அதிகமாகவும் மதிப்புப் போடக்கூடாது.

குலாம்ஷா கலையறிந்தவர். குறி புரிந்தவர். மனசுக்குள் வில் வளைத்து அம்பு தொடுத்து எதிரியை நோக்கி காத்திருப்பவர். நினைத்திருந்தால் ரம்யா என்ற வசீகர மங்கையை ஒரே அடியில் உருட்டிவிட்டு நேற்றிரவே தப்பியிருக்க முடியும். முதுகில் ரம்யா பதித்திருந்த பிஸ்டலை தன் கைக்கு கொண்டுவந்திருக்க முடியும்.

முயலவில்லை. பொறுமையோடு வலையில் வீழ்ந்தார். இப்போது பொறுமையோடு காத்திருக்கிறார்.

"என்ன யோசிக்கிறீர்கள் குலாம்ஷா- மனதை மாற்றிவிட்டீர்கள் என்றானே சந்தோஷ். மனம் மாறியதை சந்தோசமாகக் கொண்டாட வேண்டாமா ஷா"

"கொண்டாடக் கூடிய நிலையிலா என்னை வைத்திருக்கிறீர்கள். மனம் மாறியவனுக்கு உங்கள் வரவேற்பு பிரமாதம். எங்கே அந்த சந்தோஷ்"

ரம்யா அலட்சியமாகச் சொன்னாள்.

"நேற்றிரவே செத்துவிட்டான்."

அந்தப் பதிலில் அதிர்ந்த ஷா- உண்மையைத்தான் சொல்கிறாளோ என்று ஆச்சரியமாய் அவள் முகத்தைப் பார்த்தார். அது புரிந்து ரம்யா சொன்னாள்.

"சந்தோஷ் செத்தது இலங்கையில் இனப்பிரச்சனை இருப்பது மாதிரியான சத்தியமான உண்மை. யாரால் கொல்லப்பட்டான் என்பதுதான் இனப்பிரச்சனை தீர்வுபோல் கண்டுபிடிக்கப்பட முடியாத விசயமாக இருக்கிறது"

"எப்போது கொலை நடந்தது"

"உங்களுக்கு போன் செய்துவிட்டு எங்களைச் சந்தித்தான்."

"எங்களை என்றால்"

"பார்த்தீர்களா ஷா புத்தியை காட்டுகிறீர்களே. மனம் மாறினாலும் குணம் மாறாது போல் இருக்கிறது..... சந்தித்துவிட்டு தனது ரூமுக்கு சென்றவனை பிணமாகத்தான் பின்னர் சந்திக்க முடிந்தது. உபயோகமானவன் எல்லாவிடயத்திலும்"

அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சாவு ஒரு அதிர்ச்சியாக அவளுக்கு தெரியவில்லை. குலாம்ஷாவும் சாவுகளைக் கண்டவர்தான். ஆனால் மனித உயிர்கள் வீணே மடிதலின் பொருட்டு கவலை மிகக் கொண்டவர். சந்தோஷ் என்ற சமூகவிரோதி செத்ததில் வருத்தம் இல்லாத போதும் ஒரு பொலிஸ் அதிகாரி என்ற வகையில் கொன்றது யார் என்பதை அறியும் கடமை இருந்தது.

ரம்யா உன் சகா ஒருவன் சாவில் சுருண்டதில் உனக்குள் துக்கமே இல்லையா" கேட்டார்.

"இல்லை. நிச்சயமாக இல்லை. ஏன் துக்கப்படவேண்டும். சா ஒரு அதிசயமா என்ன? நாம் சாகவைக்கும் போது துக்கப்படாத போது நம்சாவைக் கண்டு நாமே துக்கப்படலாமா ஷா- நோ- எனக்கு துக்கமே இல்லை. எனினும் சந்தோஷ் எனக்குள் விதைத்த சந்தோசமான அந்த நிமிஷங்கள் மட்டும் மறக்கக்கூடியவையல்ல. என் பொலிசி என்ன தெரியுமா ஷா"

பெருமூச்சு ஒன்று விட்டு கேள்வியோடு நிறுத்தினாள்.

"உனக்கும் ஒரு பொலிசி இருக்கிறதா. நல்லது. அது என்ன பெண்ணே உன் பொலிசி"

"சந்தோசங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். சந்தோசங்களை சந்தர்ப்பம் வரும்போது முழுதாய் அனுபவித்துவிட வேண்டும். துக்கங்களை தூரவிலக்கிவிட வேண்டும். இப்போது சந்தோசமான நேரம்- இடையிலே எதற்கு ஷா சந்தோஷ் என்பவனுக்காக மனதை ஈரப்படுத்தி உடலைக் காயப்போட வேண்டும். முடிந்த கதை எதற்கு. புதுக்கதைக்கு முகவுரையில் இருந்து தொடங்கலாம் அல்லவா?"

உபதேசம் போல் நீண்டதாய் சொல்லிக் கொண்டே குலாம்ஷாவின் நெஞ்சின் மையத்தில் கரம் வைத்து கட்டிலில் சாய்த்தாள். உதடுகளால் அவர் உதடுகளை இறுக மூடினாள். வலதுகால் தூக்கி அவர் கால்மீது போட்டபடி -கரம் அனுப்பி அவர் சட்டைப் பொத்தான்களை ஒவ்வொன்றாய் அகற்றினாள். உதட்டிலிருந்து உதடுவிலக்கி அவர் மார்பில் ஆவேசமாய் பொருத்தினாள்.

குலாம்ஷா திணறித்தான் போனார். ஏற்பதா வேண்டாமா என்று அவர் யோசித்த விநாடிகளில்-

அபாயத்தை அறிவிக்கும் சைரன் ஒலி அந்த அறைக்குள்ளும் துல்லியமாய் கேட்டது.

பதட்டமாய் எழுந்த ரம்யா பொத்தான் விலகி பாதி மார்புகள் தெரிந்ததும் மறையாது வெளியே பாய்ந்தாள். ஆனால் மறக்காமல் கதவை வெளிப்புறமாய் தாளிட்டு சென்றாள். அபாயத்திலும் அவள் நிதானம் கண்டு குலாம்ஷா வியந்தார்.

அறைக்கு வெளியே பலர் ஓடும் காலடிச்சத்தங்கள் கேட்டன. வேட்டோசைகள் சிலவும் தொடர்ந்து கேட்டன.

■

மதுமிதாவின் வீட்டுக் காலிங் பெல் அழுத்தி ஒரு நிமிடம் நிதானித்து உள்ளே பதில் வராமல் போக மீண்டும் இரு தடவை முயன்று பொறுமையைத் தொலைத்தார் டி.ஐ.ஜி டென்சில்.

பவ்வியமாய் நின்ற வாட்ச்மேனை அழைத்தார்.

"அம்மா உள்ளேதான் இருக்கிறார்களா"

"ஆம் ஐயா-வெளியே போனது ஐயா மட்டும்தான்"

"சரியாக கவனித்தாயா நீ"

"ஆம் ஐயா. இப்போது தான் அம்மா என்னை அழைத்து யார் வந்தாலும் தன்னைக் கேளாமல் உள்ளே விட வேண்டாம் என்று கூறினார்கள்"

"என்னை மட்டும் எப்படி விட்டாயாம்"

"உங்களைப் போய்....." நெளிந்தான்.

"வேறு வழி இருக்கிறதா உள்ளே செல்ல"

"பின்புறம் ஒரு கதவு இருக்கிறது ஐயா"

"வா காட்டு"

வாட்ச்மேன் முன் செல்ல டி.ஐ.ஜி டென்சில் இரு காஸ்டபிள்கள் பின் தொடர கம்பிரமாய் நடந்து பின்புறம் சென்றபோது-

குரோட்டன் செடிகளுக்குள் ஏதோ விபரிதமாய் உணர்ந்தார்.

மறுகணம் செடிகளுக்குள் இருந்து விருட்டென்று எழுந்து பின் சுவர் நோக்கி கறுப்பு உடையில் இருந்த அந்த உருவம் பாய்ந்தது.

உசாரான டி.ஐ.ஜி இடுப்பில் இருந்து பிஸ்டல் உருவி குறிவைத்து வெடி தீர்த்தார்.

பிஸ்டல் சொன்னபடி செய்தது.

தோட்டாவை உரிய குறிக்கு அனுப்பியது.

ஆ....என்ற அலறலோடு உருவம் மீண்டும் சுவரேறிச் செல்ல முயல....

மீண்டும் ஒரு முறை பிஸ்டலின் உதடு திறந்தது.

உருவம் தடாலென்று சாய......

அதிர்ச்சியில் சிலையாகி சுதாகரித்து மீண்ட கான்ஸ்டபிள்கள் இருவரும் முன்னே பாய்ந்தனர்.

விழுந்து கிடந்த உருவம் முகத்தையும் கறுப்புத்துணியால் மறைத்திருந்தது.

"றி மூவ் தட் குளோத்"

டென்சில் உத்தரவிட விலக்கப்பட்டது துணி.

விலக்கியவர்கள் அதிர்ந்தனர்.

டி.ஐ.ஜி டென்சிலும் திகைத்துப் போய் அந்த முகத்தை நோக்கினார்.

**இன்னும் வரும்.**

## உங்களுக்குப் பிடித்த உலகத்தலைவர் யார்?

### சிந்தியா பதில்கள்

அன்பின் சிந்தியா- நீங்கள் அதிகம் விரும்பிப் பார்ப்பது யாருடைய படம்?

ஆர்.எஸ். மாணிக்கம்.
தெமட்டகொடை

*என்னுடைய படம்.*

■

தமிழக முதல்வரின் உண்ணாவிரதம் பற்றி தங்கள் மன எண்ணம்?

ரி. ஞானஜோதி
பதுளை.

*ஊழல் குற்றச்சாட்டுக்களின் வாயை மூட சாப்பிட வாய்திறக்காமல் இருந்திருக்கிறார்.*

■

பாசம்-ஆபாசம் இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

எஸ்.ஐ.எம். ஜவ்ஹர்
மருதமுனை.

*பாசம் நெகிழவைக்கும் நெஞ்சை. ஆபாசம் நெகிழ்த்திக்காட்டும் நெஞ்சை. மற்றும் பிறவற்றை.*

■

மனைவி வீட்டில் இருக்க பிற பெண்களை நாடும் ஆண்கள் பற்றி.

எ.எ.எம். அமானுல்லாஹ்
மாத்தளை

*ஹோட்டல் சாப்பாட்டில் ருசி காண்பவர்கள்.*

■

எஜமானை உழைப்பாளி மிஞ்சிவிடுவான் போலிருக்கிறதே.

கவிப்பிரியா நிஷா
வெல்லம்பிட்டிய.

*விட்டான். மிஞ்சிவிட்டான்.*

■

நன்றி கெட்டவனுக்கு நன்மை செய்வது எதனைப் போன்றது?

செல்வி: மா. ஜோதிலட்சுமி
போபத்தலாவ.

*பாம்புக்கு வார்க்கும் பால்.*

■

கதைக்கும்- கதாபாத்திரத்திற்கும் தேவைப்பட்டால் கவர்ச்சியை காட்டி நடிக்க தயார் என்று சில கதாநாயகிகள் கூறுவது ஏன்?

ஏ.சி.எம். முஸம்மில்
வட்டதெனிய.

*கவர்ச்சிக்கு ரெடி என்பதை மறைமுகமாகச் சொல்கிறார்கள் அப்படி.*

■



ஆரம்பத்தில் சந்தோசமாக மலரும் காதல் இறுதிவரை நிலைக்குமா?

செல்வன். சுப்பையா அந்தனி
பூண்டுலோயா.

*எல்லாப்பூவும் கனியாவதில்லை.*

■

கின்னஸ் சாதனையில் இலங்கையர் ஒருவருடைய பெயராவது பதியப்பட்டுள்ளதா?

ம. ஹரிராஜேந்திரன்
தெகிவளை.

*ஆழிக்குமரன் ஆனந்தன்- சிறிஸ்கந்தராஜா இவர்கள் எல்லாம் இலங்கையர்கள் தானே.*

■

சிந்தியா சிந்தித்தது - சிரித்தது எதைப்பற்றி?

எஸ்.பி. சுப்பிரமணியம்
அக்கரைப்பத்தனை.

*சிந்தித்தது- தீராமல் தொடரும் இனச் சிக்கல் பற்றி*

*சிரித்தது- பாராளுமன்ற தெரிவுக்குழு பிரச்சனையை தீர்க்கும் என்று சொல்லப்படுவது பற்றி.*

■

இலங்கை மண்ணில் கபில் தேவ் உலக சதனையை முறியடிப்பாரா?

சு. பாலகுமார்
ஹட்டன்.

*மாட்டார்.*

■

தன்னைத்தானே புகழ்பவர் பற்றி ஒரிரு வார்த்தைகள்?

செல்வி: நிஸ்னா நிசார்
தெலியாகொன்ன.

*அடுத்தவரால் புகழப்பட எதுவுமே இல்லாதவர்கள். அடுத்தவரை புகழவும் தெரியாதவர்கள்.*

■

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனைப் பற்றி சில வரிகள்?

ரைஸா ரவுப்
புத்தளம்.

*சுறுசுறுப்பான இளம் தலைவர். சில நேரங்களில் தவறான முடிவுகளும் எடுக்கக் கூடியவர்.*

■

உங்களுக்கு பிடித்த உலகத் தலைவர் யார்?

வீ. சொரூபன்
கண்டி.

*சேகுவேரா. பதவியை விட தோழமை மீதும், வசதிகளைவிட வகுத்த பாதைமீதும் பற்றுக் கொண்டவர். நம்மூர் ஜே.வி.பி காரர்கள் காரணமாக அவர் பெயரும் இங்கே கெட்டுப் போனதுதான் அநியாயம்.*

■

## பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** எம். எஸ்.எம். பாஸில்
**வயது:** 20
**முகவரி:** 157, கொங்காவெல வீதி, மாத்தளை.
**பொழுதுபோக்கு:** கவிதை எழுதுவது, பத்திரிகை வாசிப்பது, கிரிக்கெட் விளையாடுதல்.



**பெயர்:** நந்தினி சின்னக்குட்டி
**முகவரி:** 99, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை.



**பெயர்:** ஜெயசாகரன்
**வயது:** 22
**முகவரி:** 75, லோரன்ஸ் வீதி கொழும்பு-4.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், புத்தகம் வாசித்தல்.



**பெயர்:** ஏ.எல். பஸால் முகமட்
**வயது:** 22
**முகவரி:** 460/20, புல்லர்ஸ் ரோட், கொழும்பு-7.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, வாசித்தல், சினிமா பார்த்தல்.

**பெயர்:** எம்.எச்.எம். ஹாரிஸ்
**வயது:** 23
**முகவரி:** கரம்பை, பாலாவி, புத்தளம்.
**பொழுதுபோக்கு:** கவிதை புனைதல், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் பேனா நண்பர்களுடன் கடிதத் தொடர்பு.



**பெயர்:** ம. ஸ்ரீகாந்தன்
**வயது:** 18
**முகவரி:** ரயிகம மேல் (பி) பிரிவு, இங்கிரிய.
**பொழுதுபோக்கு:** சித்திரம் வரைதல், ஆக்கங்கள் எழுதுதல்.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-3

சிறுகதை

# தொலைந்து போன வாழ்க்கை!

-துறைநீலாவனை வரதராஜன்-

அன்று வழக்கத்துக்கு மாறாக சோதனை சாவடிகளில் சோதனை 'கடுமையாக' இருந்தது. அந்த பிரதேசத்துக்கு முன்னணிப் 'படைத் தளகர்த்தர்' வருவதனால் தானாம் அப்படி என்று என் அருகில் இருந்தவர் பேசிக் கொண்டது என் காதுகளில் விழுகிறது.

நான் இருந்த 'சீற்டில்' என் அருகில் ஒரு இளம் பெண் அமர்ந்து கொண்டாள். ரோஜாப்பூவின் மெல்லிய வாசனை என் மூக்கைத் துளைத்தது. அவளை ஒரு தடவை பார்க்க வேண்டும் போல் இருந்தது. கட்டையாக வெட்டிய கூந்தல். கட்டைப் பாவாடை. உருண்டைக் கண்கள் சாம்பல் நிறத்தில் இருந்தது.

அவளைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. நீண்ட நாட்களுக்கு பின் என் சொந்த ஊருக்கு வருவதால் என் நெஞ்செல்லாம் ஊர் நினைவுகள் படமாய் ஓடிக் கொண்டிருந்தன.

அவள் கைகள் எதேச்சையாய் என் மேல் விழுந்தது. திடீரென கையை எடுத்துக்கொண்டவள் "சொறி" என்றாள். நானும் பதிலுக்கு 'பரவாயில்லை' என்பது போல் சிரித்துக் கொண்டேன். அவள் தன் உதட்டை ஈரமாக்கிக் கொண்டாள். பஸ் பயணங்களில் இது எனக்கு புது அனுபவமல்ல என்பதால் நான் இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சில பெண்கள் வேண்டுமென்றே இப்படி நடந்து கொள்வதுண்டு. ஆனால் சில பெண்கள் தங்கமானவர்கள். பெண்களாகவே இருந்து கொள்வார்கள். 'இவள் எப்படியோ ஆண்களிலும் தான் அப்படியானவர்கள் சிலர் இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்ட நான் கண்ணாடி வழியாக வயல் வெளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் இறங்கிக் கொள்ள வேண்டிய இடம் நெருங்கிவிட்டதால் இறங்குவதற்கு தயாராகினேன். இறங்கினேன்.

என் சொந்த பூமியில் காலடி வைத்தபோது என்னை அறியாமலே எனக்குள் ஓர் சந்தோச நதி ஊற்றெடுத்தது. சிறிது தூரம் நடந்து ஊர் வீதியை அடைந்தேன். தெருக்கரைகளில் ஆங்காங்கே குழாய் நீருக்காக பெண்கள் கூட்டம் காத்துக் கொண்டிருந்தது. அது எங்களூரின் 'தகவல் மையங்கள்' இங்குதான் புதுப்புதுச் செய்திகள் சுடச்சுட வெளிவரும். இன்னுமொரு இடத்தில் பெண்கள் வாய்ச் சண்டையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். 'குடி தண்ணீர்' பிரச்சனை இங்கும் தாண்டவமாடுவதால் இது இவர்களுக்கு வழக்கமாகிவிட்ட ஒன்று.

நான் வீட்டை நோக்கி மௌனமாக நடக்கிறேன் நெஞ்சில் கனத்த சுமையோடு........

இரண்டு வருடங்களுக்கு முன் இந்த மண் என் சொந்த மண். இன்று எனக்கு அன்னியமாகிப் போனது. அமைதி தேடி அலைந்து திரிந்தபோது அழகேசர் மாமா சொன்னார்

"கொழும்பில அகதிமுகாம் திறந்து இருக்குதாம். இங்க இருந்து போறவங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்ல எண்டு கதைக்கிறாங்க. நீங்களும் போக விருப்பமெண்டால்....." என்னை எப்படியோ கொழும்புக்கு அனுப்ப வேண்டும் என்றே அவர் விரும்பினார். என் அம்மாவுக்கு அந்த யோசனை இனிப்பாகத்தான் இருந்தது. ஏனென்றால் ஆண்பிள்ளைகளைப் பெற்ற தாய்மார் அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்த நேரம் அது.


என்னைப் பொறுத்தவரையில் சொந்த மண்ணை, வீட்டை, பழகிய சனங்களை.... இவற்றை எல்லாம் விட்டுப்பிரிந்து...... எனக்கு என்னவோ கொழும்புக்கு செல்வது பிடிக்கவில்லை.

அன்று இரவு நாய்களின் ஊளைச் சத்தம். அதன்பின் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று வெடிச்சத்தங்கள் காதைப் பிழந்தன. நான் மௌனமாக படுக்கையில் புரண்டு கொண்டேன்.

காலை ஆறுமணி இருக்கும் என் இளைய தம்பி வாயைப் பிளந்து கொண்டு வந்தான். "அண்ணா.... அண்ணா.... உங்களோட வருவார் சித்தா மாமா அவரை சுட்டுக்கிடக்குதாம்" எனக்கு என் இதயமே வெடிப்பது போன்ற ஒரு பிரமை. அழுகை கண்ணை அடைத்துக் கொண்டது.

இருண்ட இதயத்தோடு தெருக் கோடியை. நோக்கி நடக்கிறேன்.

சித்தாவின் நினைவுகள் சித்திரமாகிக் கொண்டிருந்தன.



"சித்தாவை சுட்டுக் கிடக்குதாம்..... சித்தாவை சுட்டுக்கிடக்குதாம்...."

மீண்டும் மீண்டும் யாரோ என் காதில் சொல்லிக்கொண்டிருந்தார்கள்......

என்னைப் பொறுத்தவரையில் இனிமேலும் இங்கு இருப்பதற்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. என்னை அறியாமலே எனக்குள் ஒரு வெறுப்பு.

"எங்கே நிம்மதி..... எங்கே நிம்மதி....." என்னுள் நானே பல தடவை கேட்டுக் கொண்டேன். நான் மட்டுமா இதய சுத்தி உள்ள மனிதர்கள் எல்லோரும் இதைத்தான் கேட்டுக் கொள்வார்கள்.

ஆயுத மோகத்தில் ஆழ்ந்திருக்கும் சமூகத்தில் எங்கே நிம்மதி?

நான் எந்த பூமியை விட்டுச் செல்ல மறந்தேனோ அந்த பூமியை, சனங்களை விட்டு நான் கொழும்புக்கு செல்ல வேண்டும் என்ற அக்கறை என்னை அறியாமலே என் இதயத்தை அரித்துக் கொண்டிருந்தது. எப்படியோ கொழும்புக்கு சென்றுவிட வேண்டும். அகதிமுகாமில் அமைதியாய் இருக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள்....

"இங்கு இருந்து இரவும் பகலும் ஓடி ஒளிச்சுத் திரியிறதக் காட்டி அகதிமுகாமில போய்..." பிள்ளை மனம் கல்லு என்றாலும் பெற்ற மனம் என்ற படியால் அம்மா அடிக்கடி இதையே சொல்லிக் கொண்டிருப்பாள். அது எனக்கு சரியாகத்தான் பட்டது.

நான் கொழும்புக்கு செல்வதென்றே முடிவாகி ஒருவாறாக கொழும்புக்கு வந்து விட்டேன்.

அகதி முகாமில் நான் என்னையே என் நாட்டுக்குள்ளேயே ஒரு அகதியாக பதிந்து கொண்டேன். ஊரில் இருந்த பயம் இன்றி நிம்மதியாக தூங்கி விழிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் ஊர் நினைவுகள் என்னுள் தீயாய்....

அகதி வாழ்க்கை சிலருக்கு மட்டும் வசதி வாழ்க்கையாகத்தான் இருந்தது. எனக்கு என்னவோ அது அவதி வாழ்க்கையாகத்தான் இருந்தது.

ஊர் நினைவுகள் என்னுள் ஊறி அதை அறிய ஆவலாய் அங்கு கடிதம் போட்டால் என் நண்பன் சிவா கட்டுக் கட்டாய் கதை எழுதி அனுப்புவான்.

"இங்கு வரவேண்டாம். இங்கு வரவேண்டாம்" என்ற வாசகத்தை வரிக்கு வரி எழுத மறப்பதில்லை அவன்.

முன்னரெல்லாம் நாங்கள் ஒன்றாய் கூடி ஊர் வீதியில் ஓடிவிளையாடித் திரிந்த காலம் இனி எங்கே? படித்து விட்டு வேலை இல்லாத பட்டாளம் எல்லாம் ஒன்றாய்க் கூடி ஊர்க் கதை பேசி மகிழ்ந்த இனிய பொழுதுகள் இனி எங்கே? இப்படி எத்தனையோ நினைவுகள் என்னுள்.....ஓ...... அது ஒரு காலம். அந்த நினைவுகள் பசுமரத்தாணியாய் நெஞ்சில்.

என்னோடு அகதி முகாமில் இருந்த நாதன், சுதா, கேதீஸ்...இப்படி ஒரு பட்டியலையே போட்டுவிடலாம். இப்பொழுது அவர்கள் எல்லாம் வெளிநாடு சென்று வெகுநாட்களாகி விட்டது. எனக்கும் ஆசைதான். ஆனால்.....வெறும் கை முழம் நீழுமா? ஆசைக்கு அணை போட்டுவிட்டு மாதக்கணக்கில் அகதி முகாமே தஞ்சம் என்பது என் தலைவிதியாவிட்டது.

அகதிவாழ்க்கை கசந்தது. அகதி முகாமை விட்டு எப்படியோ என் சொந்த ஊருக்கு சென்றுவிட வேண்டும் என்பதே என் வேட்கையாய் இருந்தது. 'சொர்க்கமே என்றாலும் அது சொந்த ஊருக்கு ஈடாகுமா?' என் ஆசை அடுத்த நிமிடமே மின்னலாய் மாறிவிடும். ஊரிலிருந்து வரும் கடிதங்களுக்கு அப்படி ஒரு சக்தி இருப்பது புரிகிறது.

நீண்ட நாட்களின் பின் என் சகோதரி கடிதம் போட்டிருந்தாள்.

"அண்ணா நீண்ட நாட்களாக ஒரு கூட்டுக் கிளியாக இருந்த நாம் தூரங்களின் இடைவெளியால் தேசத்தில் பிரிக்கப்பட்டிருக்கின்றோம். நாம் மட்டுமா? எம்மைப் போல் எத்தனை பேர் முகங்களைக் காணாது முகவரிகளை முத்தமிட்டுக் கொள்பவர்கள். என்ன செய்வது துன்பங்களும் துயரங்களும் மனித வாழ்க்கையில் சகஜம்தானே.. இவற்றை எல்லாம் சகித்துக் கொள்ளக்கூடிய மன திட்டம் வேண்டும். துன்பங்களையும் துயரங்களையும் வெல்ல எடுக்கின்ற முயற்சிதானே வாழ்க்கை. இல்லாவிடில் வாழ்க்கை என்பதற்கு ஒரு அர்த்தம் இல்லாது போய்விடும் அல்லவா?

நாம் எல்லாம் ஒன்றாய் சேர்ந்து வாழும் காலம் ஒரு நாள் வரும்தானே. அது....வரும். நிச்சயமாய் வரும்.

நீங்கள் இங்கு வருவதற்கு ஆவலாய் இருப்பீர்கள் என்பது எங்களுக்கு தெரியும். இங்கு நிலமை முன்னரைவிடப் பரவாயில்லை. இருந்தாலும்....அடுத்த மாதம் பெரிய அண்ணனுக்கு திருமணம்.... ஆகவே நீங்கள் ஒரு தடவை வந்து போகவும்.

இன்னுமொரு விடயம். இதைப்பற்றி அறியத் தருவதில் வேதனை அடைகிறேன். இப்பொழுதெல்லாம் நாம் இதைப் போன்ற செய்திகளைக் கேட்டுக் கேட்டு மரத்து போய்விட்டோம். அது உங்கள் நண்பர் அன்ரனி கடந்த 5ம் திகதி.....

நீண்ட நாட்களின் பின் கடிதம் கண்ட மகிழ்ச்சி மடிந்தது. எனக்குள் ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவது போல் இருந்தது.

நான் துன்பப்பட்டு, சந்தோஷம் இன்றி அலைந்து திரிந்தபோது எனக்கு ஆறுதல் கூறி "பைபிள்" வசனங்களைச் சொல்லிச் சொல்லி என்னை வழிக்கு திருப்பிய அன்ரனி பிறதர்?

நான் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டேன். அன்ரனி பிறதரைப் போல் இன்னும் எத்தனை பேர்? "எல்லாம் இந்தப் போரினால்தான். இந்த தேவையற்ற போரினால்தான்" நான் எனக்குள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேன்.

எனக்கு இப்பொழுதும் ஞாபகம் இருக்கிறது. அன்ரனி பிறதர் சொல்லித் தந்த தேவ வசனம்.

"என் மகனே என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளை காக்கக் கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப் பண்ணும்."

தேவனின் பாதையில் நடந்த அன்ரனி தேவனிடத்தில் சேர்ந்து விட்டாரா? இது மீண்டும் மீண்டும் என்னை உறுத்தியது.

எப்போது போர் ஓயும்? எப்போது சமாதானம் பிறக்கும்? அழகனும் அன்சாரும் அப்புகாமியும் எப்போது ஒன்றாய் வாழும் நாள் வரும்? இது நான் மட்டும் கேட்டுக்கொள்ளும் கேள்வியா? இல்லை தேசத்தின் ஒற்றுமையில் அமைதியை நேசிக்கும் ஒவ்வொரு மனிதமும் கேட்டுக்கொள்ளும் கேள்விதான். அவ்வப்போது அமைதி ஏற்படும் என்று ஆவலாய் எதிர்பார்த்து அந்தச் சந்தர்ப்பங்களை விடி வெள்ளியாய் நோக்கும் போது அது மின்மினிப் பூச்சியாய் மறைந்துவிடும். அப்போதெல்லாம் அமைதி தேடும் மனித மனதுகளும் உடைந்து விடும்.

அமைதி வரும், அமைதி வரும் என்று ஒவ்வொருவரும் கைகட்டி வாய் பொத்தி இருந்தால்? இப்பொழுதெல்லாம் அனேகமானவர்கள் அந்தச் சூழலுக்கே தம்மை இசைவாக்கிக் கொண்டு விட்டார்கள்?

சோகத்தின் இடையே பெரிய அண்ணருக்கு திருமணம் என்ற செய்தியுடன் சிறிதான சந்தோசம் தந்தது. எப்படியோ ஊருக்கு சென்றுவிட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்பதால் நான் ஊருக்கு புறப்படத் தயாரானேன். அகதி முகாமில் சிலகால இடைவெளிக்குள் பழகிய நண்பர்களை எல்லாம் விட்டுப் பிரிந்து செல்ல மனம் வேதனைப்பட்டுக் கொண்டது. மனித மனம் இப்படித் தானே. அது அன்புக்கு ஆட்படுவதனால் என்னவோ இப்படி ஒரு நிலை. ஒருவாறாக எல்லோருக்கும் பயணம் சொல்லி புறப்பட்டுவிட்டேன்.

கடந்தகால நினைவுகளில் இருந்து நிஜ உலகுக்கு மீண்ட நான் நிமிர்ந்து பார்த்த போது நண்பன் சிவா எதிரில் பட்டான். நான் அவனிடம் சுகம் விசாரிக்க அவன் என் பயணப் பையை வாங்கிக்கொண்டு என்னுடன் மௌனமாக வீடு நோக்கி நடந்தான்.

வீட்டுக் 'கேற்றை' அடைந்த போது எனக்கு'திக்'என்றது. வெள்ளைக் கொடி கட்டப்பட்டிருந்தது. எங்கள் சமய சம்பிரதாயப்படி படலைக்கு அருகில் வெட்டப்பட்ட இளநீர் வைக்கப்பட்டிருந்தது. அப்போதுதான் என் பாட்டியின் ஞாபகம்வந்து" சிவாபாட்டிக்கு...." அழுது கொண்டே கேட்டேன். அவன் மௌனமாக இல்லை என்று தலையசைத்தான்.

"அப்படி என்றால்....சொல்லு சிவா....சொல்லு...." அவன் என்னை இறுகப் பற்றிக் கொண்டான்.

வீட்டில் அம்மாவும் சகோதரியும் என்னைக் கண்டு வீரிட்டு அழுதனர்.

என்பாட்டி தடியோடு ஒரு மூலையில்.... அப்படி என்றால்......

"பெரியண்ண.. பெரியண்ண....." நான் வெடித்து அழுது கொண்டேன். மணவாளன் ஆகவேண்டியவரை மரணம்..... துப்பாக்கி வடிவில் வந்து...... சோகம் இதயத்தில் மலையாய் விழுந்து அழுத்தியது.

சிவா எல்லாவற்றையும் விபரமாகச் சொன்னான்.

அவன் ஏதேதோ சொன்னான். எனக்கு என் மனதில் பெரியண்ணனின் நினைவுகள் மட்டும்.....

இப்பொழுதும் நான் என்னைக் கேட்டுக் கொள்கிறேன்" எங்கே நிம்மதி? என்னைப் போல் இன்னும் எத்தனை பேர்? எத்தனை அழகான கனவுகள். வாழ்வின் சுவையான பக்கங்கள் எல்லாம், எல்லாம் ....ஓ.... அமைதி வருமா? சமாதானம் பிறக்குமா?.....இன்னும் எத்தனையோ கேள்விகள்..... என்னுள் விடைதேடி நிற்கின்றன.

---

செக்கன் கதை

# பட்டதாரி

-கொழும்பு வளாகம் எம்.சுரேஷ்-

இது காதல் புலம்பலல்ல, நிஜங்களின் நிர்வாணம்!!

"எலும்புக்கூடு....ஆமாம்.... அதிக வித்தியாசமில்லை" என்னை நானே விமர்சித்துக் கொள்கிறேன். கனவுகளை இலவசமாய் வாங்கி, கற்பனையில் டூயட் பாடிய நேரங்களில்...... கல்லூரிக் காதலை வெளியே சொல்ல முடியாமல் மனதுக்குள்ளேயே தற்கொலை செய்து கொண்ட நேரங்களில்..... அவள் விழிகளுக்குள் சிக்கிய இதயத்தை சிக்கெடுக்க முடியாமல் அறுத்துவிட்ட நேரங்களில்.... எனக்கு அதிகம் சிந்திக்கத் தெரியவில்லை. முதல் நாள் பறந்த பட்டாம் பூச்சியையும், முதல்நாள் நுகர்ந்த ரோஜா மலரையும் எனக்கு நினைவில் வைத்திருக்கத் தெரியவில்லை. எனக்கு ஏனோ அந்தக் காலத்தில் "கவலை" தெரியாமலே போனது.

-உன் காதலைப் போல்!

நான் கவிதைகளைக் காதலித்துப்



பூஞ்சோலைக்குள் ஒதுங்கிய போதெல்லாம் என் தாய் என்னை வெளியே இழுத்தெடுத்து பல்கலைக் கழகத்திற்குள் துரத்தி விட்டாள்...... இது வளாகம். எனக்கு' இங்கே சிந்திக்கத் தெரிகிறது. கவலைப்படத் தெரிகிறது. ஆனால் சிரிக்க மட்டும் தெரியவில்லை..... போலியாய் சிரிப்பதும் நடிப்புத்தானே?

இது வளாகத்து விடுதி..... எனக்கு அம்மா இல்லாத விடுதி.... எங்களுக்கு அம்மாக்கள் இல்லாத விடுதி..... இங்கே வசதிகள், வசதிக்காக ஒதுங்கிக்கொண்டன. காலைத் தேனீர்- வீட்டில் குடித்ததை நினைத்துக்கொள்ள வேண்டியது தான்....சாப்பாடு?.....அது கையில் கிடைப்பதைப் பொறுத்தது!

ச்சே...வாய்விட்டு அழக்கூட முடியாத பிறவிகள்....வெளியே உதவிகள் கேட்க முடியுமா? வயதும் தன்மானமும் தடுக்கின்றன. ஆமாம்... நாங்கள் தினமும் தீக்குளிக்கும் சீதைகள்......ராமர்கள் எங்கள் பட்டப்படிப்புக்களாய்.....

ஏதோ, காலங்களும், கற்பனைகளும் கரைந்தது போலவே என் உடலும் உருக்குலைந்து போனது நாட்டு நிலமையைப், போல்! "எலும்புக்கூடு...ஆமாம்....அதிக வித்தியாசமில்லை" என்னை நானே விமர்சித்துக் கொள்கிறேன்.....

அம்மா....என் நிலையைப் பார்த்தாயா? அழாதே..... இதோ, நான் ஒரு பட்டதாரி. விடியல்களை விற்று இரவுகளை வாங்கியதால், இளமையை விற்று பட்டத்தை வாங்கியதால், இப்போது நான் மட்டுமல்ல, என் கனவுகளும் எலும்புக் கூடுகள் தான். இருப்பினும் எனக்குக் கவலையில்லை காரணம் என் பட்டத்திற்காக அழகான மகள்மாரைக் கொடுக்க இன்னும் மாமன்மார் தயாராய் இருக்கிறார்களே.......!

(யாவும் உண்மைதானே?)

## சிறுகதை

# நம்ப முடியவில்லை

-லேகா-



பஸ்போய்க் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக கடந்து செல்லும் காலைக் காட்சிகளை ரசித்துக்கொண்டிருந்தாள் சித்ரா.

நகரிலுள்ள ஒரு கம்பெனியில் அவளுக்கு வேலை. ஆனால் அவள் குடியிருந்ததோ நகரிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு சிற்றூரில். தினமும் இரண்டு மணி நேர பஸ் பிரயாணம். போக ஒன்று, வர ஒன்றாக இரண்டு மணித்தியாளங்களை அவள் பஸ்ஸில் கழிக்க வேண்டும்.

எத்தனையோ சிரமத்தின் மத்தியில் கிடைத்த வேலை. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் என்பார்கள். படித்துப் பட்டம் பெற்று வேலை தேடி அலைபவர்கள் கூட இன்று ஆயிரம் பொய் சொல்லித்தான் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் சித்ராவோ ஒரே ஒரு பொய் சொல்லி இந்த வேலையைத் தேடிக்கொள்ள முடிந்தது. வேலை கிடைத்து மாதம் ஒன்றாகிறது.

நினைவுகளை அசைபோட்ட வண்ணம் ,வெளியே பார்த்துக் கொண்டிருந்த அவள் தன்னை யாரோ உற்று நோக்குவதை உணர்ந்து பஸ்ஸின் உள்ளே பார்வையை ஓட விட்டாள். திடுக்கிட்டாள்.

அவளது இருக்கைக்கு நேர் எதிரே சாரதி ஆசனத்தின் பின்னால் இருந்த ஒருவன் அவளையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான். இவள் தன்னைப் பார்ப்பதை அறிந்த அவன் சட்டென தன் பார்வையை வேறு பக்கம் சுழல விட்டான்.

நெஞ்சு படபடவென் அடித்துக் கொள்ள தற்காலிகமாகப் பார்வையை வலுக்கட்டாயமாக வெளியே திருப்பினாள் சித்ரா.

யார் இவன்? ஏன் என்னையே பார்க்க வேண்டும்? ஒரு வேளை... தன் எண்ணக் குதிரைக்கு கடிவாள மிட்டவள் திரும்பவும் மெதுவாகப் பார்வையை உள்ளே ஓடவிட்டாள்.

அதோ... இப்போதும் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தன்னைத்தான் வெறித்துப் பார்க்கிறான் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட சித்ரா சடாரென முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இனிமேல் உள்ளே பார்க்கவே கூடாது என்று மனதுக்குள் எண்ணியவாறு முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டாள்.

பஸ்ஸும் பயணத்தை முடித்துக் கொண்டு நகரின் அந்தப் பிரதான பஸ் நிலையத்தை அடைந்தது. மடியில் கிடந்த தனது கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டியவாறு சுற்று முற்றும் ஒருமுறை நோட்டமிட்டாள் சித்ரா. அவனைக் காணவில்லை. நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டவள் பஸ்ஸிலிருந்து இறங்கி அலுவலகம் நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அலுவலக வேலைகளில் மூழ்கிய போது அந்தப் பார்வையாளனை முற்றாக மறந்து விட்டிருந்தாள் அவள்.

மாலையில் வீடு திரும்பிய பின்னரும் கூட அவளுக்கு நினைவு வரவே இல்லை. மறுநாள் மணி ஏழரை. ஒன்பது மணிக்கு அவள் அலுவலகத்தில் இருக்க வேண்டும். இப்போதே புறப்பட்டால்தான் சரியான நேரத்திற்குச் செல்லமுடியும்.

அவள் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள திடலில் நகர் நோக்கிச் செல்லும் இரண்டு மூன்று பஸ்கள் நிற்பதுண்டு. ஒன்றில் அவள் ஏறவும் பஸ் புறப்படவும் சரியாக இருந்தது.

அத்தனைக் கூட்டமில்லை. நகர் நோக்கிச் செல்லும் இடைவழியில் தான் கூட்டம் அதிகரிக்கும். இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தாள். சட்டென நேற்றைய அந்தப் பார்வையாளன் ஞாபகத்துக்கு வர பஸ்ஸினுள் அவள் பார்வை ஓடியது. நல்ல வேளை அவன் இல்லை. ஒருவித நிம்மதியுடன் ஜன்னலினூடே பார்வையைச் செலுத்தினாள்.

பஸ் நகர்ந்தது. குறிப்பிட்ட சில தூரம்வரை இந்த 'நகர்வு' தான். பிரதான பாதையின் ஓரிடத்தில் சில நிமிட நேரம் காத்திருந்த பின்னர் தான் அதன் வேகம் அதிகரிக்கும். குறிப்பிட்ட அந்த இடம் வந்தது. பயணிகள் ஓரளவு 'நிறை'ந்ததும் பஸ் நின்று நிதானித்துப் பின்னர் சீறியது.

இன்று சித்ராவுக்கு சாரதி இருக்கையிலிருந்து நேராக உள்ள வரிசையில் இரண்டாவது ஆசனத்தில் இடம் கிடைத்தது. தற்செயலாக எதிர்ப்பக்கத்தை நோக்கியவள் திடுக்கிட்டாள். அவன் அமர்ந்திருந்தான்.

இன்றும் சித்ராவின் முக தரிசனம் நேர் எதிரே அவனுக்குக் கிடைத்தது.

இத்தனைக்கும் எவரையும் கவர்ந்திழுக்கும் நவநாகரிகப் பெண் அல்ல அவள். அவளின் எளிய அலங்காரமே யாவரையும் கவர்ந்திழுக்கும். ஒற்றைச்சடை, நெற்றியில் சிறியதொரு சாந்துப்பொட்டு, காதுகளில் சிறிய தோடு, கழுத்தில் மெல்லிய செயின், ஒரு கையில் வாட்ச், மறுகையில்மெல்லிய வளையல்ஒன்று, சாதாரண நூல் சேலை.

இவ்வளவுதான் அவள் அலங்காரம்.

அவளின் வனப்புமிகுந்த உடற்கட்டுக்கு இதுவே மிகையானது தான் என்பது அந்தப் பார்வையாளனின் அபிப்பிராயமாக இருந்ததோ என்னவோ?

ஒருமுறை அவன் பார்வைவையைச் சந்தித்த அவள் இடைவெட்டிக் கொண்டாள்.

அது அலட்சியமா? அகங்காரமா..?

ஆனால் இவையிரண்டையும் அலட்சியம் பண்ணாமல் முகத்தில் மாறாத புன்னகையோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

ஒருவார காலம் இந்த 'மௌன' பார்வை நாடகம் தொடர்ந்து பஸ்ஸினுள் அரங்கேறிக் கொண்டிருந்தது. சித்ராவோ தினம் மனம் வெந்து கொண்டிருந்தாள். ஆனால் அவனோ அவள் தரிசனம் கிடைத்த சந்தோசத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

அன்று அரைநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் சித்ரா. கடந்த ஒரு வார காலமாக பலவாறான சிந்தனைகளில் சிக்குண்டு நிலைதடுமாறித்தான் போயிருந்தாள் அவள். அதனால் தானோ என்னவோ அவளுக்கு அன்று காலையிலிருந்தே ஒரே தலைவலி. அலுவலக முதல்வரிடம் அரைநாள் விடுப்பு எடுத்துக் கொண்டாள். பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த அவள் பார்வை தற்செயலாக எதிர்ச்சாரியில் முட்டி மோதியது.

அவன்...அதுவும் காரில்...!

அவளுக்கு வயிற்றைக் கலக்கியது. அவனும் அவளைப் பார்த்து விட்டான். மெதுவாக நகர்ந்த கார் ஒரு சுற்றுச்சுற்றி அவளருகே வந்து நின்றது.

"ஹலோ...எங்கே இந்த நேரம்....?" வார்த்தைகளை ஆச்சரியத்தில் குழைத்து, பலநாள் பழகியவன் போல் கேட்டான் அவன்.

"த...லை...வ....லி அதான் லீவு எடுத்துக்கிட்டு....." திக்கித்திணறிக் கூறினாள் சித்ரா.

"தலைவலியா, வாங்களேன் நானே காரில் ட்ராப் பண்ணுசிறேன்......

"இல்ல....பரவாயில்ல.....நான் பஸ்ஸிலேயே போய்க்கிறேன்....."

"என்னடா, ஒருநாள் கூடப் பேசி அறியாதவன் வலிய வந்து கூப்பிடறானேன்னு யோசிக்கிறீங்க... இல்ல.... எம்மேல நம்பிக்கை இல்லாட்டா வேணாம்......."

"அ.....ப்....ப....டியெல்லாம் ஒண்ணுமில்லே....." என்றவள், பஸ் நிலையத்தில் பல ஜோடிக்கண்கள் தங்களை மெய்ப்பதை உணர்ந்து சட்டென்று கார்க்கதவைத் திறந்து முன் இருக்கையில் அமர்ந்தாள்.

கார் பறந்தது. ஓரிரு நொடிகள் கரைந்த மௌனத்தைக் கலைத்தான் அவன்.

"நான் அசோக். தனியார் நிறுவனம் ஒன்றில் காஷியராக வேலை பார்க்கிறேன். இது நிறுவன கார். டிரைவர் இன்னிக்கு லீவு...பாங்குக்கு வந்தேன்...பஸ்ஸில தினம் உங்களைப் பார்க்கிறேன். .....பேசணும்னு நினைப்பேன் ....ஆனா நீங்க பேசுவீங்களோ மாட்டீங்களோன்னு தான்....." என்று நீண்ட தன் பேச்சை முடித்து பக்கவாட்டில் திரும்பி அவனைப் பார்த்தான் அசோக்.

கார் தனது வேகத்தைக் குறைத்திருந்தது. முகத்தில் துளிர்த்திருந்த வியர்வையை கைக்குட்டையால் ஒற்றியவண்ணமிருந்த சித்ரா, தன்னை சுதாகரித்துக் கொண்டு, "பேசுறதில என்ன இருக்கு....நான் சித்ரா....." என்றாள் மொட்டையாக.

இலத்தினச்சுருக்கமாக வார்த்தைகளை அளந்து பேசியது அவனுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "எங்கே வேலை பார்க்கிறீங்க..?" எனக் கேட்க, அவள் சொன்னாள்.

அத்தோடு பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க எண்ணிய அவள், "இங்கேயே நிறுத்திடுங்க.... இறங்கிக்கறேன்... கடையில சில பொருள்கள் வாங்க வேண்டியிருக்கு" என்றதும் அவன் காரை நிறுத்தினான்.

இறங்கியவள் "தேங்ஸ்" என்றாள். அவன் "சீ..யூ..." என்றான். நெஞ்சில் கைவைத்து, இத்தனை நேரம் படபடத்துக் கொண்டிருந்த இதயத்தை ஆசுவாசப்படுத்தினாள். வீடு நோக்கி நடந்தாள்.

மேலும் ஒரு வாரம் தூசு தட்டிவிட்டதைப் போல் மறைந்தது. பார்வையிலிருந்து ஓரிரு பரிமாற்ற வார்த்தைகளுக்கு மாறியிருந்தார்கள் சித்ராவும் அசோக்கும்.

'குட் மோனிங்' 'ஹௌ....', 'பைன்......' எப்படியிருக்கீங்க......'

இப்படித் தொடர்ந்த உரையாடல், "இன்று இந்த சாரியில் அழகாயிருக்கீங்க...." என்று அவளை வர்ணிக்கும் அளவில் வந்து நின்றது.

சித்ரா அதிகமாகப் பேசாவிட்டாலும் அவனது கலகலப்பான பேச்சும் களங்கமில்லாத சிரிப்பும் அவளுக்குப் பிடித்துத்தான் இருந்தது. ஒரு நாளில் அவளைப் பார்க்காமல் பேசாமல் இருக்க முடியாது அவனால். அதே போல் தான் சித்ராவும்..... அவன் பஸ்ஸில் இல்லையென்றால் நாலா பக்கமும் அவள் கண்கள் அலைபாயும்...முகம் வாடிவிடும்.

ஆனால் இதுவரை அவர்கள் பரஸ்பரம் தத்தமது குடும்ப நிலைமைகளைப் பற்றி விசாரித்துக் கொண்டதில்லை. அவன் யார், அம்மா, அப்பா, சகோதரர்கள் இருக்கிறார்களா என்றெல்லாம் சித்ரா ஒருநாள் கூட கேட்டதில்லை. அது தனக்கு அவசியமில்லாதது என்றே அவள் நினைத்திருந்தாள். அதே போல் அசோக்கும் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை.

இருவரிடையேயும் அன்பும் நட்பும் மட்டுமே பாலமாக இருந்தால் போதும் என்பது சித்ராவின் கணிப்பு.

ஆனால்...அசோக்...?

அன்று சித்ராவின் பிறந்தநாள். ஏற்கனவே தெரிந்து வைத்திருந்ததனால் பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே அவளது கையைப் பற்றி, "மெனி ஹெப்பி ரிடர்ன்ஸ் ஒப் த டே..." என்ற அசோக் அவள் "தேங்ஸ்..." சொல்லி பல நொடிகளாகியும் கையை விலக்கிக் கொள்ளவில்லை.

"என்ன நடுத்தெருவில் பகல் கனவா...?" விகல்பமில்லாமல் சித்ரா கேட்ட பின்னரே தன்னுணர்வு வரப்பெற்றான் அசோக். கலகலவென சிரித்தாள் சித்ரா....

"ஓ...ஐ யேம் சாரி" என்றவன் கரத்தை விடுத்து அசடு வழிந்தான்..... அன்றிலிருந்து அவனது போக்கில் மாறுதல் தென்பட்டது. அவனது 'பார்வை'யும் மாறியது. சதா சிரித்துக் கலகலப்பாக இருந்தவன் திடுமென்று மௌனமானான். அவளை வெறித்து நோக்குவான். சித்ராவுக்கும் அவனது இந்தப் போக்கு புரியாத புதிரானது. ஒருநாள் அவனிடம் வாய்விட்டே கேட்டுவிட்டாள்.

"என்ன அசோக்....ஏன் ஒரு மாதிரியாக இருக்கீங்க..... முன்ன போல் சிரித்துப் பேசுவதில்லையே...."என்ற அவளது கேள்விக்கு ஒரு புன்முறுவல் மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

என்னவாக இருக்கும் என்று குழம்பித் தவித்தாள் சித்ரா.

அன்று அவள் ஏறிய பஸ்ஸில் கூட்டமே இல்லை. அவளோடு சேர்த்து ஐவர் மட்டுமே இருந்தனர். இந்த ஐவரோடு பஸ் புறப்பட்டு அசோக் வழக்கமாக ஏறும் பஸ் நிலையத்தை வந்தடைந்தது.

அசோக் பஸ்ஸில் ஏறினான். காலியாக இருந்த சித்ராவின் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். பஸ் புறப்பட்டது.

"குட் மோர்னிங் அசோக்...."

"குட் மோர்னிங்..." என்றவன் "சித்ரா இந்தப் புத்தகத்தை நேற்று என் நண்பனிடம் வாங்கினேன். அருமையான காதல் கதை..படிக்கிறீங்களா...?"

"ஓ...தாங்களேன்...." என்று கையை நீட்டியவளுக்குப் புத்தகத்தைக் கொடுத்த அசோக் அவளது கரத்தையும் சேர்த்துப் பிடித்தான். இதனைச் சற்றும் எதிர்பார்க்காத சித்ரா தீயைமிதித்தவள் போல் பதறினாள். கையை வெடுக்கென விடுவித்தவள் புத்தகத்தையும் தவறவிட்டாள். புத்தகம் அசோக்கின் மடியில் விழுந்தது.

முகத்தில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தவள், அவனை "இவ்வளவுதானா...?" என்பது போல் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கோபத்தால் அவள் முகம் சிவந்தது.

தன் தவறை உணர்ந்தான் அசோக். தங்களை யாரும் கவனிக்கிறார்களா என்று பார்த்துவிட்டு அதே புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டான்.

இறங்குமிடம் வந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கிய சித்ரா அவனைத் திரும்பியும் பாராமல் விடுவிடுவென நடக்கத் தொடங்கினாள்.

அவளது அலுவலகத்திற்குச் சற்றுத் தொலைவில் அவனது காரியாலயமும் இருந்ததால் இருவரும் சேர்ந்தே நடப்பது வழக்கம்.

சித்ராவின் இந்தப் பாராமுகம் அவனை வெகுவாகப் பாதித்தது. சித்ராவுக்கும் வேலையில் முழுதாக ஈடுபட முடியவில்லை. ஒருவாறு மனம் தெளிந்தவள்.

"சே....நம் மடத்தனம்.... ஆரம்பத்திலேயே நம்மைப்பற்றி சொல்லித் தொலைத்திருக்க வேண்டும்...அவனில் தவறில்லை... இன்று மாலை எப்படியும் அசோக்கை தனிமையில் சந்தித்து சொல்லிவிட வேண்டும்....அதற்கு முன்..." சிந்தித்தவாறே டெலிபோனை நோக்கி நடந்தாள் சித்ரா.

அவனது அலுவலக எண்களைச் சுழற்றினாள். அவனும் தொடர்பு கொண்டான்.

"அசோக், நான் சித்ரா பேசறேன்..."

மறுமுனையில், "சித்ராவா....?" அதிர்ந்தான் அசோக்.

"ஆமா....உங்களோடு நான் தனியா பேசனும் ஈவ்னிங் பஸ் ஹால்ட்டுக்கு முன்னால உள்ள பார்க்கில சந்திப்போம்...." அவன் பதிலுக்குக் கூட காத்திராமல் போனை வைத்தாள் சித்ரா.

மாலையும் வந்தது. பார்க்கில் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு அமர்ந்திருந்தனர். மௌனத்தைக் கலைத்தாள் சித்ரா.

"அசோக்.... உங்ககிட்ட ஒரு உண்மையை இதுவரையில மறைச்சிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க...நான் திருமணமானவ...."

"எ...ன்....ன?" நிலைகுலைந்தான் அசோக். வார்த்தைகள் தடுமாறின.

"யெஸ்... எனக்குக் கல்யாணம் ஆனப்ப என் கணவருக்கு ஏகப்பட்ட கடன்.... அவரது ஒரேயொரு தங்கைக்கும் சிட்டத்தில தான் திருமணம் நடந்தது.... அதனால கடன் இரட்டிப்பாயிடுச்சி...கடனை அடைக்க அவரது வருமானம் போதல்ல...அதான் என் நகைகளையெல்லாம் அடவு வச்சு அவரை சவூதி அனுப்பினேன்...சும்மா இருக்கப் பிடிக்காம வேலைக்கு அப்ளை பண்ணினேன் பல இடத்தில இன்டர்வியூ போயும் 'மிஸிஸ் என்றதால சான்ஸ் கிடைக்கல்ல...இந்தக் கம்பெனியிலயும் இந்த நிலை வந்திடுமோன்னு தான் நான் 'மிஸ்'ஸாக அப்ளை பண்ணினேன். வேலையும் கிடைச்சது...இதுவரைக்கும் யார்கிட்டயும் இந்த உண்மையை நான் சொன்னதில்லை....நீங்க என்னோட எந்த தவறான எண்ணத்தோடயும் பழக மாட்டீங்கன்னு நினைச்சேன்... ஒரு நல்ல நண்பனா இருப்பீங்கன்னும் நம்பினேன். ஆன......நீங்க....." என்று ஏதோ சொல்ல வந்தவளை இடைமறித்தான் அசோக்.

"நோ....இதுக்கு மேல எதுவும் சொல்லாதீங்க...." என்று படபடப்புடன் கூறியவாறே விருட்டென எழுந்து நடக்க ஆரம்பித்தான் அசோக். அவன் போவதையே பார்த்துத் திக்பிரமைப் பிடித்து நின்றாள் சித்ரா.

மறுநாள். ஆபீஸ் புறப்பட்ட சித்ராவுக்கு மனம் பரிதவித்தது. பஸ்ஸிலும், பஸ்ஸைவிட்டு இறங்கிய பின்னரும் கூட அசோக் அவள் கண்களுக்குத் தட்டுப்படவே இல்லை.

ஆபீஸிலும் அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'ஒருவேளை...அவனது மனமாற்றத்திற்கு நான்தான் முழுக்காரணமோ....என்னால் தான் அவன் மனம் இப்படிக் குழம்பி விட்டானோ சுவரில் எறிந்த பந்துபோல் திரும்பத்திரும்ப இதே சிந்தனை அவளை உருக்குலைத்தது.

அரைநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வீடு திரும்ப நினைத்தவள் "மிஸ்...ஒங்களுக்கு ஒரு லெட்டர்....." என்ற பியூனின் குரல் கேட்டு அதிர்ந்தாள்.

"எனக்கா...?" என்றவாறே உறையை வாங்கினாள். உறையின் மேல் "மிஸ் சித்ரா" என்று அழகாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. கடிதத்தைப் பிரித்தாள் சித்ரா.

*"என் அன்பிற்கினிய சித்ரா,*

உங்களை மிஸிஸாக நினைத்துப் பார்க்க என்னால் முடியவில்லை. இத்தனை சொல்லியும் இப்படி எழுதியிருக்கிறானே என்று யோசிக்க வேண்டாம். உங்கள் நிலையை நீங்கள் சொல்லிவிட்டீர்கள், என்னைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். என்று உங்களை பஸ்ஸில் சந்தித்தேனோ அன்றே என் மனதில் உங்களைப் பதித்து விட்டேன். வேறு எவரும் புக முடியாதவாறு என் மனக்கதவை மூடியும் விட்டேன். அன்றிலிருந்தே என் மனத்தளவில் நான் உங்களோடு வாழ்ந்து கொண்டுதானிருக்கிறேன். இனிமேலும் என் உயிருள்ளவரை வாழ்ந்துகொண்டுதான் இருப்பேன். இதனால் எந்த விதத்திலும் உங்களுக்கு பாதிப்பு ஏற்படாது. உங்கள் நினைவுகளுடன் என்னால் வாழ முடியும். இதனைத் தடுக்க யாராலும் முடியாது. உங்களால் கூட. விடைபெறுகிறேன். இந்த ஊரைவிட்டே போகிறேன். என்னை மறந்து விடுங்கள்.

என்றும் உங்கள் இனிய நினைவுகளுடன்
வாழும் அசோக்.

கடிதத்தைப் படித்து முடித்த சித்ரா சிலையானாள். ■

அரைப் பக்க
கற்பனை இதழ்

# காதுல பூ

அரைப் பக்க
சுவாரசியம்

## தேடப்பட்ட பொன்னம்மா கைது

## தேர்தல் கூட்டத்தில் குழப்பம் கூட்டணி உறுப்பினர்கள் சுட்டனர்!

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் நடைபெற்ற ஜனநாயக முற்போக்கு புதிய நோக்கு கூட்டமைப்பின் கூட்டத்தை ஆயுதம் தாங்கிய நபர்கள் குழப்பினார்கள்.

புலிகள்-ஈ.பி.டி.பி. புளொட் ஆகிய அமைப்புக்களின் கூட்டமைப்பே ஜனநாயக முற்போக்கு புதிய போக்கு அமைப்பாகும் என்பது தெரிந்ததே.

கூட்டத்தைக் குழப்பியவர்கள் கூட்டணியினர் என்றும், முன்னர் தமது கூட்டங்கள் புலிகளால் குழப்பப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையே இது வென்றும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிசார் அவதானமாக விசாரித்து வருகின்றனர்.

தேநீர் கடையொன்றில் இருந்த நாகரத்தினம் வயது 76, பொன்னுத்துரை வயது 89, சதாசிவம் வயது 90 ஆகியோர் சந்தேகத்தின் பெயரில் வடக்கு-கிழக்கு மாகாணப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டணியினரின் பெண்கள் பிரிவொன்று நகருக்குள் ஊடுருவியதாக வெளியான பகிரங்கமான தகவல் ஒன்றையடுத்து பொன்னம்மா வயது 77, நாகம்மா வயது 86 ஆகிய இருவர் விசாரணைக்காக பலத்த காவலுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

விசாரணைகளில் பலத்த முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக மாகாண காவல்துறை வட்டாரங்கள் உறுதியோடு தெரிவித்தன.

விசாரணைகளின் தீவிரம் மற்றும் வேகம் போதாது என்று திரு.பிரபாகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னர் தமது யாழ் தளபதி குண்டு வீச்சுக்கு இலக்கான போது பலர் உடனடியாக தமது சிறையில் கொல்லப்பட்டதையும் நூற்றுக்கணக்கானோர் கைதான வேகத்தையும் அவர் நினைவூட்டினார்.

## அரசின் நல்ல திட்டங்களை எதிர்கட்சிகள் வரவேற்கும்

## இலங்கையின் அரசியலில் திருப்பம்

அரசாங்கம் மேற்கொள்ளும் தேசிய நலன் சம்பந்தப்பட்ட விடயங்களை இனிமேல் ஆதரிப்பதென்றும் - வரவேற்பதென்றும் எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும்.

எதிர்க்கட்சிகளின் பிளவுச் செய்திகளை பிரசுரிப்பதில்லை என்று அரச செய்தித் தொடர்பு சாதனங்களும் தீர்மானித்துள்ளன.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அதனை வரவேற்றுள்ளார். திருமதி பண்டாரநாயக்க வரவேற்றமை நல்ல முயற்சி என்று திரு அநுரா பண்டாரநாயக்கவும் வரவேற்றுள்ளார். திருமதி பண்டாரநாயக்காவின் முயற்சியை சரியானது என்று அவர் வரவேற்றுள்ளதும் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. அவர் வரவேற்ற காரணத்தால் இவர் வரவேற்க மாட்டார் என்றே முதலில் கருதப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் விமானம் பறக்கத்தடை? மக்களின் ஆதரவை வென்றெடுக்கும் முயற்சி!!

கடந்தகாலத்தில் விமானக் குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்ட மக்களை திருப்தி செய்யும் நடவடிக்கை ஒன்றை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

விமானச்சத்தம் கேட்டால் பங்கர்களுக்குள் ஓடிச்செல்லும் பழக்கம் இன்னமும் யாழ் மக்களிடம் இருந்து மறைய வில்லை.

நேற்று விமானப்படை விமானம் ஒன்றில் யாழ் நகர நிலைமையை சுற்றிப்பார்த்த சுற்றாடல் அமைச்சர் மக்கள் பதட்டத்தோடு அங்கும் இங்கும் ஓடுவதைக் கண்டார். எங்கே ஓடுகிறார்கள் என்று விமானியிடம் விசாரித்தபோது பழக்க தோசத்தில் அவர்கள் பங்கர்களுக்கு ஓடுவதாக அவர் பதிலளித்தார்.


அதிர்ச்சியடைந்த அமைச்சர் உடனடியாக தலைநகர் திரும்பி ஒருவருடகாலத்திற்கு யாழ்ப்பாண வான்பரப்பில் விமானங்களோ வேறெந்த பறக்கக்கூடிய போக்குவரத்து சாதனங்களோ பறக்கக் கூடாது என்று தடை விதித்தார்.

இந்த உத்தரவை தமிழர் அமைப்புக்கள் கண்டித்துள்ளன. தமது தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணங்கள் அதனால் பாதிப்படையும் என்று அவை தெரிவித்துள்ளன.

## குஸ்பூ உண்ணாவிரதம்

தமிழ் சினிமாவில் கவர்ச்சி அதிகமாகி வருவதை கண்டித்து பிரபல நடிகை குஸ்பூ கடந்த 48 நாட்களாக மன்னிக்கவேண்டும் 48 மணிநேரமாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

உண்ணாவிரதம் இருந்த 24 மணிநேரத்திற்குள் அவர் சட்டென்று மெலிந்துபோனதால் புதுக்கவர்ச்சியோடு தெரிகிறார். எனவே அவரது கோரிக்கை முன்னுக்குப் பின் முரணாக இருப்பதாக சினிமா உலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## அடையாள அட்டை வேண்டாம்

கொழும்பில் அடையாள அட்டை இல்லாமல் யார் வேண்டுமானாலும் நடமாடித்திரியலாம் என்று காவல்துறையினர் அறிவித்துள்ளனர். நாட்டில் தலைவிரித்தாடிய வன்முறை தலையை ஆட்டமாட்டேன் என்று உத்தரவாதம் செய்துள்ளதையடுத்தே அவ்வாறான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. லங்காபுவத் நேற்று அந்தச் செய்தியை தெரிவித்துள்ளது.

## மக்களின் குரலில் புலிகளின் பாடல்கள்!

இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிவரும் மக்களின் குரல் என்னும் நிகழ்ச்சியில் புலிகள் அமைப்பினருக்கு எதிரான செய்திகள் வெளியாகி வந்தமை தெரிந்ததே.

இப்போது புலிகள் அமைப்பினர் ஜனநாயக பாதையில் குதித்துள்ளதால் மக்களின் குரல் புலிகளுக்கு ஆதரவான பாடல்கள் ஒலிபரப்பாகின்றன.

நேற்று மலை 5.30 மணிக்கு மக்களின்குரலில் ஒலிபரப்பான அதர்மனின் சபை நாடகத்தில் பிரபாகரன் பங்குபற்றியதுடன், நாடகத்தின் பெயரும் தர்மனின் சபையில் என்று மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதுவரை நீங்கள் இந்த அரைப்பக்கத்தில் படித்தது காதுல பூ. தற்போதைய நடப்புக்களை எமது கற்பனையில் மாற்றிப் பார்த்தோம். அதன் விளைவுதான் அது.

## இலக்கிய நயம்

கலைஞர் கருணாநிதியின் குறளோவியத்திலிருந்து ஒரு சிறு துளி இங்கே.



அழகை அள்ளிப் பொழியும் இயற்கைக்காடு! அங்கே துள்ளித் திரியும் மான்கூட்டம்! தோகை விரித்து ஆடிடும் மயில்கள்! அதுகண்டு பொல்லாச் சிறகை அவிழ்த்துக் குதித்திடும் வான்கோழிகள்! இலவம் பஞ்சின் உருண்டைகள் போல் முயல்கள் தரையில் பறந்திடும் காட்சி! கிளைவிட்டுக் கிளைதாவிப் பாய்ந்திடும் குரங்குகட்கும் அந்தக் காட்டில் தனியாட்சி! மலைமுகட்டின் முகில்கள் உருகி இயற்கையின் அற்புதத்தால் நெய்யருவிகள் பாறைகளில் பெருக்கெடுக்கும் எழிலே எழில்!

அதனருகே அமர்ந்து பாடிடும் குயிலோ குயில்! அக்குரல் பயிலத் தவமிருக்கும் காகம்! அது இசைப்பதோ அபத்த ராகம்! அதை ரசிப்பதோ ஒரு வராகம்! இந்த வேடிக்கை பார்க்க அங்கு வாடிக்கையாக வட்டமிடும் பச்சைக்கிளி! நீலப்புறா!

அங்குள்ள பாறைகளில் ஒன்று தான் பாவையை யாரும் பார்த்து விடாமல் பாதுகாப்பு அளித்தது. ஆம்; பாவைதான் அவள் பெயர்! பாறை மறைவில் யாரைத் தேடி அவள் நிற்கின்றாள்; யாரைத்தான் தேடுவாள்?

இளங்கவிஞன் பூங்குன்றன் குறித்த நேரத்தில் வரவேண்டும் வராத காரணத்தால் தான் தவிக்கின்றாள். வழக்கமாகச் சந்திக்கும் காதற் களம்தான் அது!

அங்குள்ள மரம் செடி கொடிகள், மலைப்பாறைகள், அருவிப் பொழிவு, அணில், கிளி, புறா, குயில், மயில் அனைத்துக்கும் எழுத்தாற்றல் வாய்க்கப் பெற்றால் கம்பனையும் இளங்கோவையும் மிஞ்சும் காதற் காவியங்களைப் படைத்திருக்கும். அத்துணை இன்பரசக் கேளிக்கைகளை அந்தப் பாறைமறைவில்-பாவையும் பூங்குன்றனும் நடத்தியிருக்கின்றனர்.

உதயணன் மடிமீது வீணை போல் அவள்! ..... அவன் மீட்டத் தொடங்கியதும் இருபாலார் நரம்புகளும் அதிர்ந்து எழும்பும் காதல் நாதம்! இதுதானே அந்த வீணைக் கச்சேரியின் சிறப்பு!

நேரம் சிறிது கழிந்துபோனாலும் நிகழ்ச்சிக்குத் தவறாமல் அதோ இசைவாணன் வந்து விட்டான்! காத்திருந்த வீணை அவன் கையில் ஏறி மடியில் உட்கார்ந்து கொண்டது.

"பாவை! என்ன அப்படிப் பார்க்கிறாய்? காலம் சிறிது கடந்ததற்காகக் கடுங்கோபம் கொண்டாயோ என் கட்டாணிமுத்தே!"

"கொண்டது கோபந்தான் எனினும் உன்னைக் கண்டவுடன் என் தாபம் அதைத் துரத்திவிட்டது அத்தான்!"

"கொய்யாப்பழக் கன்னத்தில் குங்குமக்குழி படைத்தவளே! இதழ் இரண்டும் ஏனிப்படித் துடிக்கின்றன?"

"தெரியாதது போல் கேட்கின்றாயே! எத்தனை நாள் பட்டினியென்று எண்ணிப்பார்க்க விரல்கள் இல்லையோ உன் கையில்?"

"விரல்கள் தான் இந்த வீணையை மீட்டிக் கொண்டிருக்கின்றனவே!"

"அதனால் தான் அதிர்கின்றன என் இதழ்கள்!"

அதற்குமேல் பேச்சில்லை! "இச்" ஒலி மட்டும்தான் அந்த இயற்கைக் கட்டிலில் எதிரொலித்துக் கொண்டிருந்தது! ஓடிய மான்கள் நின்று பார்த்தன! பறந்த புள்ளினம் கிளைகளில் அமர்ந்து கவனித்தன! ஆடிய மயில் அசைவற்று நின்றது!

முத்தமழை பெய்து கொண்டேயிருந்தது! இனி இன்ப வெள்ளப் பெருக்குத்தான்! "அத்தான்" என்றாள்! "உம்" என்றான். "நான்கிதழின் நற்கலவை எப்படி?" என்றாள்.

"இன்பமே! இனிய மென்மை மொழி பேசுகின்ற உன்னுடைய சிறப்புக்குச் சிறப்பு சேர்ப்பது போல், உன் பற்களிடையே ஊறுகின்ற நீர் தேனாக மாறி- நீ பேசும் மொழியுடன் தேனும் பாலும் கலந்தது போன்ற சுவையை எனக்குத் தருகிறது."

என்றான்! தழுவினாள்! தழுவினான்! தென்றலோ அவர்கள் இருவரையும் தழுவித் தன் வெறியைத் தீர்த்துக் கொண்டது.

பாலொடு தேன் கலந்தற்றே பணி மொழி
வாலெயிறு ஊறிய நீர்

**அதிகாரம் 113 காதற் சிறப்புரைத்தல்**
**பாடல் 1121**
**பணிமொழி= மென்மையான மொழி, வால் = வெள்ளிய, எயிறு= பல்**

## நட்சத்திரம் ரசித்த ஜோக்ஸ்

தமிழ் திரையுலகின் இன்றைய கவர்ச்சிக் கதாநாயகி ஐஸ்வர்யா. அவர் தான் கேட்டு படித்து ரசித்த ஜோக்குகளை எமது தமிழக நிருபருக்கு சொன்னார். நீங்களும் கேளுங்கள்.

நர்ஸ்- இப்போது நீங்கள் எது வேண்டுமானாலும் சாப்பிடலாம். டாக்டர் 'சொல்லியிருக்கார். என்ன வேண்டும். கேளுங்கள்.
நோயாளி- அப்படியானால் சரி. ஒரு முத்தம் தருகிறாயா?

■

பெண்- என் கண்ணாடி உடைந்து விட்டது. என்னை முழுக்க பரிசோதிக்கப் போகிறீர்களா?
டாக்டர்- இல்லையில்லை. கண்களை மட்டும்தான்.

■

அவள்- என் மார்பையே பார்த்துக் கொண்டிருக்கிறாயே உன் பெயர் என்ன?
அவன்- மார்க்கண்டேயன்.

■

மற்றவன்- தலைமுடியைத் தொட்டதும் என் காதலி கோபித்துக் கொண்டாள்.
நண்பன்- தலைமுடியை மட்டும் தானே தொட்டாய். அதற்கேன் அவள் கோபிக்க வேண்டும்.
மற்றவன்- அது என் கையோடு வந்துவிட்டது.

■

பேரன்- உன் கடைசி ஆசை என்ன பாட்டி.
பாட்டி- டீ.வீ.யில் கிரிக்கட் மாட்சை பார்த்துக் கொண்டே சாக வேண்டும்.

■

அவள்- உன் கணவன் எப்படி அமைய வேண்டும்?
இவள்- ஒரு ஆண் என்னை மணந்து கொள்ள வேண்டும்.

■

"என் கணவர் நல்ல மணமுள்ளவர்"
"அப்படியா அவர் பெயர்?"
"வின்சென்ட்"

■

ஆசிரியர்- உன் பெயரைத் தமிழில் சொல்லு.
மாணவன்- பசுவிற்கு உடம்பு சரியில்லை.
ஆசிரியர்- புரியவில்லையே-இவ்வளவு நீளமான பேரா?
மாணவன்- அதாவது கெள சிக்.

■

அவன்- சென்றவாரம் தான் அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. இந்த வாரமும் இன்னொரு குழந்தை பிறந்திருக்கிறது.
மற்றவன்- அது எப்படி?
அவன்- அவனுக்குத்தான் இரண்டு மனைவிகள் ஆயிற்றே.

■

"செஸ்- செக்ஸ்- லைஃப் மூன்றிலும் ஒரு ஒற்றுமை உண்டு."
"அது என்ன ஒற்றுமை"
"மூன்றிலும் ராஜாவைவிட ராணிக்குத்தான் மவுசு அதிகம்"

■

"காப்பியில் சர்க்கரை போட்டு நீங்கள் நீங்கள் எந்தக் கையால் கலக்குவீர்கள்"
"வலக்கையால்தான்"
"வலது கையா— நான் ஸ்பூனால்தான் கலக்குவேன். கையை காப்பியில் விடமாட்டேன்.

■



## கவலையில்லாத நடிகை

ஹொலிவூட் நடிகைகள் எதையும் மறைப்பதில்லை. காதலையும் சரி, காமத்தையும் சரி வெளிப்படுத்திவிடுவார்கள்.

எல்லே என்னும் நடிகை சாதாரண நிலையில் இருந்து இன்று உச்சத்திற்கு வந்து கொண்டிருப்பவர்.

தனது புதிய காதலனோடு ஐஸ்கிறீம் சுவைத்தபடி வீதிக்கடை ஒன்றில் காணப்பட்டார்.

பல கண்கள் அவரைக் கவனித்தன. உள்ளாடையின் மேல் பொத்தான் அறுந்துவிட்டதையும் தான்.

எல்லே கவலைப்படவில்லை. ஒரு ஊசியால் அதை சரிசெய்துவிட்டு ஐஸ்கிறீம் சுவைப்பதில் ஆர்வம் காட்டினார்.

# பாவமே மகனாய்....

பிரம்மசர்மா என்றொருவன். அவனுக்குப்பாவ புண்ணியத்தைப் பற்றிய நினைப்பே கிடையாது. உண்பதும் உறங்குவதுமே வாழ்வென்று எண்ணுபவன். செருப்புத்தைப்பவர் இருவர், ஊர்க்கோடியில் இருந்தார்கள். அவர்களைத் தேடி ஒரு நாள் போனான். தன் காலளவு கொடுத்து, நல்ல செருப்பு தைக்கச் சொன்னான். அவர்களும் இருப்பதிலேயே உயர்ந்த தோலில் செருப்புத் தைத்தார்கள்.



பிரம்மசர்மா மீண்டும் போய்த் தைத்த செருப்பைப் போட்டுப் பார்த்தான். "சரியாக இருக்கிறது" என்று கூறியபடியே திரும்பி நடந்தான்.

"சாமி பணம் தராமல் போகிறீர்களே" என்று கூறியபடியே அவர்கள் பின்னால் வந்தார்கள்.

"இப்போது பணமில்லை. கடன் கணக்கில் வைத்துக் கொள்ளுங்கள். பிறகு தருகிறேன்." என்று கூறிக்கொண்டு பிரம்மசர்மா வந்துவிட்டான்.

அதற்குப்பிறகு அவர்கள் எப்போது கேட்டாலும், பிரம்மசர்மாவிடம் இருந்து இதே பதில்தான் கிடைக்கும். வறுமையில் வாடும் அவர்கள் சலித்துப்போய், "தைத்த கூலிதராவிட்டால் போகிறது...தோலுக்கான விலையையாவது தாருங்கள்" என்று கெஞ்சினார்கள். பிரம்மசர்மாவும் ஆகட்டும். பிறகு தருகிறேன், தருகிறேன் என்றே காலத்தைக் கடத்தி விட்டான். கடைசிவரை அந்தக் கடனைத் தீர்க்கவேயில்ல. செருப்புத் தைப்பவர்கள் இறந்து கூடப் போனார்கள்.

தொல்லை கொடுப்பவர்கள் ஒரு வழியாகத் தொலைந்து போனார்கள் என்று பிரம்மசர்மா சந்தோஷப்பட்டான்.

காலன் யாரைத்தான் விட்டு வைப்பான்? ஒரு நாள் பிரம்மசர்மாவின் ஆயுளும் முடிந்தது. எமதூதர்கள் அவனுயிரைக் கொண்டுபோகும் போது, முன்னமே இறந்து, அங்கிருந்த செருப்புத் தைப்பவர்கள் பிரமசர்மாவை வழிமறித்தார்கள். செருப்புக்குக் கடன் வைத்த பணத்தைக் கொடுத்து விட்டுப்போ. இல்லையென்றால் அடுத்த ஜென்மத்தில் உனக்கு மகனாகப் பிறந்து அந்தக் கடனைத் தீர்த்துக் கொள்வோம் என்று மிரட்டினார்கள். (இது துலாகாவேரி புராணத்தில் உள்ள கதை)

ஒருவன் கற்ற கல்வியைப் போலவே, கடனும் எத்தனை பிரவியெடுத்தாலும் அடைக்கும் வரை தொடர்ந்து வரும். ஒருவரிடம் கடன் வாங்கித் திருப்பிச் செலுத்தாவிட்டால் அடுத்த பிறவியில் அவன் மகனாகப் பிறந்து கடனை வசூலித்து விடுவான் என்கிறது இந்து மதம்.

உயிரைக் கொடுத்து, பணத்தைக் கொட்டி வளர்த்த மகன், வளர்ந்த பிறகு ஒன்றுக்கும் உதவாமல் பிரிந்து போய் விடுகிறான் என்றால், அந்தப் பெற்றோர் செலவழித்த பணமும், உழைப்பும் போன ஜென்மத்துக்கடனை அடைத்ததாகத்தானே பொருள்.

(நல்ல புதல்வர்களை, இந்தக் கடன்காரப் பட்டியலில் சேர்க்க வேண்டாம்)

## ஆன்மீகம்

# துயரத்தின் மத்தியிலும் அசையாத விசுவாசம்

மனிதன் தன் வாழ்வில், நன்மைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். எல்லாம் நலமாய் நடக்க வேண்டும். சுகங்கள்தான் வேண்டும். துக்கங்கள் வேண்டாம் என எண்ணுகிறான். வரிசையாக நன்மைகள் நடந்து, இடையிலே ஒரு துயரம் வந்தால் கூட அதை அவனால் ஜீரணிக்க இயலவில்லை. இறைவனைத் தூற்றத் தொடங்குகிறான். "இறைவன் என்னை சோதிக்கிறான். கடவுளுக்குக்கூட கண் இல்லை" இப்படி......

ஆனால் எத்தனை துயரங்கள் அடுக்கடுக்காய் வந்தபோதும் இறைவன் மீது வைத்திருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும் முடிவில் நன்மையை விளைவிக்கும் என்கிறது கிறிஸ்தவம்.

யோபு என்றொரு பக்தன் மிகவும் உத்தமன். செல்வந்தன். இவனுக்கு அடுக்கடுக்காய்த் துயரங்கள் வந்தன. இவனது ஏழாயிரம் ஆடுகள், மூவாயிரம் ஒட்டகங்கள், ஐநூறு ஏர்மாடுகள், ஐநூறு கழுதைகள் ஆகிய மிருக ஜீவன்கள் வரிசையாய் மாண்டன. இவனது ஏழு மகன்களும், மூன்று மகள்களும் பெரும் சூறாவளிக் காற்றில் இடிபாடுகளுக்கிடையே மடிந்து போனார்கள். எல்லா வற்றிற்கும் மேலாய் யோபுவின் உச்சந்தலை முதல் உள்ளங் கால்வரை கொடிய பருக்கள்வந்து வாதிட்டன. பகல் வேளையிலே, "இறைவா இரவு வரக்கூடாதா? நான் சற்று தூங்க மாட்டேனா?" என்றும் இரவு வேளையிலோ, "இந்தப் பருக்கள் தரும் வேதனையை இரவில் தாங்க இயலவில்லையே, விடியக் கூடாதா?" என்று இரவுக்கும் பகலுக்குமாய் ஏங்கித் தவித்தான். சுகத்திலும், துக்கத்திலும் பங்கேற்க வந்த அவனது மனைவி, இறைவனுக்குப் பயந்து நடந்த தனது கணவனுக்கு ஏற்பட்ட துயரங்களைத் தாங்க வொண்ணாமல் யோபுவை நோக்கிச் சொன்னாள், "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் இருக்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்" எத்தனை வேதனையான வார்த்தைகள். ஆனால் யோபு என்ன சொன்னான் தெரியுமா? "நீ பைத்தியக்காரி பேசுவது போலப் பேசுகிறாய். தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையும் பெற வேண்டாமோ?

மனைவி மட்டுமல்லாமல், யோபுவுக்கு ஆறுதல் கூறவந்த அவனது நண்பர்கள் எலிப்பாசு, பில்தாத், சோப்பார் அவனைப் பரிகசித்தனர். ஆனால் யோபு மனம் மாறவில்லை. அத்தனைத் துயரத்திற்கு மத்தியிலும் இறைவன் மீது வைத்த விசுவாசத்தில் அவன் நம்பிக்கை வைத்திருந்தான்.

இறுதியில் யோபுவிற்கு இறைவன் தரிசனம் தந்ததோடு, அவன் இழந்த எல்லாச் செல்வங்களையும் இரண்டு மடங்காகத் தந்தருளினார். அவனது மக்கள் செல்வங்களான ஏழு மகன்களையும், மூன்று மகள்களையும் திரும்பவும் அளித்தார். (யோபு 42:12,13)

ஆமாம் இதுதான் நியதி. முடிவு பரியந்தம் இறைவன் மீது சுகத்திலும் மட்டுமல்லாது துக்கத்திலும் விசுவாசத்தை வைத்திருந்தால் எல்லாச் சோதனைகளில் இருந்தும் விடுபட்டுச் சந்தோஷத்தைப் பெறலாம்.

# பண்பு சொல்லும் பழம்

பிறர் மனம் புண்படும் படி நடப்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போதும் விரும்புவதில்லை. இதை உலகுக்கு உணர்த்தும் வகையில் அவர்களது வாழ்க்கையில் ஒரு சிறு சம்பவம் நடந்தது.



நபிகள் நாயகம் அவர்கள் தனது நண்பர்கள் (ஸஹபாக்கள்) அனைவருடனும் அமர்ந்து பல்வேறு விஷயங்களைக் கலந்தாலோசிப்பது வழக்கம். அப்போதெல்லாம் யாராவது அவர்களுக்கு உணவுப் பொருள் ஏதேனும் கொண்டு வந்து தந்தால், அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்பார். ஒரு நாள் ஒரு பெண்மணி கொஞ்சம் திராட்சைப் பழங்களைக் கொண்டு வந்து பெருமானிடம் தந்தார். அதைப் பெற்றுக் கொண்ட நாயகம் அவர்கள் ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிட்டார்கள்.

பிறகு அந்தத் திராட்சைக் கொத்து முழுவதையும் அவர்கள் மட்டுமே சுவைத்துச் சாப்பிட்டு முடித்தார்கள். பழம் தந்த பெண்மணியும் மிகவும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றார். அதன் பிறகு ஒரு தோழர் எழுந்து, "நாயகமே, நற்குணத்தின் தாயகமே, தாங்கள் எப்போதும் எந்த உணவுப் பொருளாலும் எங்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுத்துத்தானே உண்பீர்கள். இந்தத் திராட்சைப் பழங்களை மட்டும் தாங்களே உண்டு விட்டீர்களே இதில் ஏதாவது விஷயம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

உடனே நாயகம் அவர்கள் புன்சிரிப்பு முகத்தில் தவழ, "அந்தத் திராட்சைக் குலையிலிருந்து ஒரு பழத்தை எடுத்து நான் சாப்பிட்டதும் அது மிகமிக புளிப்புச்சுவை உடையதாக இருப்பதை அறிந்தேன். அதை உங்களுக்கெல்லாம் பகிர்ந்து தந்தால், புளிப்புச் சுவையாக இருப்பதை உணர்ந்து கோபம் கொண்டுவிடுவீர்கள், அதனால் அந்தப் பெண்மணி மனம் புண்பட்டு விடுமே என்று அஞ்சித்தான் அவ்வளவையும் நானே சாப்பிட்டு விட்டேன். அந்தப் பெண்மணியும் மகிழ்ச்சியுடன் சென்றார்" என்று தெரிவித்தார்கள்.

# உத்தரவாதம் கொடுத்தார்கள் உற்சாகத்தோடு வந்தார்கள்!



இந்திய அணி வருமா என்றொரு சந்தேகம் ஆரம்பத்தில் நிலவியது.

இரு அரசியல் தலைவர்கள் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டதும் புலிகளின் அச்சுறுத்தலும் பாதுகாப்புப் பிரச்சனையை உருவாக்குமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

நூறு சதவீதமான பாதுகாப்பு உத்தர வாதம் உண்டு என்று கூறப்பட்ட பின்னரே இந்திய அணி வரச் சம்மதித்தது. வந்தும் விட்டது. போட்டிகள் ஆரம்பமாகி களை கட்டுகின்றன.

வழக்கம் போல் இல்லாமல் இந்திய அணி இப்போது சுறுசுறுப்பாகி இருக்கிறது.

முன்னர் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங் களின் முன்பாக பயிற்சி முகாம்கள் நடப்பதில்லை. புறப்படுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் பம்பாயில் அல்லது டில்லியில் கூடிப் பேசுவார்கள். தைக்க வேண்டிய உடைகள் அளவெடுக்கப்படும். பாஸ்போட் விசயங்கள் கவனிக்கப்படும். பிறகென்ன புறப்பாடுதான்.

இப்போது கிரிக்கெட் அணிக்கு வடேகர் மனேஜர் ஆன பின்னர் கண்டிப்புக்கள் கூடியுள்ளன.

சென்னையில் இரண்டுவாரம் முகாம் போட்டு அணியினர் அனைவரும் பயிற்சி செய்தனர். சீனியர்-ஜுனியர் என்ற பேதம் இல்லாமல் சகல வீரர்களும் பயிற்சிக்கு வரவேண்டும் என்று உத்தரவு வேறு.

காலை 7மணிமுதல் 10 மணிவரை. பின் மீண்டும் பிற்பகல் 3 மணிக்கு துவங்கி 6 மணிவரை என்று கடும் பயிற்சி.

இத்தனைக்கும் மேலாக இலங்கை செல்லும் இந்திய வீரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா பத்துலட்சம் ரூபாய்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய அணியினர் சிலர் பற்றி. காதில் விழுந்த சுவாரசியமான செய்திகள்.

'காதல் நாயகன்' வினோத் காம்ளிக்கு புனேயில் ஒரு காதலி உண்டு. அவரது பெயர் நியோலா லூயிஸ். எங்கிருந்தாலும் அவரோடு போனில் பேசாமல் இருக்கமாட்டார்.

அஸாருதீன் தான் தங்கியுள்ள அறையில் தினசரி தொழுகை நடத்தத் தவறுவதில்லை. நாம் நிற்கும்போது குரான் காலடியில் கூட வைக்கக் கூடாது என்று சொல்வாராம். அத்தனை மத நம்பிக்கை.

கபில்தேவ் ஆஞ்சநேயர் பக்தர். சென்னையில் தங்கியிருந்த போது அவரது அறையில் அனுமார் படம் இருந்ததாம்.



மறுக்கப்பட்டதேன்?

இலங்கைக் கிரிக்கெட் அணியில் இடம்பெற்றுள்ள போதும் முத்தையா முரளிதரனுக்கு இம்முறை போதிய வாய்ப்பு வழங்கப்படவில்லை. இது தமிழ் பேசும் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் கசப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

## யாருடைய பந்து?

கிரிக்கெட் போட்டி எந்த நாட்டில் நடக்கிறதோ அந்த நாடுதான் பயன்படுத்தும் பந்தை தேர்ந்தெடுப்பது வழக்கம்.

இதன்படி இலங்கை கிரிக்கெட் போர்டு பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட பந்தைப் பயன்படுத்த விருப்பம் தெரிவித்தது.

ஆனால் இந்திய அணி பாகிஸ்தான் பந்து விரைவில் உருக்குலைந்துவிடும் என்று கூறியது. அதனை இலங்கைக்கும் தெரிவித்தது.

இலங்கை அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்போது பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட பந்தைக் கொண்டே இரு அணிகளும் விளையாடுகின்றன.

இந்திய அணி முன்னர் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பந்துகளையே பயன்படுத்தி வந்தது. இப்போது இந்தியாவில் தயாராகும் 'எஸ்.ஜி.' பந்துகளையே பயன்படுத்துகிறது.

எஸ்.ஜி.பந்தைத் தயாரிக்கும் நிறுவனம் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சுனில் கவாஸ்கருக்கு சொந்தமானது. அவரது பெயரின் சுருக்கம்தான் எஸ்.ஜி. என்பது.

ஒரு பந்தின் விலை இந்தியப் பெறுமதியில் 250 ரூபாய்.

சிம்பாப்வே, இங்கிலாந்து அணிகளோடு விளையாடியபோது எஸ்.ஜீ பந்துகளையே இந்திய அணி பயன்படுத்தியது.

## ஸ்போர்ட்ஸ்

# அசாருதீன்-அர்ஜுன ரணதுங்க ஒற்றுமையும்-வேற்றுமையும்

இலங்கை கிரிக்கெட் அணிக் காப்டன் அர்ஜுன ரணதுங்கவுக்கும்- இந்திய அணித்தலைவர் அசாருதீனுக்கும் இடையே ஒற்றுமைகள் சில உண்டு.

இருவருமே பிறந்தது 1963இல். இருவருக்கும் முதல் டெஸ்ட் அனுபவம் இங்கிலாந்துக்கு எதிராக விளையாடியதுதான்.

டெஸ்ட் போட்டிகளில் அசார் மூன்று முறை நொட்அவுட். ரணதுங்கவும் மூன்று முறை நொட் அவுட்.

அனுபவம் யாருக்கு அதிகம் என்று பார்க்கும்போது அசாருதீன் முன்னே வருகிறார்.

அசார் விளையாடிய டெஸ்டுகள் 55. ரணதுங்கவின் கணக்கு 39. அசார் எடுத்த ரண்கள் 3,553. ரணதுங்க 2,201. அசாரின் அதிகபட்ச ரன் ரேட் 199. ரணதுங்கவுக்கு 135.

அசார் போட்ட செஞ்சரிகள் மொத்தம் 12.

ரணதுங்க போட்ட செஞ்சரி 3.

அசார் போட்ட 50கள் 11. அந்த விடயத்தில் ரணதுங்க முந்துகிறார். அவர் போட்ட அரைச் சதங்கள் 15.

மொத்தம் 21 டெஸ்டுகளுக்கு (5 வெற்றி, 7 தோல்வி 9 வெற்றி தோல்வியில்லை) காப்டனாக இருந்தவர் அசார்.

ரணதுங்க 12 டெஸ்ட் போட்டிகளில் (2 வெற்றி, 3 தோல்வி, 7 வெற்றி தோல்வியில்லை) காப்டனாக இருந்தவர் ரணதுங்க.

இலங்கையில் இந்திய அணி எடுத்த அதிகபட்ச ரன் 325-5 வி. டிக்ளேர். 1985இல் கண்டியில் நடந்த டெஸ்டின் போது இந்தியா எடுத்த ரன் அது.

கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ரன்களை இந்தியா எடுத்ததுதான் குறைந்தபட்ச ரன்களாகும்.

இம்முறை நடந்து கொண்டிருக்கும் இலங்கை -இந்திய அணிகளுக்கிடையிலான போட்டிகளின் கணக்குகள் மேல் உள்ள விபரங்களில் சேர்க்கப்படவில்லை.



## எதிர்பார்ப்பு பொய்த்தது

இலங்கையில் கபில்தேவ் சாதனை புரிவார் என்று எதிர் பார்க்கப்பட்டது. சாதனையை எட்ட பதினொரு விக்கெட்டுக்கள் எடுக்கவேண்டிய நிலையில் கபில் இலங்கை வந்தார். எதிர்பாக்கப் பட்டதைப்போல இலங்கை மண்ணில் அவர் சாதனை நிகழ்த் துவது சாத்தியமில்லை என்றாகி விட்டது.

RENO AUDIO VIDEO CENTRE
நீங்கள் விரும்பும் பழைய, புதிய தமிழ், சிங்கள, ஹிந்தி ஆங்கிலப் பாடல்களை 'கொம்பக்ற் டிஸ்க்' (Compact Disc) மூலம் மிகவும் நுட்பமான முறையில் ஒலிப்பதிவு செய்துகொள்ளவும், ஒலிப்பதிவு செய்யப்பட்ட புதிய, பழைய அனைத்து திரைப்படப் பாடல் கசட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்
கொட்டாஞ்சேனையில் சிறந்த ஒரே இடம்
இன்றே நாடுங்கள்
RENO AUDIO VIDEO CENTRE
81 SHOP No. 3, BLOEMENDHAL FLATS,
GEORGE R. DE SILVA MAWATHA,
KOTAHENA, COLOMBO-13.
TEL: 446765








## ஹொலிவூட் நியூஸ்

ஒரு படத்தின் கதாநாயகனுக்கோ, கதாநாயகிக்கோ படப்பிடிப்பில் ஏதேனும் விபத்து ஏற்பட்டால் அந்தப் படம் வெற்றியடையும் என்பது தமிழ்த்திரையுலக சென்டிமென்ட்.

இப்போது இந்த சென்டிமென்ட் விசயம் ஹொலிவூட்டிலும் நடந்துள்ளது. மலையோரங்களிலும், பள்ளத்தாக்குகளிலும் நடைபெற்ற கிளிஃப் ஹாங்கர் படப்பிடிப்பின்போது காலை முறித்துக் கொண்டார் ஹொலிவூட்டின் பிரபல நடிகர் சில்வெஸ்ரர் ஸ்ரலோன். 2093 திரையரங்குகளில் திரையிடப்பட்ட இப்படத்தின் முதல் வார வசூல் 56 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.

ஸ்ரலோன் அடுத்ததாக நடிக்கும் படம் ஃபெயா கேம். ஆக்சன் படங்களில் இருந்து ஸ்ரலோனுக்கு சற்று மாறுதலான படமாக இது அமையுமாம்.



### அந்த நேரத்தில் மட்டும்





## கோழி சூப்

சூப் வகைகளில் கோழி(கால்) சூப் சுவையானது. இதேபோல வேறு சூப்களும் சுவையாகத் தயாரிக்கப்படலாம். உ-ம் ஆட்டுக்கால் சூப். முறை ஒன்றுதான் ஆனால் சுவையும் பலனும் வேறுபடும்.

கோழிக்கால் சூப் செய்யும் முறையினைப் பார்ப்போம். பொதுவாக எந்த இறைச்சி வகை கொண்டு சூப் தயாரித்தாலும்; அதற்கு இறைச்சி-எலும்புச் கொதி சாறு தயாரிப்பது நல்லது. இதனைத் தயாரித்து குளிர் சாதன பெட்டியினுள் ஒருவாரம் வரைபழுதடையாமல் வைத்துக் கொள்ளலாம்.

முதலில் கொதிச்சாறு வடிக்கும் முறையினைப் பார்ப்போம்.

தேவையானவை:
கோழி எலும்புகள் (கால் மற்றும் மார்பு முன் முதலியவை) 1 கிலோ
கோழி இறைச்சி (மார்புப் பகுதி எலும்பிலிருந்து பிரிக்கப்பட்டவை) 3 பிடி.
பெரிய கரட் - 1
பம்பாய் வெங்காயம் - 2
மிளகு 1 தேக்கரண்டி.
கறிவேப்பிலை அளவாக
உப்பு 2 தேக்கரண்டி

செய்முறை:
எலும்புத் துண்டுகளை நன்றாகக் கழுவி அளவாக வெட்டிக்கொள்ளவும். கரட், வெங்காயம் ஆகியவற்றையும் துண்டுகளாக வெட்டியபின் பெரிய சோஸ்பானில் மூடக்கூடிய அளவு தண்ணீர் விடவும். இதனை அளவான சூட்டில் மூன்று அல்லது நான்கு மணிநேரம் கொதிக்க விடவும். அடிக்கடி கிளறிவிடவும். பின்னர் வடிகட்டி சாறை மட்டும் எடுத்து ஆறவிடவும். நன்றாகக் சூடு ஆறியபின் இதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கொள்ளலாம்.

இனி சூப் செய்யும் முறையைப் பார்ப்போம்.

தேவையானவை:
கோழிக்கால் எலும்பு, தொடை அல்லது மார்பு முன் 1 கிலோ
தாவர எண்ணெய் 1 மேசைக்கரண்டி
பம்பாய் வெங்காயம் 1
தக்காளிப்பழம் 2 அல்லது மூன்று
மிளகு 1 தேக்கரண்டி
சாதாரண மைதா மா 1 மேசைக்கரண்டி
கோழி வடிசாறு 6 கோப்பை
அவரை விதை அல்லது பச்சைப்பட்டாணி - 1 கோப்பை (நீரில் ஊறவிட்டது)
கறிவேப்பிலை அளவாக

செய்முறை:
கோழியின் பாகங்களை நன்றாகக் கழுவி ஒரு மேசைக்கரண்டி உப்புத்தூளை அவற்றின் மீது தெளித்து பிரட்டி விடவும். ஒருபெரிய சோஸ்பானில் எண்ணெயை விட்டு அடுப்பில் வைத்து கோழியின் பாகங்களைப் போட்டு வதக்கவும். எல்லாப் பாகமும் பிறவுன் வர்ணமாகும் வரை வதக்கிய பின் வேறோர் பாத்திரத்தில் அதனை எடுக்கவும். அடுப்பிலுள்ள சோஸ்பானில் வெங்காயத்தை வெட்டிப் போடவும். தக்காளியையும் துண்டுகளாக வெட்டிப்போடவும். 5 நிமிடங்களின் பின்னர் மிளகையும் சிறிதாக நசுக்கித் தூவவும். தக்காளிக்கலவையின் மீது மாவைத் தூவிக்கிளறவும். மேலும் 2 நிமிடங்கள் வரை கிளறவும்.

இப்பொழுது ஏற்கனவே தயாரித்த இறைச்சி வடி சாறை சிறிதுசிறிதாக இக்கலவையின் மீது ஊற்றிக் கிளறவும்.

இப்பொழுது முன்னர் வதக்கிய கோழி இறைச்சித் சேர்வைகளைப் நீரப்பிடிப் புடன் சேர்த்து அடுப்பிலுள்ள கலவையுடன் கலக்கவும். மீதமுள்ள உப்பையும் போட்டு அடுப்பின் உஷ்ண அளவைக்குறைத்து 15 முதல் 20 நிமிடம் வரை அடுப்பில் வைத்து அடிக்கடி கிளறிவிடவும்.

இறுதியாக அடுப்பிலிருந்து இறக்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் அவரை விதைகளை அல்லது பச்சைப் பட்டாணியை கலவையில் போட வேண்டும்.

தேவையானால் உருசிக்கு ஏற்றவாறு மிளகுதூள், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். இந்த சூப் ஆறு பேருக்குப் போதுமானது.





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, கெக்கராவ, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.